சித்தாந்த வித்தகர், புலவர் மாமணி

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

அவர்கள்

மணி விழா



சிறப்பு மலர்

12-9-1981

வெளியீட்டாளர் :

சைவ சித்தாந்த மகா சமாசம்,

3 ஆடம் தெரு, மயிலாப்பூர்,

சென்னை-600 004.

உ
சிவமயம்

பொருளடக்கம்

உ

சிவமயம்

பதிப்புரை

சித்தாந்த வித்தகர் திரு. முரு.பழ. இரத்தினம்செட்டியார் அவர்கள் சமாசத்திற்கு ஏறக்குறைய 25 ஆண்டுகளாக நெருங்கிய தொடர்புடையவர்கள். அதற்கு முன்னர் சமாசச் செயலாளராயிருந்த திரு. கா. இராமநாதன் செட்டியாருடன் மலேசியாவில் நீண்ட காலத் தொடர்புள்ளவர்கள். எனவே சமாசச்சார்பு அவருக்குமிகவும் தொன்மையாகவே இறையருளால் வாய்த்திருந்தது.

இருப்பினும் அவர் சித்தாந்தத்தில் கட்டுரைகள் எழுதியதிலிருந்தும் அவைகளால் ஏற்பட்ட கருத்துத் தெளிவிலிருந்துமே சமய உலகு அவரை நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. மலேசியாவிலிருந்து தமிழகம் வரும்போதெல்லாம் தெரிந்தால் சமாசக் கூட்டங்களில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கும் பழக்கமும் இதனுல் ஏற்பட்டது. பின்னர் கட்டளைச் சொற்பொழிவுகளையாற்றும் பணியையும் மேற்கொண்டு சமாசவாயிலாய்ப் பல தொடர் சொற்பொழிவுகளையும் அவர் ஆற்றியுள்ளார். அவர் பெருமை அறிந்தே அண்மையில் சமாசத்தினர் இலங்கை தெல்லிப்பழையில் நிகழ்ந்த சமாசப் பவழவிழாவுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பையும் அளித்தனர். அப் பொறுப்பையும் யாவரும் ஒரு சேரமெச்சுமாறு சிறந்த முறையில் ஆற்றினுர்.

இந்நிலையில் அவருக்கு அறுபானுண்டு நிறைவு மணிவிழா வருவது பற்றிக் கேள்வியுற்றதும் இம்மலர் வெளியீட்டுப் பணியைச் சமாசம் ஏற்றுக்கொண்டது. அவர் புகழ் என்றும் நின்று நிலவவும் இன்னும் அவர் சமயப்பணிகள் சிறந்து மிக்கோங்கவும் இம்மலர் பயன்படும் என்பது ஒருதலை.

மணிவிழாத் தம்பதியர் எல்லா நன்னலங்களும் துய்த்து இன்புற்றுச் சமயப்பணிகளாற்றி இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ பல்லாண்டென்னும் பதங்கடந்தான் திருவடிகளை வணங்கி வாழ்த்தி அமைகின்ருேம்.

மேலும் இம்மலர் நன்கினிது மணக்க நறுநாற்ற மூட்டிய பெருமை வாழ்த்துரை வழங்கிய ஆன்ருேர்களையும் கட்டுரைகள் வழங்கிய பெருமக்களையும் சார்ந்தது. அவர்களுக்குச் சமாசத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

''முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுல் முடியும்'' ஆகவே அதற்கு வாய்ப்பாக விளம்பரங்கள் தந்துதவிய பெரியோர்கள் யாவருக்கும் எங்கள் நன்றி உரியது.

மிகச் சுருங்கிய காலத்தில் இம்மலரை மணக்கச் செய்த பெருமை நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர் நம் சமாச ஆயுள் உறுப்பினர் திரு. நாரா. நாச்சியப்பன் அவர்களையே சாரும். அவர்களுக்கும் சமாசத்தின் நன்றி உரியதாகுக.

இவ்வாறு மலர் ஒன்று வெளியிட அடிப்படைத் தூண்டுகோலாயிருந்து அவ்வப்போது ஊக்கப்படுத்திய பேரன்பர் திரு. செட்டியார் அவர்களின் தலைசிறந்த மாணவர் திரு. த. வைத்தியநாதன் அவர்களே ஆவர். அவருக்கும் மற்றும் பல்லாற்ருனும் உதவிய அருளுள்ளம் கொண்டோர் யாவருக்கும் சமாசத்தின் நன்றி உரியது.

வாழ்க உலகெலாம்

இன்னணம்

பெ. திருஞானசம்பந்தன் எம்.ஏ., எல்.டி.
தலைவர்

அம்பை இரா. சங்கரன்
செயலாளர்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்த வித்தகர்

திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார்

அவர்கள்

அறுபானுண்டு நிறைவு மணிவிழா

வாழ்த்திதழ்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

முந்தையோர் தவத்தாலே மூதறிஞர் பழநியப்பர் நாக அம்மை
தந்தநல **இரத்தினமே!** தரணிக்கோர் புலவர்களின் மணியே! உன்தன்
சிந்தைவிருப் புறும்வண்ணம் மீனுட்சி ஆச்சியொடு அறமே ஆற்றி
சந்ததமும் சிவன்கழலே சார்வாகக் கொண்டுறையும் சான்ருேய்! வாழ்க

கலைகள்பல கற்றுநல பட்டங்கள் கொண்டுமினி கருத்தாய் மேலாம்
அலகில்பல பணிகளையும் ஆன்ருேர்கள் மெச்சவுமே அடைந்தார்பல்லோர்
உலகினிலே வாழ்வதற்கு ஓதுமொரு பணிக்காக ஓத நீர்போய்
மலையகநா டேசென்று மாண்பாகப் பணியோடு சமயம் கற்ருய்.

விருப்பமுறு பணியெனவே வேண்டுவது பலவுண்டு அவற்றை விட்டு
அருப்பமுறு நம்சைவ சித்தாந்தத் தமுதினையே அள்ளி உண்டு
திருப்பமுறு சிருர்களையும் சைவத்தின் பால்ஆக்கும் செம்மை யோய்! நல்
பருப்பதமே நிகராகும் பாவலனே! பகர்நின்றன் பணிகள் வாழ்க.

தமிழனெனு மினமுண்டு தனிக்குணமு மொன்றுண்டென் றுரைத்தான் மேலாம்
இமிழ்திரைசூழ் வையத்தார் ஏற்றமுடன் நமைமதிக்க எழிலார் நாவன்
அமிழ்தினியல் மொழியோடு அணியாரும் சித்தாந்தத் தேனை அள்ளி
கமமுறவே வழங்கினையால் கரதலத்தின் ஆமலகக் கனியே என்ன.

ஏறுபோல் பீடுநடை எழிலாரும் இன்சொல்லே இயன்ற செவ்வாய்
ஊறுநல சித்தாந்தத் தேனினையே உலகினர்க்கு அளிக்கும் வள்ளல்
சாறுஎன நம்சைவ சித்தாந்தம் தனைக்கூறும் எழுதும் ஆசான்
பேறுஎன சைவர்க்கோர் பிறங்கல்என வந்துற்ற மணிநீ தானே.

இலங்கையினில் எழிலாரும் மலையகத்தில் இயல்போங்கும்தமிழர்நாட்டில்
அலகில்லா சித்தாந்த நெறியதனை அணுகாரும் அணுகிக் கேட்க
உலகிலிவன் ஒருவனே எளிமையாய் உரைப்பதற்கே என்னும் வண்ணம்
பலஉவமை சாற்றுநல பண்பாரும் சொற்செல்வ! பண்ப! வாழ்க

குன்றவனின் செந்தமிழ்ச் செம் மல்லுடனே அருள்நெறியின் செல்வ! மேலாய்
என்றுமே பலர்போற்றும் எழிலாரும் புலவர்களின் மணியே! நன்கு
துன்று நல புகழாளன் இராமநா தப்பெரியோன் சூட்டு பட்டம்
நன்றுறுய சித்தாந்த வித்தகனே! வித்தியாரத்ன! வாழ்க.

ஆறுபதின் ஆண்டுநிறை வுற்றவிழா அன்பர்பலர் கண்டே மேலாய்
ஆறுசடை யுற்றபிரான் அருளினையே அன்பாக வேண்டி நின்றோர்
ஆறுநல சித்தாந்த நெறியெனவே அவனிக்கே அறையும் அண்ணல்
ஆறுறு பத்து முறழ் ஆண்டுகளைப் பெற்றுநல அன்பாய் வாழ்க.

முருகழரத் தினம்செட்டி யாரென்ன தானென்ன நிற்போய் வாழ்க
முருகொடுநின் பணிகள்பல பாமரர்க்கும் பகிர்ந்திட்டாய் பண்பாய் வாழ்க
முருகாரும் நம்சைவ சித்தாந்த சமாசத்தின் முன்பே! வாழ்க
முருகனெனம் முன்னவனி னருள்பெற்று மூதண்டத் தென்றும் வாழ்க.

பிள்ளையார்பட்டி
12-9-81

இன்னணம்
சைவசித்தாந்த மகாசமாசத்தினோம்

பாடலியற்றியோர்: சமாசச்செயலர் வித்துவான் அம்பை சங்கரன்

• • •

வாழ்த்துரை

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

நமது சமயம் சைவ நெறி. இது வளர்ந்த ஒரு முழுமையான நெறி, வினுக்களுக் கெல்லாம் விடை கண்டு முடிந்த முடிபாக விளங்கும் பெரு நெறி. ''இந்து சமயம்'' என்ற முடிச்சுக்குள் சைவம் முழுமையாக இணைக்கப்பட்ட தால் சித்தாந்தச் செந்நெறியின் தெளிவு, இன்று பலருக்கு இல்லை. இங்ஙனம் சித்தாந்தச் செந்நெறியின் பெருமையை அறியாதவர்க்கு அறிவிக்கும் பேராசிரியராக, சித்தாந்த வித்தகர் திருவாளர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் விளங்குகிறுர்கள். திருவாளர் செட்டியார் அவர்கள் சித்தாந்த சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் ஆழ்ந்த பயிற்சியும் அனுபவமும் உடையவர்கள் என்பதை அவரியற்றிய ''தடைகளும் விடைகளும்'' என்ற நூல் விளக்கும்.

அண்மையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டில் அவர் ஆற்றிய தலைமையுரை, அவருடைய சித்தாந்தச் செந்நெறிப் பற்றினை மட்டுமன்றி, சமுதாய நல ஆர்வத்தையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. வேதத்தை, ஆகமத்தை நமது செட்டியார் அவர்கள் மறுத்திலரேனும் திருமுறைகள் தாம் நம்முடைய சமயத்திற்கு முதலும், அடிப்படையுமான ஆதார நூல்கள் என்றும், இவைகளோடு வேத, ஆகமங்கள் முரணுகாதிருக்குமானுல் ஏற்கலாம் என்றும் பேசியிருப்பது செழுந்தமிழ் வழக்கிற்கு அரண் செய்வதாக அமைந்திருக்கிறது. மேலும், ''சைவத்திற்குச் சாதி இல்லை!'' என்று கூறியிருப்பது இன்று சைவத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண மிகுதியும் துணை செய்யும்.

சித்தாந்த வித்தகர் செட்டியார் அவர்கள் மணிவிழாக் காண்பது மகிழ்ச்சியைத் தருகிறது. செட்டியார் அவர்கள் மணிவிழாப் பொலிவுடன் அம்மையப்பன் திருவருளால் எல்லா நன்மைகளும் பெற்று இனிதே வாழ்க!

உ
ஆசான் துணை

பண்டித வித்துவான்
மி. பொன். இராமநாதஞ் செட்டியார்,

தலைவர் திரு. வி. க. இலக்கிய மன்றம்.
சந்திரசேகரர் திருப்பணி மன்றம்,
வண்ணை, சென்னை

திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார்

அவர்களுக்கு அளித்த

மணிவிழா வாழ்த்துப்பா

(நேரிசையாசிரியம்)

வாழிபல் லாண்டே வாழிபல் லாண்டே
ஊழி பலவா வாழிபல் லாண்டே

நலமிக வமைந்த நாட்டுக் கோட்டை
வலமிகு செட்டிமார் வகுப்பினுள் தோன்றிய

பண்பமை பழனியப் பருக்கும் பாங்குறு
நண்பமை திருவார் நாகம் மைக்கும்

தவத்திரு மகனாய்ச் சான்றோ ரெல்லாம்
உவப்புறத் தோன்றிய உயர்குணச் செம்மால்!

'இத்திரு நம்பியை ஈன்றிட இவன்தாய்
எத்தவஞ் செய்தனள்' என்றே இவணுளோர்

போற்றிப் புகழ்ந்திடும் பொருவறு நலத்தோய்!
கூற்றை யுதைத்தோன் குரைகழல் போற்றுநல்
ஏற்றம் பெற்றோய்! எழில்மிகு செல்வ!

வளர்பொரு ளீட்டும் வணிக குலத்தில்
உளமிகத் தோன்றியும், உயர்பொருள் கல்வியே

செல்வ மன்றெனத் தெளிந்துமெய்க் கல்வியைச்
சொல்வித் தகமுறத் துகளறப் பயின்றோய்!

சைவசித் தாந்த சாத்திரத் தெளிவை
ஐயமொன் றின்றி யாவரு முணரக்

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழியும் விறலுடை யண்ணால்!

கற்றதன் பயனே கற்ற வண்ணம்
நிற்ற லாமென நெறிமையின் உணர்த்துவோய்!

'**அருள்நெறிச் செல்வர்**' நல் லறிஞர் போற்றிடும்
'**புலவர் மணி**' பெரும் புகழ் '**சித் தாந்த**
வித்தகர்' '**வித்யா ரத்னா**' வியன் புலச்
'**செந்தமிழ்ச் செம்மல்**' என்னும் சிறப்புறு

பட்டப் பெயர்களைப் பாங்குறப் பெற்றாய்!
மாநிலம் புகழும் மணிவிழாத் தலைவ!
நீயே,

அறுபதின் மேலும் அளவில வாண்டுகள்
நிறைவுறப் பெற்றே நெடுநீ ருலகில்

மேதகவுறுமீ னாட்சி ஆச்சியொடும்
நோயறு வாழ்வும் குறைவறு செல்வமும்

சேயரு மாகச் சிறந்து
ஊழி பலவா வாழிபல் லாண்டே.

உ

சிவாய நம

புலவர் மணி 'சித்தாந்த வித்தகர்'

உயர்திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் - மீனாட்சி ஆச்சி

மணிவிழா-வாழ்த்து மலர்

S. தங்கையா பிள்ளை

(கவிஞர்-இசைக்கலைஞர்)

உரிமையாளர் : சிவதிருமலை பதிப்பகம், சென்னை.

56, சீர்காழி முதலி தெரு, சென்னை-2

சைவநெறி பிறழாமல் சாத்திரங்கள் பலகற்று
தெய்வவழி பாட்டினிலே சிறந்தநெறி சைவமென்று
உய்வகையை உலகோர்க்கு உணர்த்திவரும் உத்தமராம்
பையரவைப் பூணுகின்ற பரமனருள் ரத்தினமே!

(இ)ரத்தினமாம் செட்டியார் இனியதமிழ் உரைகேட்க
இத்தினத்தில் அடியேற்கு இறைவனருள் கூட்டிவைக்க
வைத்தியனு தன்துணையாய் வழிவகுத்தார் இன்புற்றேன்!
பத்தியுடன் பணிந்துநின்று பல்லாண்டு வாழ்த்துகின்றேன்!

ஆறுபத்து நிறைவாண்டு அன்புரத்னம் செட்டியார்க்கு
நீறுபூத்த நெற்றியுளோர் நீங்காத அன்பருடன்
நூறுபத்து ஆண்டுவாழ நுவல்கின்ற வாழ்த்துரைக்கும்
பேறுபெற்ற பெருமைஎண்ணிப் பெருமிதமே கொண்டுநின்றேன்.

நெய்யாக தேனுக நிகரில்லாச் சிவம்பேசும்
ஐயாவாம் மெய்யப்பச் செட்டியார்க்கு அவனியிலே
பொய்யாத மொழிக்கன்று பொருந்தியநல் வாசுகிபோல்
மெய்யாக மீனாட்சி ஆச்சியவள் அமைந்தனளே!


பூமாலை சூட்டிவிட்டால் பொலபொலென சிலகணத்தில்
தாமாக உதிர்ந்துவிடும் தனித்துநிற்கும் நார்தானும்
நாமாகக் கூடிநின்று நற்கவிகள் அன்பொடுசேர்
பாமாலை சூட்டிவிட்டால் பல்லாண்டு வாழ்ந்திடுவார்!

கற்றுரைக் கலைஞர்தமை கற்புடைய நல்லவரை
உற்றுரை உறவினரை உள்ளன்பால் உபசரிக்கும்
வற்றாத அன்புசேர்ந்த வைத்தியநாதன் வணங்கும்
பற்றூர்ந்த குருபாதம் பற்றிநின்றேன் பத்திக்கே


பித்தனுடன் பார்வதியும் பெருமைபெற ஞானப்பால்
தத்துவத்தால் சைவத்தைத் தான்பரப்பு சம்பந்தன்
மெத்தபசி தீர்த்தழுகை மேதினியில் தீர்த்தாங்கு
ரத்தினமாம் ஞானகுரு மேதையரின் அருள்திறனல்

இத்தலத்தில் வைத்தியனு தன்அவரால் தெளிவுற்று
கைத்தலத்தில் கற்றகல்வி கசடறவே கனிந்துருக
வைத்தகுரு ரத்தினமாம் செட்டியாரின் அருளென்று
மெய்த்தலத்தில் உணர்ச்சியுடன் மேன்மையுற மொழிந்தனரே!

வாழ்க பல்லாண்டு!





மணிவிழாத் தம்பதியர்



மணிவிழாத் தம்பதியரின்
செல்வன்

மணிவிழாத் தலைவரின் செல்வியர் மணாளருடன்









புலவர்மணி சித்தாந்த வித்தகர்

உயர்திரு. முரு. பழ. இரத்தினஞ்செட்டியார்

மணிவிழா வாழ்த்து

தவத்திரு சுந்தர சுவாமிகள்
ஆதீனகர்த்தர்
கௌமாரமடாலயம்
சின்னவேடம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர்-6

வெண்பாக்கள்

அன்பர் புலவர்மணி ஆன்றமலாய் நாட்டுற்றூர்
இன்பத் தமிழமிழ்தம் ஏற்றமுற - நன்முறையில்
பேசுமியல் சித்தாந்த வித்தகராம் பேராளர்
ஆசில்ரத்தி னம்செட்டி யார்.

நல்லார் பழரத்தி னஞ்செட்டி யாரவர்தாம்
வல்ல தமிழ்ப்பணியின் வண்மையினை - எல்லோரும்
உற்றரிய நூலாய் உதவியுள்ளார் அன்னவர்தம்
சொற்பணிகள் வாழ்க தொடர்ந்து.

சித்தாந்த வித்தகனுர் சீலம் மிகுந்தஅன்பர்
சத்தாம் கருத்துரைகள் சார்ந்துரைக்கும் - வித்தகமார்
அன்பர் அறுபதின் ஆண்டையடைந் தார்நெடுநாள்
நன்னலமாய் வாழ்க நயந்து.

மணிவிழாக் கொண்டமையும் வண்மைப் புலவர்
மணியார் பலநலமும் வாய்ந்திட் - டணியுடனே
பல்லாண்டு வாழப் பரமகுரு நாதனடி
நல்லவண்ணம் போற்றுதுமிந் நாள்.

கம்பன் அடிப்பொடி
KAMBAN ADIPPODI

Telephone : 600
KAMBAN MANIMANDAPAM
KARAIKUDI-623002

ஓம்

20-7-81

செந்தமிழ்ப் புலவர்-சைவ சித்தாந்த வித்தகர்—புலவர் மணி முரு. பழ. இரத்தினம் செட்டியாரவர்கள் தற்பொழுதுதான் ஆறுபத்து ஆண்டை நிறைவு கொள்ளுகிறார்கள் என்பதை நம்ப இயலவில்லைத்தான். காரணம் நீண்ட நெடுநாட்களாகவே தமிழ்ப் பேருலகிலும், சிவநெறி யுலகிலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியதேயாகும். தெளிந்த இலக்கிய இலக்கண அறிவும் தேர்ந்த சமய ஞானமும் நிரம்பிய இப் பெருமகனார் தமிழுக்கும், சமயத்திற்கும் ஆற்றிய தொண்டு பெரிது. இன்னும் இவர்கள் ஆற்ற வேண்டும் பணி நிரம்ப உண்டு. அவற்றையெல்லாம் ஆற்றிப் பயன் சுரக்க ஆண்டவன் இவர்கட்கு நீண்ட ஆயுளையும், உடல் வளத்தையும் அருள வேண்டு மென்று நல்லன்பர் பலருடன் கூடி நானும் மனமார, வாய் மணக்க

ஆறுபத் தாண்டை அடைந்துவளர் ரத்தினனார்
நூறுபத் தாண்டளவும் நோயின்றி—வீறுபெற்றுக்
கன்னித் தமிழ்போலும், கம்பன் கவிபோலும்
மன்னிப் பொலிக மகிழ்ந்து'' என்று

வாழ்த்தி மகிழ்கிறேன்.

கி.வா. ஜகந்நாதன்

''காந்தமலை''

முப்பொருளுண் மைஉரைக்கும் சைவசித்தாந் தத்துறையில்
மூழ்கி நிற்போன்
செப்பரிய புகழுள்ளோன்! சித்தாந்த வித்தகராம்
சிறப்புப் பெற்றேன்!
இப்பொழுது அறுபதாண் டினிதுநிறை வேறப்பெற்
றிருக்கும் அண்ணல்
கட்புநலத் துடன்புகழ்சோ இரத்தினப்பேர்ச் செட்டியார்
கவினி வாழ்க!

க. வச்சிரவேல் முதலியார்
(காஞ்சிபுரம்),
தனி அலுவலர்,
சைவசித்தாந்தத் தத்துவத்துறை,
ம.கா. பல்கலைக் கழகம்,
மதுரை—625021

புலவர் மணி, சித்தாந்த வித்தகர், உயர்திரு முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் (மலேசியா) 60 ஆம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற இருப்பது பெரு மகிழ்ச்சியையும் நன்றிக் கடன்பாட்டு உணர்வையும் அடியேனுக்கு உண்டு பண்ணுகின்றது. பொதுவாக, ஒழுக்க நெறியும், திருவருளும் பற்றுக வாழும் அனைவர்க்கும் இப்பெரியாரவர்கள் தொடர்பு மிக இனிதாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. இவர்களிடத்துக் காணப்படும் நற்பண்புகள் மெய்ம்மையைப் பின்பற்றி ஒழுகுதல், தக்கவர்களோடு உள்ளங்கலந்து பழகுதல், பிறரை உண்மையைக் கடைப்பிடித்தொழுக ஆவன செய்தல் என்பவை ஆகும்.

என்னிடத்து மதிப்பும் பெருந்தயாவும் உடையவர்கள். இவர்கள் கல்வியறிவு, நூற்பயிற்சி, சாத்திர நுணுக்கம் என்பவற்றைத் தொழிலாகக் கொண்டவர்கள் அல்லர்; ஆயினும் பல நூல்களிலும் சென்ற பழக்கமும், சான்றோர்களை அளவிட்டுக் கொள்ளுதலும், சமயத் தத்துவத் துறையில் அறிஞர்களுக்கு ஏற்படும் உண்மையான ஐயங்களுக்குத் தக்க தீர்வுகளை யோசித்துச் சொல்லும் திறனும் இயல்பாக உடையவர்கள். இவர்களை மதிநுட்பம் நூலோடு உடையதக்கோர் எனப் பாராட்டல் பொருத்தமாகும்.

சண்டீசர் தந்தையார் அவர் மேற்கொண்ட சிவபூசையில் உபகரணமாக இருந்த பாற்குடத்தை இடறினர் எனச் சேக்கிழார் கூறுகின்றார். சிலர் சுந்தரர் தேவாரத்தில் 'கோல வெண்மணற் சிவன்றன் மேற் சென்ற தாதை' என வருவது பற்றி வேறுவகையாகச் சொல்லக் கேட்டு அது சரி எனக்கொள்வர். நமது பெரியார் அவர்கள் அதுபற்றிய முழு விவரங்களையும் தெரிந்து, சேக்கிழார் அடிகள் தாம் உண்மையாகக் கொண்டதனையே கூறியிருக்கின்றார் என்பர். இவர்கள் அவ்வாறு உண்மையைக் கண்டு உரைத்தற்குக் காரணம், திருஞானசம்பந்தர் திரு ஆலவாய் திரு இயமகத்துள்,

''சென்று தாதை உகுத்தனன் பாலையே
சீறி யன்பு செகுத்தனன் பாலையே
வென்றி சேர்மழுக் கொண்டுமுன் காலையே
வீட வெட்டிடக் கண்டுமுன் காலையே
நின்ற மாணியை யோடின கங்கையால்
நிலவ மல்கி யுதித்தன கங்கையால்
அன்று நின்னுரு வாகத் தடவியே
ஆல வாயர னுகத் தடவியே''

என அருளிச் செய்துள்ளார். இதனைக் கண்டு சேக்கிழார் அடிகள் கூறியதே சரி என்பர் நம் பெரியார். இங்ஙனம் எதனையும் முற்றுக ஆராயும் பழக்கமும் பல சான்றோர் பழக்கமும் உடையவர்கள். இவர்தம் அறுபதாம் ஆண்டு நிறைவு 'விழா' நன்கு நடைபெற்றுப் பல்லோருக்கும் பயன் விளைக்க!

Dr. Rm. PERIAKARUPPAN M.A., Ph.D.,
(Tamizhannal)
Prof. & Head, Dept. of Tamil Studies
Co-Ordinator, School of Tamil & Indian Languages
Madurai Kamaraj University, Madurai-625 021

Date 29-7-81

'தமிழண்ணல்' டாக்டர் இராம. பெரிய கருப்பன்

சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா நடக்க விருப்பதறிந்து மனம் மகிழ்கின்றேன். தமிழில் சிவநெறியுண்மைகளை அவர்களைப்போல அழுத்தமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்க வல்லவர் எவருமிலர் என்பது என் கருத்து. அவர்கள் சிவநெறி மெய்ப்பொருளாய்வுக்குக் கிடைத்த ஒரு முழு மாணிக்கம்—இரத்தினம்—ஆவார்கள். ஊழ்வினை பற்றிய கோட்பாட்டினை, திருக்குறள் அதனை விளக்கும் திறத்தினை யான் அச் சான்ருேரது கட்டுரையொன்றைப் படித்தபிறகே தெளிவுற அறிந்தேன். திருக்குறள் பிற சமயங்களின் உண்மைகளை ஏற்றுப் போற்றினும் அது சிவநெறியடிப்படை சார்ந்ததே என அவர்கள் ஒருமுறை, மதுரை வடக்காடிவீதித் திருவள்ளுவர் கழகத்தில் உரையாற்றினர்கள். ஒவ்வொரு மதமாகக் கூறி அதுவன்று, இதுவன்று என அவர்கள் நிரல்பட மறுத்துரை கூறிவந்து, இறுதியில் சிவநெறியில் வைத்துக் காட்டிய அருமை இன்றும் என் நினைவில் பசுமையாகவுளது. அவர்கள் மூலம் பெற்ற ஊழ்வினை பற்றிய தெளிவால் உந்தப்பெற்றே யான் 'நச்சு வளையம்' என்றதொரு புதினத்தை எழுதியுள்ளேன். தமிழில் தத்துவநாவல் எனத்தக்கது அது. அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து, எல்லா நலமும் பெற்றுச் 'செந்தமிழும் சிவநெறியும் தழைத்தினிதோங்க' வாழ்வார்களாக! அங்கயற்கண்ணியின் திருவருளால் அவர்கள் பணி சிறக்க இறைஞ்சுகிறேன்.

உ

சிவமயம்

சி. இராம. நாகப்பன், மதுரை

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

சித்தாந்த வித்தகர். திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களின் அறுபதாண்டு நிறைவு மணிவிழா, மனநிறைவையும் பெருமகிழ்வையும் தருகிறது.

இரத்தினம் செட்டியார் அவர்கள் என் தந்தையாரின் இனிய நண்பர். என்னிடமும் பேரன்பு காட்டிப் பழகிவரும் பெருந்தகையாளர். எளிய தோற்றமுடையவர். எடுப்பாகப் பேசுந் தன்மையர். நற் பழக்கங்கள்மிக்கவர். இளமைமுதல் உழைப்பால் உயர்ந்தவர். தமிழையும் சமய உண்மைகளையும் ஓதாதுணர்ந்த பேரறிவாளர். கடல் கடந்து பொருள் தேடிய காலத்திலும் சைவ சமயத்திற்கு உண்மைப் பொருள் தேடிய சான்றோர்.

எளிதில் விளங்காததும் விளக்கிச்சொல்ல இயலாததுமான சித்தாந்தத்தை எளிய உவமைகளால் விளக்கிக் காட்டும் சொல்லின் செல்வர் தன்பேச்சைக் ''கேட்போரைப்பிணித்துக் கேளாரையும் கேட்கத் தூண்டும்'' சொன்னலம் மிக்கவர். உவமைக்கதை ஓராயிரம் சொல்லி நகைச்சுவையால் அவையோரை மகிழச்செய்து சிறந்த கருத்துக்களை ஊட்டுந் திறன் இவருக்கே சொந்தம். பன்னிரு திருமுறையும் சைவசித்தாந்தமும் ஏற்றமுடன் கூறும் ஆற்றல் மிக்கவர்.

கம்பன் கவியும், வள்ளுவர் குறளும், சிலம்பின் ஒலியும், ஆழ்வார் அமுதும் நயங்காட்டிப் பேசும் நாவலர். தம் சிந்தனைத் திறத்தால் தாம் சுவைத்த யாவையும் சுவைபடக்கூறித் தாமின் புறுவது உலகின்புறக் கண்டு உவக்கும் பண்பாளர்.

அறுபதாண்டு நிறைவில் மனநிறைவு காணும், இரத்தினம் செட்டியாரவர்கள் மேன் மேலும் எல்லா வளமும், நலமும் பெற்றுப் பல்லாண்டு இனிது வாழ அங்கயற்கண்ணியுடனுய ஆலவாய் அண்ணலின் அருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

டான்ஸ்ரீ மு. சோமசுந்தரம். பி. ஏ., பி.காம்.
கோலாலம்பூர், மலேஷியா.

வாழ்த்துரை

சைவ சித்தாந்த வித்தகர் புலவர் மாமணி முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நம் சைவசித்தாந்த மகா சமாஜத்தினர் சிறப்பு மலர் ஒன்று வெளியிடும் செய்தி கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன்.

சைவசித்தாந்த வித்தகர் அவர்கள் மலேயாவில் சைவப் பெரியார் கா. இராமநாதன் பி.ஏ.; பி.,எல்.; அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால் அடியேனும் அவர் களுடன் சென்ற முப்பதாண்டு காலமாக நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றேன். சித்தாந்த வித்தகர் மலேயா அருள் நெறித் திருக் கூட்டத்தின் சார்பாக நடத்திய சித்தாந்த வகுப்புக்கள் பலவற்றிலும் கலந்து கொள்ளும் பேறும் பெற்றிருக்கிறேன். இதன் விளைவாக நம் சைவ சமயத் தைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

சித்தாந்த வித்தகர் அவர்கள் மலேயா சிங்கப்பூர் பகுதிகளில் சைவமும் தமிழும் தழைக்கச் சென்ற 40 ஆண்டுக் காலமாக அரும்பாடு பட்டு வருகின்றார்கள். மலேயா அருள் நெறித் திருக் கூட்டத்துடன் மட்டுமன்றி, சமயத் தொடர்பான ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு சைவசித்தாந்த அறிவும் திருமுறையுணர்வும் மக்களிடையே பெருக அயராது தொண் டாற்றி வருகின்றார்கள். நகரங்களில் மட்டுமல்லாது எண்ணற்ற தோட்டப்புறப் பகுதிகளுக்கும் தொல்லை கருதாது சென்று பாமர மக்களிடையே பக்தியுணர்ச்சியையும், சமய நெறியொழுக்கத் தையும் பரப்பி வருகின்றார்கள். சிறுதெய்வ வழிபாட்டில் திளைத்திருந்த தோட்டப்புற மக்களை முழு முதற் பொருள் வழிபாட்டில் முனைந்து நிற்குமாறு செய்த பெருமை இவர்களையே சாரும். 'தமிழ் நேசன்' ஞாயிறு மலரில் இவர்கள் சென்ற பல ஆண்டுகளாக இடைவிடாது எழுதி வரும் சைவ சமய விளக்க வினுவிடைப் பகுதியின் விளைவாகப் படித்தவரும் பாமரரும் சித்தாந்த உண்மைகளிலும், சமயச் சடங்கு முறைகளிலும் சிறந்த தெளிவினைப் பெற்றிருக்கின்றார்கள். சித்தாந்தத்தின் ஆழ்ந்த நுட்பமான தத்துவக் கருத்துக்களை அனைவருக்கும் புரியும் வகையில் எளிமையாக எடுத்துக் கூறுவதில் இவர்கள் தன்னிகரற்றவர்களாகத் திகழ்கின்றார்கள்.

சென்னை சைவசித்தாந்த சமாஜத்தின் சார்பில் இவர்கள் சைவசித்தாந்தத் தொடர் சொற் பொழிவுகள் பலவற்றை ஆற்றியது பற்றியும், சைவசித்தாந்தப் பேரறிஞர் திரு. வஜ்ரவேலு முதலியார் அவர்களுக்கு அண்மையில் பொற்கிழி வழங்குவதற்கு இவர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சி பற்றியும் சைவ உலகம் நன்கு அறியும்.

இத்தகைய சிறப்புடைய வித்தகர் அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா தமிழகத்தில் பிள்ளையார் பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழாவும் இனிது நடைபெற இறைவனை வேண்டு கிறேன். வித்தகர் அவர்களும் அவர்கள் துணைவியாரும் நல்ல உடல் நலத்துடன் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தொடர்ந்து தொண்டாற்ற அருள்புரியவும் தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கின்றேன்.

உ
சிவமயம்

சைவபூஷணம் இ. வே. கந்தையா,
மலாயா அருள் நெறித் திருக்கூட் டத் தலைவர்.

மலேசிய நன்னாடு மூவின மக்கள் பெருந்தொகையாய் வாழும் பொன்னாடு. மலாய்மொழி தேசிய மொழியாகவும், இஸ்லாமிய சமயம் தேசிய சமயமாகவும் திகழ்ந்த போதிலும் இங்கு வாழும் மக்கள் தத்தம் மொழி, சமயம், கலாச்சாரங்களைப் பயில-கடைப்பிடிக்க-வளர் த்து. கொள்ள போதிய உரிமைகளை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இத்தகு ஏற்றமிகு மலையகத்தின் தென்கீழ்ப் பகுதியாம் மூவாரை உறைவிடமாய்க் கொண்டு வாழ்ந்து வருபவரே ஸ்ரீமான் முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள். தமிழகத்தில் பிறந்து வளர்ந்து, பயின்று பணியாற்றுகையில் மலையகத்தை நாடிக் குடியேறினார். இல்லறத்தை நல்லற மாய் ஓச்சுவதுடன் நின்று விடாது தன்னலமற்ற சமயப் பணிகளையும் ஆற்றுபவர். ஆம் கோவில்கள், சமய ஸ்தாபனங்கள் அழைக்கும் அழைப்பிற்கிணங்கி மலையகத்தின் மூலை முடுக்குகள். எங்கும் சென்று சமயச் சொற்பொழிவுகளை, கார்மேகம் போல் பொழிபவர். இவர் மலையகத்தில் மட்டுமின்றி தமிழகத்திலும், ஈழத்திலும்கூட நீண்ட நாள் சொற் பொழிவைத் தொடர்பாய் வழங்கியுள்ளார்.

உடல் வெறும் மண்ணுக்கென்றும் உயிர் தமிழுக்கும், சைவ சித்தாந்தத்தைப் பரப்புவதற் கென்றும் வாழ்ந்து வருபவர் அன்னவர் என்பதை அறியாத அறிஞர் இலர் எனலாம். மலை யகத்தில் ''சித்தாந்த வித்தகர்;'' ''வித்தக ரத்ன'', ''புலவர் மணி'', ''புலவர் மாமணி'' என்றால் அவை இரத்தினம் செட்டியாரைக் குறிப்பன வென்பதை தமிழுலகம் அறியும். இவரின் சைவசித்தாந்த அறிவை மெச்சி சைவப் பெரியார் கா. இராமநாதன் அவர்கள் இவருக்கு ''சித்தாந்த வித்தகர்'' என்ற சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

மாபெரும் இதிகாசங்களான இராமாயணத்தை, மகாபாரதத்தை மட்டுமல்லாது ஐம்பெரும் காப்பியங்களையும் கசடறக் கற்றதால் இலக்கியத்தில் இவருக்கு ஈடுபாடு அதிகமா? சைவ சித்தாந்தம், பதினெண் புராணங்களில் இவருக்கு ஈடுபாடு அதிகமா? என்பதை ஊகித்தல் அரிது. சுருங்கக் கூறின் தமிழிலக்கியமும், சைவசித்தாந்தமும் இவருக்கு இரு கண்கள் போன்றவை யெனக் கூறுதல் பொருந்தும்.

மலேசிய இந்து சங்கம் நடாத்திய சமய வகுப்புகளிலும். அருள்நெறி நடாத்தும் அந்தர் யோகங்களிலும் சமய, சந்தான குரவர் குருபூசைகளிலும் இவர் சொற்பொழிவுகள் பலமுறை இடம் பெற்றுள்ளன. தோட்டப் புறங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்ற இவர் பின் வாங்கியதில்லை. இவர் உபன்னியாசங்கள் பண்டிதர் முதல் பாமரர் வரை கேட்டின்புறும் வகையில் எளிமையாகவும், இனிமையாகவும், ஏற்றதாகவும் அமைவன.

மிகக் கடினமான இந்து சமயத் தத்துவங்களையும் குறிப்பாக சைவசித்தாந்தத் தத்துவங்களை யும் (பதி, பசு, பாச விளக்கங்களை) உவமான, உவமேயங்கள், குட்டிக்கதை, நகைச்சுவை. நடை பெற்ற உண்மைச் சம்பவங்கள் வாயிலாய் தித்திக்குமாறு புகுத்தித் தெள்ளத் தெளிய புரிந்து கொள்ளச் செய்யும் தனித்திறன் இவர்பால் ஏனையோரை ஈர்க்கக் கூடியது. 'தமிழ் நேசன்' நாளிதழில் பல்லாண்டுகளாய் சைவசித்தாந்தப் பகுதியில் வினாக்கட்கு விடையளித்து வருகின்றார்.

நெடிய தோற்றமும், கூரிய பார்வையும், நெற்றி நிறை நீறும் கொண்ட இவர் பேசத் தொடங்கினால், அவை நிசப்தத்தில் ஆழ்ந்து விடும். அத்தகு சக்தியும், இனிமையும் கொண் டவை இவர்தம் உரைகள். தீராச் சந்தேகங்களைத் தீர்த்து வைக்கும் திறனும், அறிவு ஞானமும் படைத்த இப்பெரியார் அறுபதாண்டு அகவை பூர்த்தியடைந்தமையைக் கொண்டாடும் இவ் வேளையில் அவரைப் பற்றிப் பாராட்டுரை வழங்க வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ் கின்றேன்.

பதி, பசு, பாசத்தைச் செவிச்செல்வமாய் வழங்கும் திறன்படைத்த சித்தாந்த வித்தகர், மனிதருள் அறிவு ரத்தினம், இன்னும் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்து தமிழும், சித்தாந்தமும் வளரப் பணிபுரிய மலாயா அருள்நெறித் திருக்கூட்டத்தினருடன் சேர்ந்து யானும் எம்பெருமானை வழுத்துகிறேன்.

வாழ்க ரத்தினம்!
வளர்க சித்தாந்தம்!

உ
சிவமயம்

வாழ்த்துரை

மு. சேதுராமன்
நிர்வாகி, ''தமிழ்நேசன்'' கோலாலம்பூர்

பிறந்ததோர் நாளும், கோளும்.
　　பிறவுள ஆண்டும், மீண்டும்
பிறந்திட வருநாள் இன்று!
　　பிறவியை மீண்டும் கண்டாய்!
துறந்தவர் காணும் அந்தச்
　　சோதியின் அருளி னாலே
சிறந்ததோர் வாழ்வு காணச்
　　சிந்தையால் வாழ்த்து கின்றோம்! 1

மலையென வளத்தைக் காட்டும்
　　மலையகம் மட்டும் அன்றி
கலைவளம், சைவம் என்னும்
　　கவின்வளம் ஓங்கி நின்று
தலைஎனும் தமிழ்நா டெங்கும்
　　தனிப்புகழ் நாட்டி, இன்று
நிலையதாம் இடத்தைப் பெற்றாய்!
　　நிலமிதில் நீடு வாழி! 2

சைவமே எண்ணும் உள்ளம்;
　　சங்கையில் லாமல் ஆய்ந்து
சைவமே சொல்லும் செவ்வாய்;
　　சற்றேனும் பிறழ்ந்தி டாமல்
சைவமே காட்டும் செய்கை;
　　தரணியில் என்றும் நின்று
சைவமே தழைக்க வாழும்
　　தனிப்பெரும் இயக்கம் வாழி! 3

செய்முறை காட்டி நின்று
செம்மையாம் நெறியிற் சேர்க்கும்
சைவத்தின் துறைகள் எல்லாம்
தனிப்பெருந் திறத்தி னாலே
உய்வகை விரித்துக் கூறி,
உவப்பினில் ஆழ்த்தி, மேலும்
மெய்ந்நெறி உணரச் செய்யும்
மேன்மையை வாழ்த்து கின்றோம்! 4

தன்னிக ரில்லாச் "சைவ
சமயத்தின் விளக்கம்" எல்லாம்
பன்னரு முறையிற் கேள்வி
பதில்களாய் "நேசன்" தன்னில்
பன்னெடுங் காலம் சொல்லி,
பக்குவம் இல்லா தாரும்
உன்னிடச் செய்தாய் வாழி!
உரையினில் வல்லாய் வாழி! 5

சிறந்ததோர் சைவ நூல்கள்
சிறப்பாகப் பயின்றிட் டாலும்
பரந்ததோர் விளக்கம் கூறார்;
பரிபாஷைச் சொற்கள் மீண்டும்
மறவாது கிளியாய்க் கூறி
மக்களை மருட்டுங் காலை,
நிறைவுடன் எளிமை யாக்கி
நிரப்புவாய் என்றும் வாழி! 6

சாத்திரம் பத்தும் நான்கும்
சைவத்தின் வடிவங் காட்டல்
மாத்திரம் அன்றி, நாயன்
மார்களால் அருளிச் செய்த

தோத்திரம் பன்னி ரண்டும்
    தூயஅந் நெறியே காட்டும்
பாத்திரம் ஆவீர் என்னும்
    பண்பினை வாழ்த்து கின்றோம்! 7

அரும்பொருள் சிவத்தைப் பேசும்
    ஆன்மிகக் கருத்தை யெல்லாம்
சிறுசிறு கதைக ளாலே
    செவ்வனே பதியச் செய்வாய்
பெரும்பெருங் காப்பி யங்கள்
    பேசுநுண் கருத்தை யெல்லாம்
உறுசுவை பெருக்கிக் காட்டும்
    உரைத்திறம் வாழ்த்து கின்றோம்! 8

எந்தவோர் கருத்தா னாலும்
    ஈடுபா டதனிற் காட்டி
சிந்தையில் நெடுநாள் தேக்கி
    சிறந்தவோர் பொருளுங் கண்டு
விந்தையாய் மக்கள் நோக்கும்
    விதந்தனில் வெளிப்ப டுத்தும்
அந்தநல் ஆற்றல் கண்டு
    அவனியே வாழ்த்தும் ஐயா! 9

எத்தனை ஆண்டு காலம்
    எவர் வாழ்ந்தார் என்பதன்று!
அத்தனை ஆண்டுக் குள்ளே
    அவரென்ன செய்தார் என்றே
இத்தரை கணக்குப் போடும்.
    என்றுமே நிலைக்கு மாறு
பத்திமைப் பாங்கை இங்கு
    பாவினாய்; வாழ்க மாதோ! 10

சித்தத்தை ஆய்வில் நாட்டி
செறிவான உண்மை கண்டு
சித்தாந்த விளக்கம் எல்லாம்
சிறப்புடன் எடுத்துக் காட்டும்
வித்தகர் ஆன தன்மை
விளங்கிடும் நிலையால், பட்டம்
அத்திறம் அறிந்து தந்தார்
அருள்நெறித் திருக்கூட் டத்தார். 11

சமயத்தின் விளக்கம் கூறும்
சான்றவர் பலரா னும்
சமயத்திற் கேற்ருற் போல
சாற்றுதல் உணர்ந்துள் ளோம்யாம்.
அமைதியும் பொருளும் ஓர்ந்து
அழுத்தமாய்க் கருத்தைக் கூறி
கமழுறும் இரத்தி னத்தை
கண்டுயாம் வாழ்த்து கின்ருேம்! 12

தொன்றென நின்று கொள்கைத்
தூய்மையைக் காட்டும் சைவம்
நன்றென நாளும் நாட்டி
நாடெலாம் உயர்வைக் காட்டி
பொன்றிடாப் புகழால் ஓங்கி
பூதலத் தில்பல் லாண்டு
குன்றென உயர்ந்து மேலும்
கோபுரம் போல வாழி! 13

ஆறுபத் தாண்டு காலம்
அகநிறை இல்லா ளோடு
வீறுசால் வாழ்வு கண்டு
விளங்கிடச் "சாந்தி" கொண்டாய்!

நூறுபத் தாண்டு காலம்
நுவலருஞ் சிறப்பாய் வாழ
ஆறுசேர் முடியின் அண்ணல்
அடியிணை தொழுவாம் யாமே! 14

அணிவிழாக் கோலம் பூண்டு
அன்பர்கள் போற்றக் காணும்
மணிவிழா சிறந்து ஓங்க!
மனமகிழ் முறையில் சைவப்
பணிபல தொடர்ந்து ஆற்றி
பரமனின் அருளி னாலே
மணமக்கள் நெடுநாள் இந்த
மாநிலம் போற்ற வாழி! 15

சொல் வன்மை

திருமுருக கிருபானந்த வாரியார்

மதுரைக்கு அருகே திருப்பூவணம் என்ற ஒரு சிவத்தலம் உண்டு. தேவாரப் பாடல் பெற்றது. அவ்வூரிலுள்ள சிவாலயத்தில் புஷ்ப வனக் குருக்கள் பூசை செய்து வந்தார். இனிமையாகவும் சதுரப்பாடாகவும் பேசுவதில் அவர் வல்லவர். கோயிலுக்கு எதிரில் ஓங்கி வளர்ந்த அழகிய மருதமரம் ஒன்று உண்டு. காலை மாலைகளில் கோயில் பூசை முடிந்த பின் குருக்கள் இந்த மரத்தின் நிழலில் இருந்து இன் புறுவார். நல்ல காற்று வீசும். அருகில் வைகையாறு ஓடுகின்றது. மனத்திற்கு நல்ல சாந்தியைத் தரும்.

அந்தத் திருக்கோயில் சிவகங்கை சமஸ் தான ஆட்சியைச் சேர்ந்திருந்தது. அப்போது சிவகங்கை சமஸ்தானத் தலைவராக இருந்தவர் மருத பாண்டியர். இப்பாண்டியர் காளையார் கோயிலுக்கு ஒரு திருத்தேர் புரிவாராயினர். அத்தேருக்கு அச்சு மரம் பெரியதாக வேண்டி யிருந்தது. திருப்பூவணம் கோயிலுக்கு முன்னர் வானளாவி வளமுடன் வளர்ந்திருந்த மருத மரத்தை வெட்டி வருமாறு சிலரை ஏவினர். மன்னருடைய கட்டளைப்படி வந்த ஆட்கள் ஆளுக்கு ஒரு கோடரி கொண்டு மருத மரத்தை வெட்டச் சென்றனர். இதனைப் புஷ்பவனக் குருக்கள் கண்டனர். அவர் பிரியமாக இருந்து காற்று வாங்கும் மரம் வெட்டப்படுவதைக் கண்டு திடுக்கிட்டார்; ஓடி வந்தார். வெட்ட முயன்ற ஆட்களை, "அரசர் மேல் ஆணை; வெட்டக் கூடாது" என்று தடுத்தார். ஆட்கள் அரசர் மீது ஆணையிட்டதனால் அஞ்சினர்கள். அரசரிடம் சென்று "மரத்தை வெட்டா வண்ணம் குருக்கள் தடுக்கின்றார்" என்று கூறினர்கள்.

மன்னருக்குக் கோபம் மூண்டது. "நமது ஆட்சிக்கு உட்பட்ட கோயில் குருக்கள் தடுக் கின்றாரா? என்ன ஆச்சரியம்! நாம் செய்கின்ற தேருக்கு உதவக் கூடிய மரத்தையா தடை செய்கின்றார். நல்லது" என்று படையுடன் புறப்பட்டுத் திருப்பூவணம் வந்தார். "கூப்பிடு குருக்களை" என்றார். அரச சேவகர்கள் சென்று குருக்களைப் பார்த்து "ஐயா! உங்களை மன்னர் பெருமான் கூப்பிடுகின்றார். சீக்கிரம் வா ருங்கள்" என்றார்கள்.

குருக்கள் பாவம்! நடுங்கி விட்டார். "மன்னனுடைய கோபத்துக்கு ஆளானேமே? எவ்வாறு தப்பித்துக் கொள்வது? தேவதேவா மகாதேவா! என்ன செய்வேன்? என்று கலங் கினர். பயந்த வண்ணமாக மருதபாண்டியரிடம் வந்தார்.

மன்னர், "என்ன ஐயா! நான் காளையார் கோயிலுக்குச் செய்யும் தேரின் அச்சு மரத்திற் காக இதை வெட்டச் சொல்லி ஆளை யனுப் பினல், நீர் அரசன் மேல் ஆணையென்று கூறித் தடுத்தீராமே? அரசன் ஆணைக்கு மேல் ஒரு ஆணையுண்டோ?" என்று கோபத்துடன கேட் டார்.

குருக்கள், "மன்னர் பெருமானே! சிறிது மனத்தைச் சாந்தப் படுத்திக் கொண்டு கே ளுங்கள்."

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்பது சங்க கால வாக்கு. தாங்கள் இந்த உலகத்தின் உயிர்; தங்கள் ஆணைக்கு மேற் பட்ட ஆணை எந்த உலகிலுமே கிடையாது. தாங்களும் தங்கள் செங்கோலும், தங்கள் அரசாட்சியும் மேன் மேலும் ஓங்கி நீடுழி வாழ வேண்டும். என்று சதா பரமேஸ்வரனிடத்தில் வேண்டிக் கொண்டிருக்கிறேன். 'வீழ்க தண்

புனல் வேந்தனும், ஓங்குக, என்று கூறுவேன். தங்கள் குடையின் கீழ் எல்லா உயிர்களும் வாழ்கிறார்கள். தங்கள் குளிர்ந்த பூச்சக்கரக் குடை நிழலே எல்லாத் துன்பங்களையும் மாற்றி சுகந் தருகிறது. அதுபோல் இந்த மரம் பெருமானுடைய திருக்கோயிலுக்கு முன் நின்று அனேக உயிர்களுக்கு வெய்யிலின் கொடுமை நீக்கிக் குளிர்ந்த நிழலைத் தருகின்றது. தங்கள் திருநாமத்தைக் கொண்டது. ஆதலின் இம் மரத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கும் மற்றவர்களுக்கும் அரசராகிய தங்கள் நினைவு வரும். நானும் மற்றப் பெரியோர்களும் இம் மரத்தைக் காணும் பொதெல்லாம் மன்னர் பிரான் நீடுழி வாழ்க என்று எம்பெருமானை வேண்டிக் கொள்வோம். ஆதலின் தங்கள் நாமம் தாங்கி தங்களை நினைவு செய்யும் இம் மரத்தை வெட்டுவது சரியன்று என்று எண்ணியே தடுத்தேன். தங்கள் திருவுள்ளம் எப்படியோ அப்படியாகட்டும்'' என்றார்.

அழகிய நெஞ்சையள்ளும் இந்த சொற்களைக் கேட்ட மன்னன் மனம் உருகியது குருக்கள் மீதுள்ள சினம் மாறி அன்பு ஏற்பட்டது. நம் மீதுள்ள அன்பு காரணமாகவே நமது பேரைத் தாங்கிய இம் மரத்தை வெட்டக் கூடாது என்று தடுத்தார். அது நியாயந்தான் என்று எண்ணி மரத்தை வெட்ட வேண்டாம் என்றார். வேறு ஒரு மரத்தைத் தேடி வெட்டுமாறு பணித்தார்.

குருக்களுக்குப் பட்டுப் பீதாம்பரமும் பொற்காசுகளும் வழங்கினர். ''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கோளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்'' என்ற திருவாக்கின்படி நண்பரும் பகைவரும் விரும்புகின்ற வகையில் பேசுவதே சொல் வன்மை. இச் சொற் செல்வம் படைத்தவர்கள் மிகச் சிலரே. குருவருளாலும் திருவருளாலுமே இது கிடைக்கும். வில்வன்மையைக் காட்டிலும் சொல் வன்மையே சிறந்தது

உ

சிவமயம்

பாலருவாயர் துணை

சிவலிங்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

தேவகோட்டை

''மனிதப் பிறவியை இறைவன் வகுத்தது மனம் வாக்கு காயங்களால் ஆனிடத்தைந்தும் ஆடும் அரனடியை அர்ச்சிப்பதற்கே'' என்று மெய்கண்ட பரமாசாரியராகிய அருணந்தி சிவம் அருளிச் செய்கின்றுர். ''அர்ச்சனே'' என்ற சொல், பூசனே என்னும் பொருளே யுடையது. ''எண்ணிலாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும், உண்மையாவது பூசனே எனவுரைத்தருள. அண்ண லார்தமை அர்ச்சனே புரியவா தரித்தாள். பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து'' என்னுஞ் சேக்கிழார் பெருமான் திருவாக்கால் இதனே அறியலாம்.

அர்ச்சனே அல்லது பூசனே என்பது, ஆன் மார்த்தம் பரார்த்தம் என இருவகைப்பட நிகழ்வது. ஆன்மார்த்தம் தன் பொருட்டாக நிகழும். பரார்த்தம் அனேத்துயிர்களுக்குமாக நிகழும். ஆன்மார்த்தத்தில் பரார்த்தம் இல்லே. பரார்த்தத்தில் ஆன்மார்த்தமும் அடங்கியிருக் கும். ஆன்மார்த்தத்தை அடக்கிக் கொள்ளு கின்ற பரார்த்தம் இருக்கும்போது, ஆன்மார்த் தம் வேண்டப்படுவதுதாஞ என்னும் ஆசங்கை சிலருக்கு எழலாம். பரார்த்தத்திலுள்ள ஆன் மார்த்தம் பொதுவகையில் பயன் தருவதா தலின், சிறப்பு வகையில் பயனேப் பெறுவதற்கு தனித்த ஆன்மார்த்தமும் வேண்டப் பெறுவ தென்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர வேண்டும்.

ஆன்மார்த்த பரார்த்த பூசைகளில் பூசைக் குரியதிருவுருவங்களாக எழுந்தருளுபவையனேத் தும் சிவலிங்கத் திருமேனிகளே என்பது அனே வரும் அறிந்த ஒன்று. மண் முதல் நாதமீருகச் சொல்லப்படுகிற மூன்று வகைப்பட்ட தத்துவங் களேயும் கடந்து நிற்பது பரசிவம். அது மாற்றம் மனங்கழிய நிற்பது. எல்லாவற்றையும் கடந்து நிற்கின்றதும், ஆதியும் அந்தமும் இல்லாத பரஞ்சோதி வடிவினதுமாகிய சிவம், உயிர்களின் உய்தியைத் திருவுள்ளத் தடைத்து அருவம், அருவுருவம், உருவம் ஆகிய புறக் கண்ணுக்குப் புலப்படாது, மெய்ஞ்ஞானியின் அறிவுக்கறிவாய் அவருள் நின்று அவருக்கு உண்மையை உணர்த்தும். அருவுருவத்திருமேனி புறத்தே புலப்பட்டு அவயவப் பகுப்பின்றிச் சிவலிங்க வடிவாயிருக்கும். உருவத் திருமேனி கரசரணுதி அங்க, உபாங்க, சாங்க, பிரத்தியங் கங்களுடன் கூடியதாயிருப்பது. அருவம் அருவுருவத்துக்கு மூலம். அருவுருவம் உருவத் துக்கு மூலம்.

அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் புறக் கண்ணுக்குப் புலப்படுவதாதலாலும், உருவத் திருமேனிகள் அனேத்திற்கும் மூலமாத லாலும் அதுவே வழிபாட்டுக்குரிய வடிவ மாயிற்று. தத்துவாதீதமாகிய சிவத்துக்கு 36, 35வது தத்துவங்களாகிய நாத விந்துக்கள் அருவ நிலேக்களங்களாகவும், 34வது தத்துவ மாகிய சாதாக்கியம் அருவுருவ நிலேக்களமா கவும், 33வது தத்துவமாகிய ஈச்சுரம் உருவ நிலேக்களமாகவும் உரைக்கப் பெறுகின்றது. கோயில்கள்தோறும் வெவ்வேறு பெயர் களுடன் விளங்கிக் கொண்டிருக்கும் சிவபெரு மானுக்குத் திருமேனியாக எழுந்தருளியிருப்பது சிவலிங்க மொன்றே என்பது நாமறிந்ததே. இங்ஙனம் எல்லா இடங்களிலும் பூசை வழி பாட்டை ஏற்றுப் பயன் வழங்குகின்ற சிவலிங் கத்தைப் பற்றிச் சில உண்மைகளே நினேவு கூர்வோம்.

சிவலிங்கம் என்பது, சிவமாகிய லிங்கம் எனப் பொருள்படும். சிவலிங்கம், சிவமாகிய

லிங்கத்தையும் சத்தியாகிய பீடத்தையும் கொண்டது. நாத தத்துவத்தை நிலைக்கள மாகக் கொண்டு சிவமும், விந்து தத்துவத்தை நிலைக்களமாகக் கொண்டு சத்தியும் இருப்பதை ''நாதம் லிங்கம் இதிக்ஞேயம் பிந்து பீடம் உதாஹ்ருதம்'' என்னும் சிவாகமவசனம் தெளிவிக்கின்றது. 'லிங்கம்' என்னும் சொல் 'சித்திரித்தல்' என்னும் பொருளையுடையது. ''லயம் கச்சந்தி பூதாநி சம்ஹாரே நிகலாநிச ஸ்ருஷ்டி காலே யதா ஸ்ருஷ்டிஸ் தஸ்மால் லிங்கமுதாஹ்ருதம்'' சங்கார காலத்தில் அறிவுள்ளதும் அறிவற்றதுமாகிய எல்லாப் பொருள்களும் ஒடுங்கிப் பின்னர் சிருஷ்டிக் காலத்தில் ஒடுங்கியபடியே தோன்றுகின்றமையால் லிங்கம் எனப்படுகின்றது'' எனச் சுப்பிரபேதாகமம் கூறுகின்றது.

நான்கு வேதகங்களுள் யசுர் வேதத்தில் தைத்திரீய ஆரணியகத்து 10ஆவது பிரசினம் 16ஆம் அநுவாகத்தில்''சிவலிங்காய நம''என்ற மந்திரம் கேட்கப் படுவதால், படைப்புக் காலந் தொட்டுச் சிவலிங்க வழிபாடு நிகழ்ந்து வருகிறதென்பது தெளியப்படும். ''ருத்ரோ லிங்கம் உமாபீடம் தஸ்மைதஸ்யை நமோநம'' என்றற்றொடக்கத்தனவாகிய ருத்ரகிருதயோபநிடத் மந்திரங்கள் லிங்கமும் பீடமுமாயிருக்கிற சிவசத்திகள் பிரிப்பின்றி யிருப்பவர்களென்பதை அறிவிக்கின்றன. ஞானசத்தி என்னும் ஆகமத்தில் எங்காயினும் இந்திரனது குலிசக்குறி, பிரமனின் கமலக்குறி, திருமாலின் சக்கரக்குறி ஆகியவை காணப்படவில்லை. சிவன் சத்தி ஆகிய இருவரின் லிங்காங்க பகாங்கங்களே யாண்டும் காணப்படுதலின் பிரபஞ்சமனைத்தும் சிவவடிவமேயாம்.'' என்னும் பொருளையுடைய சுலோகம் காணப்பெறுகிறது. இதை ''மச்ச ரங்கமும் மலரவ னங்கமும், வச்சிராங்கமும் இல்லை மண் மீதிலே, அச்செலாம் லிங்காங்க பகாங்கமே, பிச்சர் காளெம் பிரானல்ல தில்லையே'' என்று ஞானவரண விளக்கம் தமிழில் தருகின்றது.

மணி மந்திர ஔடதங்கள் பயன் தருவன வென்பது நாமறிந்தது. ''மணி சிவலிங்கமே. மந்திரம் திருவைந்தெழுந்தே, ஔடதம் திருநீறே'' என்று ஞானநூல்கள் கூறுகின்றன. சிவலிங்கம், சலலிங்கம், அசலலிங்கம் என இரு திறப்பட்டு, முன்னது திருக்கோயிலில் இருக்கும். பின்னது ஆசாரியர் அடியார்களது திருவுள்ளத்தில் எழுந்தருளியிருக்கும். சிவலிங்கத் திருமேனிகள் பல திறப்பட்டவை; பச்சைமண், சுட்டமண், தாரு ஆகியவற்றுலான லிங்கங்கள், ஒன்றினென்று பதின்மடங்கும், லோகசம் இவற்றினூறுமடங்கும், ரெத்தினம் இவற்றின் அநந்த மடங்கும் பாணம் கோடிமடங்கும் ரசம் அதினும்கோடிமடங்கும் சுயம்பு அதினும் அதிக மடங்கும் சிறப்புடையன. ஒருகோடி சாளக்கிராமத்துக்கு ஒப்பானது ஒரு ஸ்படிகலிங்கமென்றும் 12 லெக்ஷம் ஸ்படிகலிங்கத்துக்கு ஒப்பானது ஒரு பாண லிங்கமென்றும் சொல்லுவர்.

சிவலிங்கங்கள் சுயம்புலிங்கம் காண லிங்கம் தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுட லிங்கம் முதலாகப் பல திறப்பட்டவை. சுயம்பு தானே தோன்றியது. காணம் உமையம்மை யாதியோராலும், தைவிகம் விஷ்ணுவாதியோராலும் ஆரிடம் அகத்தியர் ஆதியோராலும், மானுடம் மனிதர்களாலும் பிரதிட்டை செய்யப்பெற்றவை.

சிவலிங்கத்தின் தத்துவங்களும் சிறப்பும் வேதாகமம் முதலிய முதல் நூல்களிலும் அவற்றின் வழிவந்த ஞானநூல்களிலும் செவ்வையாகத் தெளிவுபடுத்தப் பெற்றுள்ளன. உண்மையனுபவமுடைய ஞானசாரியரிடம் விதிப்படி தீக்ஷைபெற்று, அவருணர்த்த உணர்ந்தவர்க்கே சிவலிங்க நுட்பங்கள் தெளிவாகும். ''தவந்தரு ஞானத்தோர்க்கு இத் தன்மைதான் தெரியும் அன்றே'' என்பது சிவஞானசித்தியார்.

நலமே தழைக.

★

தாயுமானவர் சுட்டும் தனிப்பெரு நெறி

மகாவித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார்

நம் தண்டமிழ் நாடு தொன்றுதொட்டே சீரிய பண்பாடுற்றுத் திகழ்வதோடு 'பண்பாடுகள் அனைத்திலும் ஆன்மீகத் துறையே தலையாய பண்பாடு' என்னும் கொள்கையை யுடையது. இந்நிலைமை கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதலாகத் தொடர்ந்து தெளிவாகக் காணப்படுகின்றது. உயர்திரு. மறைமலை யடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் முதலியோரது கருத்துப்படி நோக்கினால், **மாணிக்க வாசகர்** காலம் முதலாக—அஃதாவது, கி.பி. 3 அல்லது 4ஆம் நூற்றாண்டு முதலாக இந்நிலைமை தெளிவாய்ப் புலப்படுகின்றது எனலாம்.

அறுபான் மும்மை நாயன்மார்களுள் **சண்டேசுரரும், கண்ணப்பரும்** இன்றைய வரலாற்று முறையில் 'எக்காலத்தவர்' என்பதை அறிய இயலவில்லை. ஆயினும், 'அவர்கள் பழங்காலத்தவர்' என்பது தெள்ளிது. **காரைக்கால் அம்மையாரது** காலப் பழமையையும் அவ்வாறுனதாகக் கூறலாம். அவர்கள் நிற்க, **'கோச்செங்கட் சோழ நாயனர், புகழ்ச் சோழ நாயனர், மூர்த்தி நாயனர் ஆகியோர் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர்கள்'** என்பது இன்றைய வரலாற்று முறையிலே அறியப்படுகின்றது **திருமூலர்** அவர்களை யடுத்து வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றார்.

திருமூலரை அடுத்துத் **தேவார ஆசிரியர் மூவர்**, பின்னர் **ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள்**, அவர்கட்குப் பின்னர்ப் **பட்டினத்தடிகள்**, அவருக்குப் பின் **நம்பியாண்டார் நம்பிகள்**, அவருக்குப் பின் **சேக்கிழார் நாயனர்** என்ற இவர்கள் திருமுறை ஆசிரியர்களாய் விளங்குகின்றார்கள். இவர்களது காலப் பின்னெல்லை கி.பி. 12ஆம் நூற்றாண்டாகச் சொல்லப்படுகின்றது.

கி.பி. 13, 14ஆம் நூற்றாண்டில் **சந்தானாசாரியர்களும்** அவர்களோடு ஒத்த பிற **சாத்திர ஆசிரியர்களும்** தமிழ் நாட்டில் பெருஞ் சிறப்புற்றுத் திகழ்ந்தனர். **அருணகிரிநாதரும்** இக்காலத்தில் தவறாது குறிப்பிடத்தக்கவர்.

அவர்கட்குப்பின்கி.பி.15,16ஆம்நூற்றாண்டுகளிலும் சைவ சாத்திரங்களை அருளிச் செய்த **பரம்பரை ஆசிரியன்மரர்** விளங்கினர். கி.பி. 16ஆம் நூற்றாண்டிலும்,17ஆம் நூற்றாண்டிலும் முறையே தோன்றியருளிய **ஸ்ரீகுமர குருபர அடிகளும், ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகளும்** தங்கள் அருள் நலம் கனிந்த அரிய தமிழ்ப் பாடல்களாலும், சித்தாந்த நுண்பொருட் கருவூலங்களாய் அமைந்த உரைகள் உரைநடைகளாலும் சைவத்தின் தனிச் சிறப்பு விளங்கச் செய்தமை நாடறிந்தது.

கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டினரான **திருசிரபுரம் மகாவித்துவான், மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்** கடல்மடை திறந்தாற் போலச் சைவ உலகிற்கு வழங்கிய சிற்றிலக்கியங்கள் பேரிலக்கியங்கள் தாம் எத்துணைய!

இவரெல்லாம் செந்தமிழ்ப் பாடல் பற்றிச் சிறப்பாக அறியப்படுபவர். இவ்வாறன்றி, அநுபூதியளவிலே நின்று உலகிற்கு அருள் நலம் கனிய அருள்செய்த பெரியோர்கள் எத்துணையர்! இவர்களுள் **சைவ ஆதீன முதலாசிரியர்களையும், வழிநிலை ஆசிரியர்களையும்** சிறப்பாகக் குறிக்கலாம்.

'சித்தர்' எனப் பேறுகின்ற பெரியோர்கள் பற்பல காலங்களில் தோன்றித் தமிழ் நாட்டிற்கே உரிய தனிச் சிறப்பினராய் வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றனர்.

இவ்வாறு வழிவழி வழக்கினராய் வந்த பெரியோர்களுள் ஸ்ரீ குமர குருபரருக்குப் பின் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் **ஸ்ரீதாயுமான அடிகளைப் பற்றிய** ஒரு சில சிந்தனையே இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

சந்தான குரவர்கட்குப் பின் தமிழில் பக்தி இலக்கியங்கள் பல்க, அவற்றுள் தோத்திரப்

பாடல்கள் சிறப்பிடம் பெற்றன. அத்தகைய பாடல்களுள் **தாயுமான அடிகள் பாடல்கள்** ஒரு தனிச் சிறப்பிடத்தைப் பெற்று, மக்கள் உள்ளங்களை பக்தித் துறையில் பெரிதும் ஈடுபடச் செய்தன. அதனல் அப்பாடல்கள் தமிழ்நாட்டில் மிக்க செல்வாக்கைப் பெற்று, எவ்விடத்திலும், எவ்வகை மக்களிடத்தும் பரவலாக வழங்கின.

தாயுமானவருடைய பாடல்கள் பக்தித் துறையோடு தத்துவத்துறையையும் பற்றின வாகும். ஆகவே, பக்தி காரணமாகத் தாயு மானவர் பாடலில் ஈடுபட்ட மக்கள் அவரது பாடலில் சொல்லப்பட்ட தத்துவத்தையே, 'உண்மை நெறி' எனக் கொள்ளும் நிலை, தானுக அமைந்தது. ஆயினும், அவரது 'தத்துவ நெறி இன்னது' என்பதை அறிதல் பொது மக்கட்கு இயலாதாயிற்று.

'தத்துவம்'—என்றுலே வேதாந்தந்தான் என்றும், 'வேதாந்தம்' என்பது ஏகான்ம வாதக் கொள்கைதான் என்றும், 'அக்கொள் கையே அத்துவித மதம்' என்றும் எண்ணுகின்ற ஒரு நிலை தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் பொது வாக ஏற்பட்டது. 'ஒருகாலம்'—என்பதை, கி.பி. 18, 19ஆம் நூற்ருண்டு என்றே சொல்ல லாம். அந்நிலையில் 'தாயுமானவர் சுட்டும் தத்துவ நெறி ஏகான்ம வாத நெறியே, எனப் பலர் பொது மக்கள் உள்ளத்தில் பதிவித்தலை மேற்கொண்டனர். அதற்கு அவருடைய பாடல்களில் அமைந்துள்ள சில தத்துவச் சொல் வகைகளும், சில பாடல்களில் கடவுளைச் சிறப்பாகப் பெயர் சொல்லிச் சுட்டாது, பொதுவாகக் கூறுதலும் காரணங் களாய் அமைந்தன.

தமிழ் நாட்டில் சிறந்து விளங்கும் மதங்கள் இரண்டு. அவை **சைவமும், வைணவமும்** ஆகும். இவை தங்களுக்குள் ஒன்றை ஒன்று மறுப்பனவாயும் உள்ளன. எனினும் தத்துவத் துறையுள் ஏகான்ம வாதம் இவை யிரண்டனுள் எந்த ஒன்றிலும் சேராமல் தனித்து நிற்பதா யினும், பக்தித் துறையில் இந்த இரண்டையும், 'சமம்' எனக் கூறிவருகின்றது. தாயுமானவர் பாடலில் சிலவற்றில், **'வேதாந்த சித்தாந்த சமரச நிலையே நன்னிலை'** எனக் கூறப்படு கின்றது. இந்தச் சமரசத்திற்கும், சைவ வைணவ சமரசத்திற்கும் யாதும் தொடர் பில்லை. எனினும், 'சமரசம்' என்று கூறியவுடன், 'அஃது அத்துவித மதத்தின் நிலை',—அஃதாவது 'ஏகான்ம வாத மதத்தின் நிலை' என்று மக்கள் கருதிவிடுகின்றனர். அதை வாய்ப்பாகக் கொண்டு, ஏகான்ம வாதிகள் சிலர் 'தாயு மானவர் ஏகான்ம வாத அநுபூதிமான்' என்று பறை சாற்றுகின்றனர்.

இனி, 'இவ்வுலகம் உண்மையன்று; கானற் சலம் போல வெறுந் தோற்ற மாத்திரமாய்க் காணப்படுகின்ற ஒரு பொய்ப் பொருள்' என்பது ஏகான்ம வாதக் கொள்கை. தாயு மானவர் பாடல்கள் சில அக்கருத்தைக் கூறுவன போலக் காணப்படுகின்றன. இதுவும் ஏகான்ம வாதிகள் கூற்றிற்கு ஒரு துணையாகின்றது. தாயுமானவர் பாடல்களுள் சில இத்தகைய வாதலை இங்குச் சிறிது நினைவுகூர்தல் பொருந்துவதே.

அத்துவித வத்துவைச்
சொற்பிரகா சத்தனியை
அருமறைகள் முரசறையவே
அறிவினுக் கறிவாகி
ஆனந்த மயமான
ஆதியை அநாதி ஏக
தத்துவ சொரூபத்தை
மதசம் மதம்பெருச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல
நிராலம்ப ஆலம்ப
சாந்தபத வியோம நிலையை
நித்தநிர் மலசகித
நிட்பிரபஞ் சப்பொருளை
நிர்விடய சுத்தமான
நிர்விகா ரத்தைத்
தடத்தமாய் நின்ருெளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்

சித்தம்அறி யாதபடி
சித்தத்தில் நின்றிலகு
திவ்ய தேசோமயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர்
தற்பரம தானபர
தேவதையை அஞ்சலிசெய்வாம்.

நிர்க்குண நிராமய
நிரஞ்சன நிராலம்ப
நிர்விடய கைவல்யமாம்
நிட்கள அசங்கசஞ்
சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்த முத்த
தற்பரவிச் வாதீத
வியோமபரி பூரண
சதானந்த ஞான பகவ
சம்புசிவ சங்கர
சர்வேச என்றுநான்
சர்வகா லமும்நினைவனே
அற்புத அகோசர
நிவர்த்திபெறும் அன்பருக்
கானந்த பூர்த்தி யான
அத்துவித நிச்சய
சொரூ சாட்சாத்கார
அனுபூதி அனுகூதமும்
கற்பனை அறக்காண
முக்கணுடன் வட நிழற்
கண்ணூ டிருந்த குருவே
கருதரிய சிற்சபையில்
ஆனந்த நிர்த்தமிடு
கருணு கரக்கடவுளே.

நித்தியமாய் நின்மலமாய்
நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச்
சமீபமுமாய்த் துரியநிறை
சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய்
ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்ற ஒன்றைச்
சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்.

இப்பாடல்களில் வடசொற்கள் மிகுதியாய் வந்துள்ளன; அச்சொற்கள் எல்லாம் அத்துவித மதத்தின் வழக்கம் என்பதும், அதனுல் அவைகளில் சொல்லப்பட்ட பொருள்களும் அத்துவித மதச் சார்புடையனவே என்பதும் ஏகான்ம வாதிகள் கூறுவன.

இனி,

''இந்திரசா லங்கனவு
கானலின்நீர் எனஉலகம்
எமக்குத் தோன்றச்
சந்ததமும் சிற்பரத்தால்
அழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க''

என்னும் பகுதியும்,

''தானுன தன்மயமே
யல்லால் ஒன்றைத்
தலையெடுக்க ஒட்டாது
தலைப்பட் டாங்கே
போனாலும் கற்பூர
தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது
புலம்வே றின்றாம்;
ஞானகா ரத்தினெடு
ஞேயம் மற்ற
ஞாதிருவும் நழுவாமல்
நழுவி நிற்கும்;
ஆனாலும் இதன்பெருமை
எவர்க்கார் சொல்வார்;
அதுவானல் அதுவாவார்;
அதுவே சொல்லும்''

என்னும் பாடலும், இவைபோல்வன பிறவும் முற்றிலும் ஏகான்ம வாதப் பொருளையே வலியுறுத்திக் கூறுவன எனவும், 'அதனுல் தாயுமானவர் நெறி ஏகான்ம வாத நெறியே எனவும், சிலர், தாம் மயங்கியோ மயங்காதோ கூறி, மக்களை மயக்குவர்; அதனுல், அடிகள்

சுட்டும் நெறி உண்மையான் உணர்தற்பால தாகும்.

அடிகள், திருமறைக் காட்டில் வாழ்ந்த சைவ வேளாண்குடி மக்களுள் ஒருவாரய்ச் சிறந்து விளங்கிய **'கேடிலியப்பப் பிள்ளை'** என்பவர்க்கு இரண்டாம் மகனுராகத் தோன்றியவர். இவர் தமையனுர் **'சிவ சிதம்பரம் பிள்ளை'** என்பவர். இவரை இவர் தம் தந்தையார் பெரிய தகப்பனுர்க்குச் சுவீகாரப் புதல்வராகத் கொடுத்துவிட்டுப் பின்னர்த் தமக்கு மகப்பேறில்லாமையால் வருந்தித் திருச்சிராப்பள்ளி இறைவனுகிய **தாயுமானப் பெருமானை** வேண்டி நின்றதன் பயனுகத் தமக்குப் பிறந்த இரண்டாம் திருமகனுர்க்கு, **'தாயுமானவர்'** என்று அவ் இறைவன் பெயரையே இட்டு மகிழ்ந்தார். எனவே' **தாயுமானவர்**, பிறந்தது, வளர்ந்தது எல்லாம்சைவசமயச் சூழலிலேயாகும். வளர்ந்து கல்வி கற்றுச் சிறந்த காலங்களிலும் ஓதியும், உணர்ந்தும் உளம் மகிழ்ந்தன **சைவ சமய தோத்திர சாத்திர நூல்களேயாகும்.**

தந்தையார் திருச்சிராப்பள்ளியில் அரசு செலுத்திய **விசய ரகுநாத சொக்க லிங்க நாயகர்பால்** உயர் அலுவலராய் இருந்தவர். அதனுல் மகனுரார்கிய தாயுமானவர்க்கு இளமையில் திருச்சிராப்பள்ளித் தொடர்பே இருந்தது. முன்னைத் தவமுதிர்ச்சியால் **தாயுமானவர்** நூலறிவோடு நில்லாது குருவருளால் அனுபூதி நிலையைப் பெறப் பெரிதும் விரும்பினுர். அதற்கு ஏற்பத் திருவருளால், **'ஸ்ரீ மௌன குரு'** என்னும் ஞானுசிரியர் அவருக்குக் குருவாக வாய்த்து, ஞானத்தை யுணர்த்தினுர். அவர் உணர்த்திய ஞானம் **சைவ சித்தாந்த ஞானமே யன்றி**, ஏகான்ம வாத ஞானம் அன்று என்பது அடிகளது பாடல்களிலே அங்கை நெல்லியென இனிது விளங்கிக் கிடக்கின்றது.

''எந்தைவட வாற்பரம
குருவாழ்க! வாழஅரு
ளியநந்தி மரபு வாழ்க!
என்றடியர் மனமகிழ
வேதாக மத்துணி
பிரண்டில்லை; ஒன்றென்னவே
வந்தகுரு வே! வீறு
சிவஞான சித்தி நெறி
மௌனுேப தேசகுருவே!
மந்த்ரகுரு வே! யோக
தந்த்ர குரு வே!மூலன்
மரபில்வரு மௌன குருவே''

என்னும் அவரது **குருவணக்கப் பகுதி** குறிக் கொண்டு நோக்கத் தக்கது. **சிவஞான சித்தி நெறி**—சிவஞானத்தால் அடையப்படும் வீடு பேற்றைப் பொருந்தியுள்ள நெறி, முத்தியை **'சித்தி'** என்றலும் ஒருவகை வழக்கு. இவ் இங்கு இவர், **''சிவஞான சித்தி''** என்றது அப்பெயருடைய சித்தாந்த நூலையே எனக் கொண்டு, அந்நூலையே மௌனகுரு இவருக்கு உபதேச நூலாகத் தந்தார் எனவும் கூறுவர்.

அடிகள் தமது திருச்சிரகிரி **தட்சிணுமூர்த்தி** வணக்கம் பத்துப் பாடல்களிலும் அ மூர்த்தியை **''சித்தாந்த முத்தி முதலே''** என விளித்துள்ளார். தமது ஞான குருவாகிய **மௌன குருவை** அந்தச் சித்தாந்த முத்தி முதல்வர்பால் உபதேசம் பெற்ற **திருமூல** மரபினராக அடிகள் குறிக்கின்றுர். இவ் வாற்ருல் இவரது **குடிப் பிறப்பு ஞானமும் கல்வி ஞானமும், உபதேச ஞானமும்** ஆகிய எல்லாம் சைவ சித்தாந்தத் தனிப்பெரு ஞான மாகவே அறியப்படுகின்றனவன்றி, ஏகான்ம வாத ஞானத்தோடு ஒருசிறிதாயினும் தொடர் புடையதாகத் தோன்றவில்லை. மேலும் அவரது பாடல்களுள் கீழ்க் காணும் இ பாடல்கள், அவரது ஞானுநுபவம், சைவ சித்தாந்த ஞானுநுபவமே யன்றி வேறு காமையைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன

''காரிட்ட ஆணவக்
கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்தஎமை
வெளியில் விட்டு

……………………
பெரிய புவனத்தினிடை ……
பெரிய விளையாட்டமைத்து
இரவு பகல் இல்லாத
பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில்கொண்மின் என்று
''சீரிட்ட……எந்தையே!
சித்தாந்த முத்தி முதலே''

''கருமருவு குகையனைய
காயத்தின் நடுவுள்
களிம்புதோய் செம்பனைய யான்
காண்டக இருக்க நீ
ஞானஅனல் மூட்டியே
கனிவுபெற உள்ளுருக்கிப்
பருவம தறிந்துநின்
னருளான குளிகையொடு

பரிசித்து வேதி செய்து
பத்துமாற் றுத்தங்க
மாக்கியே பணிகொண்ட
பட்சத்தை என்சொல்லுகேன்
…………………………
சிரகிரி விளங்கவரு
தட்சிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே''

மேல் இவர்,

''**இந்திரசா லங்கனவு**
கானல்நீர் எனஉலகம்''
எனக் கூறியதாகக் காட்டப்பட்ட பகுதிக்கு இவர் வேறோர் இடத்தில் தரும் விளக்கம்,

''வருவான்வந் தேன்எனல்போல்
மன்னி அழியும் சகத் தைத்
தெரிவாக இல்லைஎன்ற
திரம் பாரபரமே''

''**அந்தரப் புட்பமும்**
கானலின் நீரும்ஓர்
அவசரத் துபயோகமோ''
……மூலன் - மரபில் வரு மௌன குருவே'
முதலியனவாம்.

இனி,

''பன்முகச் சமய
நெறி படைத்தவரும்
யாங்களே கடவுள் என்றிடும்
பாதகத்தவரும்
வாத தர்க்கமிடு
படிறரும் தலை வணங்கிடத்
தன்முகத்தில்உயிர்
வரவழைக்கும் எமதருமன்''
– சிற்சுகோதய விலாசம் - 10

என்னும் பகுதியில் அடிகள், ''**யாங்களே கடவுள் என்றிடும் பாதகத்தவர்**'' என்றது, ''**அஹம் பிரஹ்மாஸ்மி**'' என்னும் வேதாந்த மகாவாக்கியத்திற்கு **ஏகான்ம வாதப்** பொருள் கொண்டு மயங்குவாரை வெளிப்படையாகவே மறுத்தலால், அவரது பாடலுக்கு யாதோ ரிடத்தும் ஏகான்ம வாதப் பொருள் கொள் ளுதல் பிழை என்பது இனிது விளங்கும்.

இங்ஙனம் அடிகள் சைவ சித்தாந்தச் செந் நெறியினைப் பொதுவாக விளங்க வைத்தலே யன்றி, மிகச் சிறப்பாக எடுத்து வலியுறுத்தும் இடங்களும் நோக்கற்பாலன.

''**சைவ சமயமே சமயம்**
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டும் **இந்தக் கருத்தைவிட்டுப்**
பொய்வந் துழலும் சமயநெறி
புகுத வேண்டா; முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே''

''விண்ணவர், இந்திரன்
முதலோர், நார தாதி
விளங்குசுத்த ருஷிகள்,கன
வீணை வல்லோர்,
எண்ணரிய சித்தர்,
மனுவாதி வேந்தர்,
இருக்காதி மறைமுனிவர் எல்லாம்…
திணியநல் லறிவால்
இச்சமயத் தன்றோ

செப்பரிய சித்திமுத்தி
சேர்ந்தார் என்றும்''
''செப்பரிய சமயநெறி
எல்லாம் தம்தம்
தெய்வமே தெய்வம் எனும்...
இப்பரிசாம் சமயமுமாய்
அல்லவாகி
யாது சமயமும் வணங்கும்
இயல்பதாகி''

''மயலறு மந்திரம்
சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல் வணங்க
மௌன மோலி
அயர்வறச் சென்னியில்
வைத்து **ராசாங்கத்தில்**
அமர்ந்ததுவைதிகசைவம்;அழகிதந்தோ''

''பேசா மோனம் - வைத்திருந்த
மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்திராதி போகநலம்
பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே
றில்லே,யில்லே;
சந்தான கற்பகம்போல்
அருளைக் காட்டத்
தக்கநெறி யிந்நெறியே
தான் சன்மார்க்கம்''

என்பன முதலாகப் பலபடவரும் அடிகளது அருள்வாக்கினை நோக்கி, அவர் '**இம்மை மறுமை**' வீடு? என்னும் மூவகை நலங்களேயும் அடைதற்குரியதாக மக்கட்கு **ஒரு படித்தாக அறுதியிட்டுச் சுட்டிக் காட்டும் தனிப் பெரு நெறி சைவ சித்தாந்த நெறியேயன்றிப் பிறிதொன் றன்று**, என்பது தெள்ளத் தெளிய விளங்குகின்றன்ருே! மேற் கூறிய வாக்குகளில் அடிகட்குத் தாம் காட்டும் நெறியினிடத்து எத்துணே ஆர்வமும், உறுதிப் பாடும் உள்ளன என்பதும் குன்றின் மேல் இட்ட விளக்குப் போல ஒளிர்கின்றன அன்ருே!

இச் சைவ நெறியின் அருமைப்பாடு ஒன்றை அடிகள் எடுத்துக் கூறுதல் இங்கு இன்றியமையாது உணரற்பாற்று. அது,

''சன்மார்க்க ஞானமதின்
பொருளும் வேறு
சமயசங்கேதப் பொருளும்
தான்ஒன்ருகப்
பன்மார்க்க நெறியினிலும்
கண்டதில்லே''

என்பது. 'சைவத்தின் சடங்கு முறைகள் அனைத்தும் அதன் தத்துவக் கொள்கைகளை உணர்த்துவனவாகவே இருத்தலைக் காண்கின்ருேம். இந்நிலை வேறு எச்சமயத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. அவற்றின் சடங்கு முறைகட்கும், அவற்றின் தத்துவக் கொள்கைக்கும் யாதொரு தொடர்பும் இருப்பதாகத் தோன்றவில்லை, என்பது இதன் பொருள் எனவே,

''**கிரியையெ**ன **மருவும் அவை**
யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம்''

எனச் **சிவப்பிரகாச நூல்** உணர்த்தும் உண்மை, சைவத்திற்கே பொருந்துகின்றது. ஆகவே, 'மக்கட் பிறப்பின் குறிக்கோளாகிய **மெய்யுணர்வுப் பேற்றைப் பெறுதற்குச்** சைவ சமயமே ஏற்ற சமயம் ஆகின்றது என்றதாம்.

இவை யெல்லாம் **சிவஞான சித்தியார்** முதலிய சைவ சித்தாந்த சாத்திரங்களிலே பெறப்பட, அவற்றையே அடிகள் இன்னும் இனிது விளங்க எடுத்துக்கூறுகின்ருர். ஆதலால், அடிகளது நெறி சித்தாந்த சைவ நெறியன்றி வேறு யாதாகும்!

இன்னும் இவர், தமக்கு உய்யும் நெறி காட்ட,

''துன்றுமனக் கவலேகெடப்
புலேநா யேனேத்
தொழும்புகொளச்
சீகாழித்துரையே! தூது
சென்றிடவே பொருளே வைத்த
நாவலோய்! நம்
சிவன் '**அப்பா**'
என்ற அருட்செல்வத் தேவே''

''தேவர்தொழும் **வாதவூர்த் தேவே**'' 'வாருங்கள்' என்று அழைக்கின்றார்.

எந்நாட் கண்ணியில் குருமரபு வணக்கத்தில் நந்தி மரபினையே எடுத்துக் கொண்டு **அகச் சந்தான புறச் சந்தான குரவர்கட்கு** வணக்கங் கூறினர். அவருள் **மெய்கண்டார்க்குக் கூறிய,**

பொய்கண்டார் காணுப்
புனிதம் எனும் அத்துவித
மெய்கண்ட நாதன்
அருள் மேவுநாள் எந்நாளோ''

என்னும் கண்ணி, **தாயுமானவர்** தம் பாடல்கள் பலவற்றில் ஆங்காங்குக் கூறும் **அத்துவிதம்,** மெய்கண்டார் விளக்கிய **சுத்தாத்துவிதமே யன்றிக்** கேவலாத்துவித விசிட்டாத் துவிதங்களாகிய பிற அத்துவிதங்கள் அன்று என்பது தேற்றம்.

இவற்றால் எல்லாம், தாயுமான அடிகளது நெறியை உணரப் புகுவாரை, 'அவரது நெறி ஏகான்மவாத நெறியே, எனக் கூறித் திசை மாற்றிச் செலுத்துவாரது செயல் நன்றாகாமை விளங்கும்.

இனி மற்றொன்றும் இங்கு உடன் உணர்தற் பாலது. அடிகளது பாடலில் அவர், ஞானத்தினும் யோகத்தில் மிக்க அவா உடையர் போலத் தோன்றும். அவர் யோகத்தைச் சிவஞானத்திற்குச் சிறந்த வாயிலான - சாதனமான சிவயோகமாக விரும்புதல் அல்லது, வெறும் அடயோகமாக விரும்பவில்லை என்பது கீழ்க் காணும் பாடலால் விளங்கும்.

பத்திநெறி நிலைநின்று
நவகண்ட பூமிப்
பரப்பைவல மாக வந்தும்
பரவையிடை மூழ்கியும்
நதிகளிடை மூழ்கியும்
பசிதாகம் இன்றி எழுநா
மத்தியிடை நின்றும்உதிர்
சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்கடைத்தும்
மவுனத் திருந்தும்உயர்
மலைமுழை தனிற்புக்கு
மன்னுதச நாடி முற்றும்
சுத்திசெய் தும்மூல
பிராணனோ டங்கியைச்
சோமவட் டத்தடைத்தும்
சொல்லரிய அமுதுண்டும்
அற்பஉடல் கற்பங்கள்
தோறும்நிலை நிற்க வீறு
சித்திசெய்தும் ஞான
மலது கதி கூடுமோ?
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு
தட்சிணு மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

இதன்கண் அடிகள் யோகத்துடன் தல யாத்திரை, தீர்த்த யாத்திரை முதலியனவும் சிவஞானத்தோடு கூடாதபொழுது பயனில்லன ஆதலைக் குறித்தமை அறியத் தக்கது.

''கங்கை யாடில் என்!
காவிரி யாடில்என்!
கொங்கு தண்கும
ரித்துறை ஆடில்என்!
ஓங்கு மாகடல்
ஓதநீர் ஆடில்என்;
எங்கும் ஈசன்
எனுதவர்க் கில்லையே''

திருமுறை-5.

என்பது முதலிய திருமுறைத் திருவாக்குகளும் இதனையே அறிவுறுத்துவன,

''**யோகில் - தருவதோர் சமாதி]**
தானும் தாழ்ந்துபின் சனனம்
சாரும்''

''கரணங்கள் கெடஇருக்கை
முத்தியாம் என்னில்
....
மரணம்கொண் டிட,உறங்க,
மயங்கிமூர்ச் சிக்க,
வாயுத்தம் பனைபண்ண,
வல்விடத்தை அடையச்

சரணங்கள் புகுநிழல்போல்
தனைஅடையும் சமாதி;
தவிராது மலம்; இதுவும்
பசுஞான மாகும்;
அரணங்கள் எரித்தவன்றன்
அடியை அறிவிறந்தங் (கு)
அறிந்திடீர் செறிந்த துகள்
அகற்றி டீரே''
என்பன சாத்திர உண்மைகள்.

இவற்றாலும் அடிகளது நெறி இனிது விளங்குதலை அறிந்து மக்கள் பயன் அடைவார்களாக.

உ
சிவமயம்

மணிவிழா வாழ்த்துமடல்

மணிவிழாச் செல்வர்:— உயர்திரு முரு. பழ. இரத்தினம் செட்டியார்
— திருமதி. மீனாட்சி ஆச்சி.

பண்டிதர்க்கு மாமணியும் பாவளர்க்கும் தமிழ்க்கடலும் பயின்ற மண்ணில்
கண்டவரும் கேட்டவரும் போற்றிடவே சைவநெறி காட்டும் செம்மல்
மண்டுபுகழ்ப் பெருவணிகர் இரத்தினமாம் ஐயாவின் மணிவி ழாவில்
வண்டமிழால் கவிபாடிப் பேரனுடன் பேர்த்தியரும் வாழ்த்து கின்றோம்.

எழுதாத வேதங்கள் எழுதரிய பெருமானை இதயம் தன்னில்
எழிலாக எழுதியவர்; தனவணிகப் பெருமக்கள் என்றும் செய்யும்
தொழிலாக வாணிகமும் தொண்டாகச் சைவமுமே தொடர்ந்தி ருக்க
விழியாலே இலக்கியத்தின் மெய்ப்பொருளைக் காட்டுகிற மேன்மை யாளர்.

சிங்கப்பூர் வானொலியில் சிறுவருக்குக் குறள்தருவார் செந்த மிழ்தேர்
சங்கத்தில் ஒளிவிரிப்பார் சித்தாந்த மாநாட்டுத் தலைமை ஏற்பார்
கங்கையணி கடவுளினால் முடியாத செயல்களையும் காட்டி நிற்பார்
எங்களுக்கோ ஆயாவின் இணையில்லா அன்பைப்போல் இணங்கி நிற்பார்.

செல்வத்தைச் சேர்த்திடுவார் செலவென்றால் சினந்திடுவார் சிக்க னத்தால்
பொல்லாத பெயரின்றி ஆயாவின் கருணையினால் புகழைப் பெற்றார்
நல்லவர்க்கு நல்லவராய் நாடறிந்த பெரியவராய் நாங்கள் போற்றும்
வல்லவராய்த் திகழ்கின்ற இரத்தினமாம் ஐயாவை வாழ்த்து கின்றோம்.

சிரத்தாலே பணிவதனால் சிவபெருமான் திருவடியாம் செல்வம் பெற்றார்
கரத்தாலே தொட்டமையால் கட்டுரைசேர் தாளுக்கும் கருணை செய்தார்
இரத்தினமாய்த் திகழ்கின்றார் மீனாட்சி ஆயாவும் இணையப் பெற்றார்
தரத்தாலே உயர்ந்தவரைச் சிறியவர்கள் வாழ்த்துகிறோம் தமிழ்போல் வாழ்க!

அன்புள்ள

பழ. மு. பழநியப்பன் பழ. மு. இலக்குமணன்
பழ. மு. விசாலாட்சி பழ. மு. இரத்தின வடிவேல்.

மணிவாசக நாயகி

டாக்டர் சுப. அண்ணாமலை

இறையடியார் பலர் இறைவன் தமக்கு அருளிய பேரின்பத்தைக் காதலின்ப நுகர்வாகவே உணர்ந்து, அதனை இலக்கியமாகப் பாடி வெளியிட்டுள்ளனர். அவருள் மணிவாசகரும் ஒருவர். அவர் பாடியருளிய திருவெம்பாவை அவரது காதல்நுகர்வின் வெளிப்பாடாக விளங்குகின்றது. மகளிரின் கூற்றாகப் பாடல் செய்தற்கு மார்கழிப் பாவை நோன்புக் காலத்தில் அவர்க்கு வாய்ப்புக் கிடைத்தது. அதனைத் தம் காதலின்ப அனுபவத்தினை வெளிபிடுவதற்குப் பயன்படுத்திக் கொண்டார். அங்ஙனம் அவர் பாடிய திருவெம்பாவையில், உறங்கும் கன்னியரை எழுப்புவோராகவும், உறங்குவார் போற் கிடக்கும் மங்கையராகவும் வரும் பெண்டிரின் இறையனுபவமாக அவர் நுவலும் செய்திகள், உண்மையில் அவரது அநுபவம் பற்றியவையே. இக்கருத்தே பற்றித் திருவெம்பாவைப் பாடல் களுள் இரண்டினை இக்கட்டுரையில் விளக்குவோம்.

வைகறையில் துயிலுணர்ந்து தோழியருடன் நீராடச் செல்ல வேண்டிய பெண் ஒருத்தி, தன் காதலனாகிய சிவபெருமானிடம் ஊடல் கொண்டு, துயில் எழாமல் படுத்திருந்தாள். தோழியர் அவளை எழுப்பி, ஊடலையும் தணித்து, நீராட்டிற்கு அழைத்துச் சென்றனர். அவர்களின் சொற்களால் ஊடல் தணியப் பெற்ற அவள், ''இன்று நீர் எழுப்பும் வரை உறங்கி விட்டேன்; எம் பெருமானை வழிபடுதற்காக, முன்னரே எழுந்திராமை என் தவறே; நாளை இவ்வாறு துயில மாட்டேன். யானே வந்து உங்களை எழுப்புவேன்'' என்று கூறினாள். ஊடல் நீங்கப் பெற்று, 'இறைவனை மீண்டும் வழிபடுவேன்; அவனைக் காணவும் வாய்க்கும், என்று எண்ணினாள். உடனே நாணம் தோன்றியது. 'அவனிடம் ஊடல் கொண்டேனே! எந்த முகத்துடன் இனி அவனைக் காண்பேன்?' என்று எண்ணினாள். நாணம் மேலும் பெருகியது.

இந்த நாணத்தால் அவள் கண்கள் மான் போல் மருண்டு விழித்தன. தோழியர் வேறு எதுவும் கேட்பதற்கு முன் ஓடிவிட்டாள்.

மறுநாள் புலர்ந்தது. அவள் கூறியவாறு தோழியரை எழுப்ப வரவில்லை. அவர்கள் வியந்து, தாமே அவளது இல்லத்திற்குச் சென்றனர்.

காதல் கொண்டவரின் மனம் ஒரு நிலையில் நில்லாது. முன்னாள் இரவிலும் அவள் இறைவனை நினைத்து ஏங்கினாள். அவன் பிரிவை எண்ணி வருந்தினாள். முடிவில் ஒருவாறு வெறுப்படைந்தாள். அஃது ஊடலன்று. அவள் தன்மீதே கொண்ட வெறுப்பு, அதனால் வழிபாட்டிற்குச் செல்வதில் ஊக்கம் இன்றிப் படுத்துக் கிடந்தாள். தோழியர் அவளை எழுப்புகின்றனர்.

முதல் நாள், மான் போல் மருண்டு நோக்கி விட்டு, அவள் ஓடியதை நினைத்து, ''மானே'' என்று அழைக்கின்றனர். நேற்று நாணம் கொண்டவள், இன்று நாணம் இன்றி உறங்குகிறாளே என வியந்து எழுப்புகின்றனர்.

''மான் அனையாய், நேற்று யாம் சொல்லிய சொற்களால் ஊடல் உணர்ந்து, 'நாளை யானே உங்களை எழுப்புவேன்' என்று கூறினாய். அதனால், இறைவனைப் பாட விரும்பினாய் என்று நினைத்தோம். அவ்வாறு கூறியதை மறந்து, இப்போது உறங்குகின்றாயே! உன் எண்ணம் மாறி விட்டதா? உன் நாணம் எந்தத் திசையில் போயிற்று? சொல்வாயாக,—என்னும் பொருள் அமைய,

> ''மானே நீ நென்னலை நாளை வந் துங்களை
> நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
> போன திசை பகராய்''

என்று பாடுகின்றனர். அதற்கு விடை அவளிடமிருந்து வரவில்லை. ஆதலால் அவர்கள்

மேலும், 'அடி, வைகறை இன்னும் வரவில்லை என எண்ணித் துயிலுகின்றாயா' என்னும் பொருள்பட,

''இன்னும் புலர்ந்தின்றோ''

என்று வினவுகின்றனர்; இவ்வினாவிற்கும் அவள் விடை கூறவில்லை. 'இவள் சரியான நெஞ்சழுத்தக்காரிதான்! யாராலும் எட்ட முடியாதவன் ஆகிய சிவபெருமான் வலிய வந்து ஆட்கொண்டதை இவள் எண்ண வில்லையே!' என்று வியந்த தோழியர், அவளை இடித்துரைக்கத் தொடங்குகின்றனர்.

'பெண்ணே, நம் காதலனை எளியன் என்று எண்ணினையா? விண்ணுக்கும் மண்ணுக்கும் எவ்வுலகிற்கும் ஒரே தலைவன் அவன். ஆயினும் விண்ணகத் தேவர்கள் அவனை நண்ணவும் மாட்டார் அவ்வரிய பரம்பொருளாம் இறைவன், இழிவினும் இழிவாகிய நம்மை நினைத்தானே! நம்மிடமும் கருணைவைத்தானே! நாம் அவனை அழைக்கவும் அறிவில்லாமல் நின்றாலும், தானே வலிய வந்து, நம்மை அடிய வராக ஏற்றுக் கொண்டானே! அத்துடன் நில்லாது, நம்மைக் காதலியராகவும் ஏற்று அருள் செய்தானே! அவன் தந்த இன்பத்தை எவ்வாறு வருணிக்க வல்லோம்? ஒருவாறு அவன் திருவடிகளைப் புகழ்ந்து பாடத்தான் நம்மால் இயலும். அவ்வாறு பாடிக்கொண்டு நாங்கள் உன் வாசலுக்கு வந்தோம். எமது பாடல் உன் செவியில் விழவில்லையா? நீயும் எழுந்து வந்து எங்களுடன் சேர்ந்து பாட வேண்டாவா? இறைவனை நினைத்து அன்பு மொழிகள் கூற வேண்டாவா? அத்துணை இன் பத்தை அவன் அளித்திருக்கின்றான் அன்றோ?

சரி, இது கிடக்க நீ பாடாவிட்டாலும், இறைவன் புகழ் கூறா விட்டாலும், உன் தோழிய ராகிய யாம் உன் வாசலுக்கு வந்து நிற்கையில், எம்மை வரவேற்று, ஒரு சொல் சொல்லலாமே! ஒன்றுக்கும் வாய்திறவாமல் படுத்திருக் கின்றாயே! உனக்கு எத்துணை நெஞ்சழுத்தம்! என்ற பொருள் அமைய,

''வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்துஎம்மைத் தலையளித்து ஆட்
கொண்டருளும்
வான் வார் கழல்பாடி வந்தோர்க்கு உன்
வாய்திறவாய்''

எனப் பாடுகின்றனர். இறைவனது திருவடி இணையற்ற பேரழகு வாய்ந்ததாகலின், அதனை 'வான் கழல்' என்றும், அவை வீரக் கழல் அணிந்து விளங்கி, அடியார்களுக்குப் பாது காவலாக இருத்தலால் 'வார் கழல்' என்றும் சிறப்பித்தனர்.

இவ்விடிப்புரைக்கும் உள்ளே இருந்து விடை வரவில்லை. தோழியருக்குத் திகைப்பு மிகுந்தது. அவள் இறைவனை எண்ணி, மனம் உருகி, உடல் குழைந்து, மௌனமாய்க் கண்ணீர் சொரிந்து அமர்ந்திருக்கின்றாளோ என்று எண்ணினர். ஆனால் அவள் அந்நிலையில் இல்லை என்று தெரிந்தது. அப்பொழுது தோழியர், 'அடி காதகி' உன்னால் தானடி இவ் வாறு இருக்க முடியும்! உன் ஊடல் ஒரு புறம் கிடக்க. நீ உய்ய வேண்டுமாயின், எங்களுக்கும் மற்ற எல்லோருக்கும் தலைவனாகிய இறைவனைப் பாடுவாயாக.

''ஊனே உருகாய்! உனக்கே உறும்;
எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப்பாடு; ஏலோ
ரெம்பாவாய்''

என்று கூறி அவளை அழைத்துச் செல் கின்றனர்.இந்நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் முழுப் பாடலையும் காண்போம்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணுமே
போன திசைபகராய் இன்னம்
புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட்
கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன்
வாய்திறவாய்

ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோ
ரெம்பாவாய்

உறக்கமும் அன்று; விழிப்பும் அன்று என்னும் நிலையில்—அவ்விரண்டையும் கடந்த துரிய நிலையில்—படுக்கையிலிருந்து எழாமல் கிடக்கின்றாள் ஒருத்தி. அவளை அழைக்க வருகின்றனர் தோழியர். தம்மை விட அவளுக்கு இறைவனிடம் அன்பு மிகுதி என அவர்கள் அறிவர். ஆதலால், அவள் எழுந்திராமை கண்டு வியப்படைந்து, ''அம்மா, இவ்வாறும் உன்னால் இருக்க முடியுமா?'' என்ற கருத்தமைய,

''அன்னே இவையும் சிலவோ?''

என்று வினவுகின்றனர். 'இறையன்பில் ஆழ்ந்து, அவ்வின்பிற்குப் பொருந்தியவற்றையே நீ செய்வாய். அவனது வழிபாட்டிற்கு உரிய வேளையில் இப்படிப் படுத்திருப்பதும் செய்வாயோ'? என்பது இவ்வினவின் பொருள்.

அவள் இறைவனிடம் வைத்த அன்பால் செய்த செயல்கள் எல்லாம் அவர்கள் நினைவிற்கு வருகின்றன. அவற்றை அவளுக்கு நினைவூட்டும் முகமாகப் பேசத் தொடங்குகின்றனர்.

'அம்மா' தேவர்கள் எத்துணையோ பேர்! எத்துணையோ ஆற்றல் வாய்ந்தவர்! அவருள் யாராலும் நினைத்துப் பார்க்கவும் முடியாதவன் சிவபெருமான். அவனை ஒப்பவர் யாரும் இல்லை. ஆயினும், அடியார்க்கு எளியவன் அவன். ஆதலின் அவனது புகழ் மிக உயர்ந்ததாகும்.

''பல அமரர் உன்னற்கு அரியான், ஒருவன்
'இருஞ்சீரான்''

இவ்விறைவன் உன் காதலன். அவன் புகழை யன்றி வேறு எதுவும் நீ பேச மாட்டாய், கோயிலில் எக்காளம் ஒலிக்கக் கேட்டால், உன் வாய். தானகச் 'சிவ,சிவ' என்று கூறும். அடியார் கூட்டம், 'தென்னாடுடைய சிவனே போற்றி' எனக் கூறத் தொடங்கித் 'தென்னா' என்று கூறும் போது உன் கண்களில் நீர் பெருகும். தீயிடைப் பட்ட மெழுகு போல் உருகுவாய்.

''சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே
வாய்திறப்பாய்''
''தென்னா என்னாமுன்னம் தீசேர்
மெழுகொப்பாய்''

உன்னைக் காணுந்தோறும் நாங்களும் இறையன்பு மீதூரப் பெற்று, அவனை நினைந்து உருகி நிற்போமே! 'என் தலைவன்' என்று ஒருத்தியும், 'என் மன்னன்' என்று மற்றொருத்தியும், 'என் இன்னமுது' என்று பிறிது ஒருத்தியுமாகச் சொல்லி மகிழ்ந்தோமே! இப்போதும் எங்கள் நிலை இதுவே. யாம் கூறுவதைக் கேள்! உன் பழைய இயல்பிற்கு ஏற்ப, இறைவனின் திருப் பெயரைப் பல முறையும் கூறி நெக்குருகி நிற்பாயாக! இதை விட்டு இன்னும் நீ துயிலலாமோ?

''என்னானை என் அரையன் இன்னமுது
என்று எல்லோமும்''
சொன்னோம்; கேள் வெவ்வேறாய்;
இன்னம் துயிலுதியோ

என்று கூறுகின்றனர். இவ்வளவிற்கும் அவள் அசையவில்லை. எங்கோ தொலைவில் எக்காளம் ஒலிப்பதைக் கேட்டுச் 'சிவ சிவ' என்று கூறிய பெண்—சிவன் பெயர் கேட்ட கணமே கனிந்துருகி நின்ற பெண்—இவ்வாறு உறங்குகின்றாளே என்று வியந்தனர். இந்த மாறுதலை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அஃது உறக்கம் அன்றோ என்ற ஐயமும் அவர்களுக்குத் தோன்றியது. நாங்கள் கூறியதை யெல்லாம் கேட்டுக் கொண்டு, கல் மனத்துக் கசடர் போல் சும்மா கிடக்கின்றாயா?

''வன்னெஞ்சப் பேதையர் போல்
வாளாகிடத்தியால்''

என்றும் கேட்டு விடுகின்றனர். இறைவனை எண்ணிய அளவிலே உருகும் மென்மையான உள்ளமும், மிக்க அறிவும் உடைய அவள் இவ்வாறு கிடப்பது முறையோ என்ற பொருளில் இவ்வாறு கேட்கின்றனர். இறைவனை நினைத்து உருகாதவர்—அவன் திருப்பெயரை அன்புடன் கூறாதவர்—கல் மனம் படைத்தவரே; எத்

துணைக் கற்றிருந்தாலும் அறிவற்றவரே என்பது அவர்களின் திண்ணமான நம்பிக்கை.

இவ்வாறு கூறிவிட்டு, உடனே நாக்கைக் கடித்துக் கொள்கின்றனர். அன்பு மிக்க பெண்ணை இவ்வாறு பழித்து விட்டோமே என்று வருந்துகின்றனர். இந்தத் தன்மை அவளுக்கு ஒருகாலும் வாராது. ஆதலின், அவள் ஆழ்ந்த உறக்கமே கொண்டிருக்கின்றாள் என்று முடிவு செய்து,

'என்னே துயிலின் பரிசு!'

என வியந்து உரைக்கின்றனர். இவ்வாறு இறைக் காதல் கொண்ட மகளிரையும் தடுமாறச் செய்த அந்தப் பெண்ணின் உணர்வும் மெய்ப்பாடும் இலக்கியத்தில் 'சாக்காடு' என்ற அவத்தையாகக் கூறப்படும். காதல் மிகுதியால் தன்னை இழந்துவிடும் அவசம் இது,

சின்னங்கள் கேட்பச் சிவன் என்று தன்னை யறியாமல் கூறியவள்—தென்னா என்னா முன்னம் கண்ணீர் பெருக்கி உருகிப் பெருகியவள்—இந்த அவசந்தை அடையும் அளவிற்குக் காதலால் கனிந்து நிற்பாளே அன்றி, உலகரைப் போல் உறங்கிக் கிடப்பாளா?

★

சித்தாந்த வித்தகர்

முருகு சுப்பிரமணியன்
முன்னாள் ''தமிழ்நேசன்'' ஆசிரியர்,
கோலாலம்பூர், மலேசியா.

இன்று 60 ஆண்டு நிறைந்து மணிவிழாக் காணுகின்ற புலவர்மணி சைவ சித்தாந்த வித்தகர் திரு.முரு. பழ.இரத்தினம் செட்டியார் அவர்களுக்கு என் மனமுவந்த நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமது அயராத சமயத் தொண்டு மூலம் மலேசிய இந் தியர்களின் இதயத்தில் ஒளிமிக்க உயரிய இடத் தைப் பெற்றிருக்கும் சித்தாந்த வித்தகர் அவர் களுக்கு இத்தருணத்தில் மலேசிய இந்திய சமுதாயத்தின் சார்பிலும் குறிப்பாக இந்து சமயத்தைச் சார்ந்த பல லட்சம் மலேசிய மக்களின் சார்பிலும் நல்வாழ்த்துக்களைப் புலப் படுத்துவதும் என் கடமையாகும்

மலேசிய நாட்டில் வாழும் 13 இலட்சத் திற்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளி மக்களில் ஏறத்தாழ 90 விழுக்காட்டினர் சைவ சமயத் தையும் வைணவ சமயத்தையும் சார்ந்தவர் கள் ஆவர் அதனால்தான் இந்நாட்டில் இந்தியர்கள் வாழும்பகுதிகளில்-எல்லாம் - நகர்ப்புறங்கள், கிராமப்புறங்கள் தோட்டங்கள் அனைத்திலுமே மாரியம்மன் கோவில்—முனீஸ்வரர் கோவில்—காளியம்மன் கோவில்—பிள்ளையார் கோவில்-முருகன்கோவில் முதலான ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. குடியேறிய மக்களாக இருந்தாலும் தங்களின் பாரம்பரியப் — பண்பாடு — கலை — சமயம் — மொழி—சம்பிரதாயங்கள்—ஆகியவற்றைக் கை விடாமல் அவற்றைத் தங்கள் வாழ்க்கை முறை யாக நாளும் பேணி வருகிற அடிப்படை உள்ள சமுதாயமாக இங்கு உள்ள இந்து மக்கள் விளங்கி வருவது கண்கூடு. மலேசிய அரசாங் கமும் அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி சமய சுதந்தரத்திற்கும் சமய வழிபாட்டுக்கும் பூரண பாதுகாப்பும், உரிமையும் வழங்கி வருகிறது. அது மட்டுமின்றி அதிகார பூர்வ சமயம் இஸ்லா மாக இருந்த போதிலும் இந்து சமயம் உட்பட எல்லாச் சமயங்களுக்கும் அரசாங்கம் ஆதரவுக் கரம் நீட்டி வருகிறது. நாட்டிலுள்ள ஏராள மான இந்து ஆலயங்களுக்கும் அவற்றின் திருப் பணிகளுக்கும் நன்கொடைகளை வழங்கியிருப் பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இங்கிருக் கும் முக்கிய சமயங்களில் ஒன்றாக இந்து சமயம் அரசாங்க ஆதரவோடு நிலைத்து, தழைத்து வருவது வெள்ளிடை மலை. எந்த சமயத் திற்கும் அதன் வளர்ச்சியைப் பேணிக் காக்கவும் அதனைப் பின்பற்றி ஒழுகுகிற மக்களுக்கு வழி காட்டவும் சீரிய தலைமைத்துவம் இன்றியமை யாத தேவையாகும். இவ்வகையில் மலேசி யாவில் இந்து சமயத்திற்கு சைவப் பெரியார் கா. ராமநாதன் செட்டியார் அவர்கள் பல ஆண்டு காலம் பொருள் பொதிந்த நல்ல தலைமைத்துவத்தை வழங்கி வந்தார்கள். இங்கு அருள் நெறித் திருக்கூட்டம் அமை வதற்குச் சைவப் பெரியார் அவர்களேமூலகர்த் தாவாக விளங்கினார்கள். அவர்கள் நாடெங்கும் நிகழ்த்திய சமய விரிவுரைகளும், அந்தர் யோகங்களும்கூட்டுப்பிரார்த்தனைகளும் இங்குச் சைவசமயம் மக்கள் மனத்தில் அழுத்தமாகவும் தெளிவாகவும் வேரூன்றுவதற்குப் பெரிதும் கை கொடுத்தன என்று சொல்வது மிகையாகாது. கோலாலம்பூர் மகாமாரியம்மன் கோவிலில் திருமுறை மாநாடு ஆண்டுதோறும் நடை பெறுவதற்கு அடித்தளம் இட்ட பெருமையும் சைவப் பெரியார் அவர்களையே சாரும்.

நமது சைவசித்தாந்த வித்தகர் சைவப் பெரியாரின் வழியில் இந்நாட்டில் சைவ சமயமும், சைவ சித்தாந்தமும் தழைத்தோங்கு வதற்குக்கடந்தபல ஆண்டுகளாகத் தமது எழுத் தாலும் பேச்சாலும் அரிய தொண்டு புரிந்து வருகிறார்கள். சைவ சித்தாந்தத் துறையில் தமிழகத்திலுள்ள சித்தாந்த விற்பன்னர்களுக்கு இணையாக ஆழ்ந்த புலமையும் ஆய்வும் மிக்க

வர்களாக விளங்கி வருகின்றுர்கள். தமிழகத்தில் சைவ சித்தாந்த சமாஜத்தின் ஆதரவில் அங்கு சித்தாந்தம் பயிலும் மாணவர்களுக்கு ஏறத்தாழ ஒரு மாத காலம் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கிருர்கள். சித்தாந்தத் துறையில் ஆழமாகக் கரை கண்ட விற்பன்னர்களில் ஒருவர் என்னும் முதன்மையான இடத்தையும் அவர்கள் பெற்றிருக்கிருர்கள்.

சைவ சித்தாந்த சமாஜத்தின் ஏடான சித்தாந்தத்திலும் சித்தாந்த வித்தகரின் ஆய்வுக் கட்டுரைகள் பல வெளி வந்திருக்கின்றன. தமிழகத்தில் மக்களை தங்கள் சமய விரிவுரைகள் மூலம் கவர்ந்திழுக்கும் திருமுருக கிருபானந்த வாரியார், கி. வா. ஜகன்னுதன், கீரன் போன்ற அறிஞர்களின் வரிசையில் அவர்களுக்கு இணையாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச் சொற்பொழிவுகளை நடத்தி, அங்குள்ள மக்களிடையே தலை சிறந்த சமயச் சொற்பொழிவாளராகவும்—சித்தாந்த வித்தகராகவும் பேர் பெற்று விளங்குகிருர்கள்.

மலேசியாவைப் பொறுத்தவரையில் சைவ சமயத்தைப்பற்றியும்சித்தாந்தத்தைப்பற்றியும் தெளிவாக ஐயத்திற்கு இடமின்றி அழுத்தமாக எடுத்துச் சொல்லக் கூடிய ஆற்றலும், புலமையும் இயல்பாகவே சித்தாந்த வித்தகருக்கு இறையருளால் அமைந்திருக்கின்றன. பொதுவாகச் சமயப் பேச்சு என்பது கேட்பவரின் பொறுமையைச்சோதிக்கக் கூடியதாகவே இருக்கும். கிளிப்பிள்ளைபோலப் படித்திருக்கும் பாட்டுக்களை ஒப்புவித்து அர்த்தம் சொல்லிக் கொண்டிருக்கிற பேச்சாளர்களே அதிகம். நிறையப் படித்திருப்பவர்கள்கூட மக்கள் மனத்தில் பதியும்படி எடுத்துரைக்கின்ற ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. இதற்கு மாருகச் சித்தாந்த வித்தகர் அவர்கள் தமது சமயச்சொற்பொழிவுகளை ''கேளாரும் வேட்ப மொழிகின்ற'' பேராற்றலைப் பெற்றிருக்கிருர்கள். எந்த மேடையில் ஏறினுலும் தமது பேச்சை அங்கு வந்திருப்போர் உள்ளத்தைக் காந்தம் போல் ஈர்க்கத் தக்க கவர்ச்சியும் கருத்தும் நிறைந்த பேச்சாக அமைத்துக் கொள்கிற வல்லமை அவர்களிடம் அமைந்திருக்கிறது. நகைச்சுவையும் அவர்கள் சொல்லுகிற குட்டிக் கதைகளும் மக்கள் மனத்தை விட்டு அகலமாட்டா. சித்தாந்த வித்தகர் பேசுகிருர் என்ருல் அதனைக் கேட்பதற்கு என்று மக்கள் திரண்டு வருவது மலேசியாவில் இயல்பாகி விட்டது. எந்த மாநாட்டிலும் எந்த விழாவிலும் அவர்களின் பேச்சு நட்சத்திரப் பேச்சாகவும் நிகழ்ச்சிக்கு மகுடம் போல் முத்தாய்ப்பு வைக்கின்ற பேச்சாகவும் அமைந்து சிறப்புறுவதைப் பல சந்தர்ப்பங்களில் நான் கண்டிருக்கிறேன். கருத்தாழமிக்க பேச்சுக்களை அவர்கள் நிகழ்த்திய போதிலும் படித்தவர்கள் மட்டுமின்றிப் பாமர மக்களும் அந்தக் கருத்துக்களைப் புரிந்து கொள்கின்ற முறையில் ஜனரஞ்சகமாக அவர்கள் தமது பேச்சுக்களை அமைத்துக்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் தொடர்— சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்ற அறிஞர்கள் 'கூறியது கூறல்' என்னும் குற்றத்திற்கு இலக்காகாமல் தப்புவது அரிது. சித்தாந்த வித்தகர் கூடுமானவரை புதிய புதிய செய்திகளையும் கருத்துக்களையும் தமது பேச்சுக்களில் எடுத்துச் சொல்ல முயலுவதையும் நான் கண்டிருக்கிறேன்.

இன்றைய உலகம் பகுத்தறிவு உலகம் எதனையும் ஆராய்ச்சிக் கண் கொண்டு, ஐயங்களை எழுப்பி விடை காண விழைகின்ற இளைஞர்கள் கூட்டத்திற்கு மத்தியில் சமயப் பிரசாரம் செய்வதும் சமய விரிவுரைகள் நிகழ்த்துவதும் எளியவல்ல. சித்தாந்த வித்தகர் இன்றைய இளைஞர்களின் மனப் போக்கைக் கருத்தில் கொண்டு அவர்கள் மனத்தில் எழுகின்ற சந்தேகங்களையெல்லாம் தாமே எழுப்பி அவற்றுக்கு விடை கூறும் முறையில் தர்க்க ரீதியாகத் தமது சொற்பொழிவுகளைஅமைத்துக் கொள்கின்ற சிறந்த முறையையும் பின்பற்றி வருகிருர்கள். இதனுல் அவர்களின் பேச்சுக்களைக் கேட்கும்போது நமது உள்ளங்களில் இயல்பாக எழுகின்ற ஐயப்பாடுகளுக்கும் தக்க அறிவு பூர்வமான விடைகளும் கிடைத்து விடுகின்றன. தமிழ் நூல்கள் மட்டுமன்றி, ஆங்கில

நூல்களையும் குறிப்பாகப் பல்வேறு சமயங்கள் பற்றிய ஆங்கில நூல்களையும் சித்தாந்த வித்தகர் நிறையப் படித்து வருகின்றூர்கள். அதனுல் இந்து சமயத்தைப்பற்றி மட்டுமன்றி மற்ற பல்வேறு உலக சமயங்கள்பற்றிய தெளிவான ஞானமும் அவர்களிடம் நிறைந்திருக்கிறது.

மேடைப் பேச்சு மட்டுமின்றிச் சித்தாந்த வித்தகர் அவர்களுடன் தனியாக உரையாடிக் கொண்டிருப்பதும் பேரின்பமாகும். அத்தகைய உரையாடல்களின் போது அவர்கள் கொட்டுகிற கருத்துக் குவியல்கள் ஏராளம். அவை நம் உள்ளத்தைச் செம்மைப் படுத்தவும் தெளிய வைக்கவும் உதவுகின்ற நன்முத்துக்களாக அமைவதையும் என் அனுபவத்தில் நான் கண்டிருக்கிறேன்.

தமிழகத்தில் புஞ்சைப் புளியம்பட்டியிலுள்ள மறைமலை அடிகள் மன்றம் சித்தாந்த வித்தகரின் ''கடவுளால் முடியாதது,'' ''தடைகளும் விடைகளும்,'' என்னும் இரு நூல்களை வெளியிட்டுப் பெருமைப் படுத்தியிருக்கிறது. சித்தாந்த வித்தகர் நிகழ்த்தும் சமயப் பேச்சுக்களை முறையாகத் தொகுத்து வெளியிட்டால் அவை சைவ நன்னெறியைப் பரப்பும் நல்ல கையேடுகளாக அமையும் என்பது என் கருத்தாகும். அந்த முயற்சியிலும் மறைமலை அடிகள் மன்றத்தாரும், மற்ற வெளியீட்டாளர்களும் தலைப்பட வேண்டுமென்பது என் விருப்பமாகும்.

தமிழ் நேசன் நாளேட்டின் ஞாயிறு பதிப்பில் சைவ சமய விளக்கம் என்னும் தலைப்பில்பலஆண்டுகளாகச் சித்தாந்த வித்தகர் எழுதி வருகின்ற கேள்வி பதில் பகுதி மலேசிய நாட்டில் சைவ சமயத்திற்கு அன்னூர் நிகழ்த்தி வருகிற பெரும் திருத்தொண்டு என்று குறிப்பிட வேண்டும்.

இந்து சமயம் என்னும் பெயரில் நடைபெற்று வருகிற குதம்பக் குழப்பங்களுக்கு மத்தியில் சைவ, வைணவ சமயங்களைப் பற்றியும் சைவ சித்தாந்தம் பற்றியும் நமது மக்கள் திட்டவட்டமான தெளிவான கருத்துக்களைப் பெறுவதற்கு இந்தப் பகுதி கை கண்ட வரப்பிரசாதமாக விளங்கி வருகின்றது. இந்து சமயம் என்னும் பெயரில் எத்தனையோ சாமியார்களும், தலைவர்களும் இங்கு வந்து செல்கிறூர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தாம் சார்ந்திருக்கும் மடங்களையும் ஸ்தாபனங்களையும் பிரதிபலிக்கின்ற முறையில் சமயக் கருத்துக்களைப் பரப்பிச் செல்கின்றனர். இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் யார் வேண்டுமானுலும் எதை வேண்டுமானுலும் கூறி விட்டுத் தப்பித்துக் கொள்ளக்கூடிய கட்டுப்பாடு இல்லாத சுதந்தரம் இருந்து வருகிறது. இதன்காரணமாகச் சைவ, வைணவ சமயங்கள் பின்னணிக்குத் தள்ளப்பட்டு நமது மக்களிடையே செல்வாக்கு இழந்து வருகிற அபாயம் கூட உருவாகி வருகிறது.

இந்து சமயத்தை நம்மிடையே பரப்புவதற்கு அமெரிக்காவில் இருந்து ஹரே கிருஷ்ண, ஹரே ராமா கூட்டம் இங்குப் படையெடுக்கின்ற கேலிக் கூத்தும் நமது சகிப்புத் தன்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இத்தகைய கேலிக் கூத்துக்களுக்கும் சமயத்தின் பெயரால் பரப்பப்படுகின்ற ஒவ்வாத நடைமுறைகளுக்கும் கருத்துக்களுக்கும் முற்றுப் புள்ளி வைக்கின்ற முறையில் சைவ சமயக் கருத்துக்களையும், நெறிமுறைகளையும் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு இந்தப் பகுதியைச் சித்தாந்த வித்தகர் நன்கு பயன் படுத்தி வருகிறூர். நேசன் ஞாயிறு பதிப்பு மூலம் இப்பகுதியை ஆயிரக் கணக்கான வாசகர்கள் தொடர்ந்துபடித்துவருவதுடன் அதனைப் பத்திரப்படுத்திப் பாதுகாத்தும் வருகிறூர்கள் என்பதையும் நான் அறிவேன். இப்பகுதியில் வெளியான சைவ சமய வினு விடைகளின் ஒரு பகுதியே தடையும் விடையும் என்னும் தலைப்பில் நூலாகியிருக்கிறது. அது போல எல்லா வினு விடைகளும் நூலாக உருப்பெற வேண்டுமென்பதும் என் விண்ணப்பமாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் பெருமான் ஆற்றிய சமயப் பணி ஒப்புயர் வற்றது. அவர்கள் சைவ சமயத்தைச் சின்னஞ் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லாரிடத்திலும் அணுக்கமாகப் பதிய வைப் பதற்குத் தமது பேச்சாலும் எழுத்தாலும்அரும் பணி ஆற்றியிருக்கிறார்கள். அதன் பயனாகச் சைவ சமயம் அங்குக் காக்கப்பட்டு வருகிறது. நாவலர் பெருமானின் சீரிய வழியில் தமது சமயத் தொண்டை அமைத்துக்கொண் டிருக்கிற சித்தாந்த வித்தகர் அவர்கள் அப் பணியைச் செம்மையாக ஆற்றுவதற்குரிய ஆற் றலையும் அறிவையும் கைவரப் பெற்றிருக் கிறார்கள். அவர்களுக்குத் தக்க வாய்ப்பும், வசதிகளும் கூடுதலாக வழங்கப்படுமானால் மலேசியாவிலுள்ள இந்துசமுதாயம் அவர்களின் ஆற்றல் மிக்க சமயப் பணியினால் மேலும் பன் மடங்கு பயனை எய்த முடியும்.

அம்மையப்பர் திருவருளால் சைவ சித்தாந்த வித்தகர் அவர்கள் தமது துணைவி யாருடன் மேலும் பல்லாண்டு உடல் நலத் தோடு வாழ்ந்து, தமது சமயப் பணியை மேன்மை கொள் சைவ நெறி உலகெல்லாம் தழைத்தோங்க அயராது தொடர வேண்டு மென்று விழைகின்றேன். அவர்களுக்கு எல்லா நற்பேறுகளையும் இறைவன் பாலிப்பானாக.

★

மணிவிழாச் செல்வரின் வாழ்க்கை வரலாறு

கு. வைத்தியநாதன்,
திருப்பதிசாரம்-629901 — குமரி மாவட்டம்

''ஏறு தொல் புகழ் ஏந்து சிற்றம்பலத்து
ஈசனை இசையால் சொன்னபத்து இவை
கூறுமாறு வல்லார் உயர்ந்தாரொடும்
கூடுவரே''
சம்பந்தர் [3-1-11]

''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'' (294)

என்னும் குறள் மொழிக்கு ஒப்ப, உள்ளும் புறமும் கள்ளமின்றி வாழும் பெருந்தகை, உயர் திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்களது வாழ்க்கை வரலாற்றினை வரைவதற்கான வாய்ப்பினை எளியேனுக்கு வழங்கிய திருவருளுக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிமுகம்

சென்னை இராயப்பேட்டை, ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தசன சபாவில், சைவ சித்தாந்த மகா சமாசத்தின் சார்பில் மெய்கண்டார் விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. 5-11-1976 அன்று மாலை 6-30மணி, அப்போதுதான் மணிவிழாச் செல்வரை முதன் முதலாகக் கண்டேன். நெடிய உருவம். சற்றே செந்நிறம் கலந்த கரிய மேனி. உருவத்துக்கேற்ற பருமன். நிமிர்ந்த பார்வை; அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காட்சி தரும் கருமை நிற முடிகளோடு கூடிய வெண்தலை. இத்தகைய தோற்றப் பொலிவோடு கூடிய பெருந்தகையின் பேச்சில் ஒருவகை விறுவிறுப்பையும் வெடிச் சிரிப்பையும் கேட்ட போது, அவர்களிடம் இளமை பளிச்சிட்டதைக் கண்டேன். கருத்துக்களைக் கோவைப் படுத்திக் கதைகளை இடையிடையே புகுத்தி அவர்கள் பேசியது மிக எளிமையாக இருந்தது. இளமை கொஞ்சும் எளிய நடை; இனிமை கொழிக்கும் தேனைப்பழிக்கும் தெள்ளிய நடை. கேட்டார்ப் பிணிக்கும் சொல் நயம். சைவ சித்தாந்தக் கருத்துக்களை இப்படியும் பேசலாம் என்பதற்கு அவர்கள் கடைப்பிடித்த நடைமுறை எளியேனைப் பெரிதும் கவர்ந்தது. இரும்புக் கடலையைப் பொரிகடலையாக்கித் தந்த அவர்கள் திறத்தை என்ன சொல்லிப் புகழ்வேன்! என்னே அவர்கள் ஏற்றம்!!

தோற்றம்

''எந்நோற்றான் கொல்'' என்னும் சொல்லுக்கு ஒப்ப இப்பெருந்தகை துன்மதி ஆண்டு ஆவணித் திங்கள் மூன்றாம் நாள் (18-8-1921) அவிட்டம் விண்மீனில் மிதுன லக்கனத்தில் வியாழனன்று இப்பூவுலகில் தோன்றினர்கள் புதுக்கோட்டை மாவட்டம், விரையாச்சிலை என்னும் ஊரில் பிறந்த இவர்கள் தந்தையார் பெயர் முரு. பழ. பழநியப்ப செட்டியார். தாயார் பெயர் நாகம்மை ஆச்சி.

முன்னோர் சிறப்பு

மணிவிழாச் செல்வரின் பாட்டனார் (தந்தையின் தந்தையார்) முருகப்பச் செட்டியார் என்ற சபாபதி செட்டியார் என்பவர் இவர்கள் சிவப்பற்று மிக்க செம்மல். விரையாச்சிலைச் சிவன் கோவிலில் விளக்கிடுதல், தூபம் இடுதல், நந்தவனம் வைத்தல் முதலிய சரியைத் தொண்டு செய்தவர்கள். படுக்கைக்குப் போகும் முன்பு, தினமும் மூவர் தேவாரத்தைப் பாராயணம் செய்யும் பழக்கம் மேற்கொண்டிருந்தார்கள். அடங்கல் முறையை (மூவர் தேவாரத்தையும்) பலமுறை படனம் செய்துள்ளார்கள். பல பாடல்கள் பாடமும் உண்டு 81 ஆண்டுகள் வரை வாழ்ந்தவர்கள். மண

விழாச் செல்வரின் தாயாரைப் பெற்ற பாட்டனுர், ஆண்டியப்ப செட்டியாரி; இராமாயணம், பாரதம்—இரண்டிலும் உள்ள கதைகள் முழுவதையும் சொல்லும் ஆற்றல் பெற்றவர்கள். இவர்கள் 86 ஆண்டுகள் வாழ்ந்தவர்கள்.

உடன் பிறப்பு

மணிவிழாச் செல்வருக்கு இரண்டு சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் உள்ளனர். தமையனரின் பெயர், திரு கோபால் செட்டியார் அவர்கள்; தம்பியின் பெயர் திரு. ஆண்டியப்ப செட்டியார் அவர்கள்.

கல்வி

சித்தாந்த வித்தகராகிய இவர்கள் இந்தியாவில் இரண்டாம் வகுப்பு வரையிலேயே படித்தார்கள். தமது சொந்த ஊரான விரையாச்சிலைத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடி, எண்சுவடி முதலியன படித்ததோடு சரி. அதன் பிறகு, வேறு எந்தப் பள்ளியிலும் தமிழ்க் கல்வி கற்கவில்லை. 11-வயது வரை வீட்டில் இரண்டு பாட்டனுர்களும் தேவாரம், திருவாசகம், நாயன்மார் வரலாறு, புராணக் கதைகள், இராமாயணம், பாரதம் முதலியவற்றைப் பேரனுக்குச் சொல்லிக் கொடுத்தனர். இங்ஙனம் பெற்ற தமிழறிவோடு, தமது தந்தையாருடன் 11ஆம் வயதில் மலேசியாவில் உள்ள பத்துப்பகாட்டிற்குச் சென்றுர்கள். 1932ஆம் ஆண்டு முதல் 1940ஆம் ஆண்டு வரை (அதாவது தமது 19ஆம் வயது வரை) பத்துப்பகாட் அரசு உயர்நிலைப் பள்ளியில் சீனியர் கேம்பிரிட்ஜ் வரை ஆங்கிலக் கல்வி பயின்றுர்கள். இது நமது நாட்டில் உள்ள இண்டர்மீடியட்டுக்குச் சமம்.

அந்தப் பள்ளியில் எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தில்தான் கற்றுத்தந்தார்கள். ஒரு பாடம்கூடத் தமிழில் இல்லை. இந்தக் கல்வி முடிந்ததும், லண்டன் பல்கலைக் கழகம் வைத்த தேர்வில் வெற்றி பெற்று, சீனியர் கேம்ப்ரிட்ஜ் பட்டம் பெற்றுர்கள். தம் தந்தையாரிடம் வீட்டில் (மலேசியாவில்) இடையிடையே தமிழும் கற்று வந்தார்கள். தமது இளமைப் பருவத்தில், திரு.வி.க, மறைமலையடிகள், சுத்தானந்த பாரதி முதலிய பெருமக்கள் எழுதிய நூல்களையும் அந்தக் காலத்தில் வெளியான இலக்கியத் தொடர்பான நூல்களையும் கற்றுர்கள். சிலப்பதிகாரம், கம்ப இராமாயணம் ஆகிய இரண்டு நூல்களையும் உரையுடன் வாங்கிப் படித்து 19-ஆம் வயதிலேயே இலக்கியச் சொற்பொழிவு செய்யத் தொடங்கினுர்கள்.

தமிழ்க் கல்வி

கல்லூரிக் கல்வி முடிந்ததும் 1940இல் இந்தியாவுக்குத் திரும்பினுர்கள். அப்போது இரண்டாவது உலகப் போர் நடந்துகொண்டிருந்தது. மலேசியாவிலும் இந்தியாவிலும் போர் அபாயம் இருந்ததால், 1945-ஆம் ஆண்டு வரை இந்தியாவிலேயே இருந்தார்கள். மலேசியாவில் தந்தையார் வைத்திருந்த வட்டிக் கடையைத் தமையனுர் பார்த்துக் கொண்டார். தந்தையுடன் இந்தியா திரும்பிய மணிவிழாச் செல்வர் அவர்கள், தமிழ் மொழியை முறையாகக் கற்க விரும்பினுர்கள். மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக்குப் படித்தார்கள். அதில் உள்ள பாடத் திட்டப்படி, நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலக் காரிகை, புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, குறுந்தொகை முதலிய நூல்களைப் படித்தார்கள். இலக்கண, இலக்கிய நூல் அறிவு முறையாகப் பெற்றதால் அவற்றை நுணுகி ஆயும் வன்மை பெற்றுர்கள்; தமிழறிஞர்களிடம் கலந்து உரையாடினுர்கள்.

சமயக் கல்வி

இளமையிலிருந்தே தியானம், ஜபம், திருமுறைப் பாராயணம் முதலியன செய்து வந்ததால், சமய நூல்களை ஆராயும் வேலையை மேற்கொண்டார்கள். முதலில் வேதாந்த நூல்களைத்தாம் கற்றுர்கள். ஆங்கில மொழி அறிவைக் கொண்டு, சுவாமி விவேகானந்த

நூல்கள், இராம கிருஷ்ண பரமஹம்சரின் கருத்துக்கள், ஆங்கில பகவத்கீதை, பிரம்மசூத்திரம் முதலியவற்றைப் படித்தார்கள். தமிழில் கைவல்ய நவநீதம் முதலிய நூல்களைக் கற்ருர்கள். இவ்வளவு நூல்களைப் படித்தும், சமயக் கொள்கைகளில் தெளிவுபெற முடியாது போனதால், சித்தாந்த சாத்திர நூல்களைப் படிக்கத் தொடங்கினுர்கள். திரு. பொ. முத்தையா பிள்ளை அவர்கள் எழுதிய, ''சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்'', ''சிவஞான சித்தியார் சுபக்க உரை'' முதலியவற்றைப் படித்ததால் சித்தாந்தத் தெளிவைப் பெற்ருர்கள். இவ்விரு உரை நூல்களே 'உயர்ந்த சித்தாந்த உரை நூல்கள்' என்பது மணி விழாச் செல்வர் அவர்களது கருத்து. சிவஞான பாடியத்தைப் பல முறை படித்திருக்கிருர்கள். பாடியத்தில் உள்ள பல கருத்துக்களைப் பாடியத்தைப் பாராமலே கூறுவார்கள்; பாடியக்காரர், யாது காரணம்பற்றி இவ்வாறு கூறுகிருர் என்பதற்கு அவர்கள் விளக்கம் தரும்போது, சித்தாந்த சைவம் எத்துணை நுட்பம் உடையது என்பது தெற்றென விளங்கும். இன்று சைவசித்தாந்த உலகில் இவர்களைப் போல் பாடியத்தை எழுத்தெண்ணிப் படித்தவர்கன் இல்லை என்ருல், அது மிகையாகாது; உண்மை இது; வெறும் புகழ்ச்சியன்று,

சித்தாந்த சைவத்தின் பதினுன்கு சாத்திரங்களையும் பழுதறக் கற்றிருக்கிருர்கள். சமய இலக்கியங்களில் ஆழ்ந்த கல்வியைப் பெற்ற மணிவிழாச் செல்வர் அவர்கள், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், விபுலானந்தர், திரு. வி. க போன்ற பெரியவர்களை அணுகி அளவளாவியிருக்கிருர்கள். இவர்கள் திரு. பொ. முத்தையாபிள்ளை அவர்களையே தமது சித்தாந்த குருவாக மானசிக நிலையில் கொண்டுள்ளார்கள்.

மணவாழ்க்கை

குழிப்பிறை என்ற ஊரில் பிறந்த திருவாட்டி மீனுட்சி ஆச்சி அவர்களை 1945 ஆம் ஆண்டில் தமது 24-ஆம் வயதில் இந்தச் 'சொக்கநாதர்' அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். இந்தியாவில் ஒராண்டு மண வாழ்க்கை வாழ்ந்த பின்பு, 1946-ல் மறுபடியும் மலசியாவுக்குச் சென்ருர்கள். வட்டிக் கடை ஒன்றுக்கு ஏஜண்டாகச் சம்பளம் பேசி, மலேசியா சென்ருர்கள். மூன்று ஆண்டுகள் கழித்து 1949ல் இந்தியா திரும்பினுர்கள். இரண்டு ஆண்டுகள் இந்தியாவில் இருந்தார்கள். அப்போதுதான் முதன் முதலில் ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையாகும் பேற்றைப் பெற்ருர்கள்.

குடும்ப வாழ்க்கை

'பிறன்மனை நோக்காப் பேராண்மை' மிக்க இப்பெருந்தகை 'ஒழுக்கத்தின் ஒல்கா உரம்' செறிந்த நெறிப்பட்ட நேரிய சீரிய குடும்ப வாழ்க்கையினை உடையவர்கள். நான்கு பெண் மக்களையும் ஓர் ஆண் பிள்ளையையும் உடையவர்கள். மகளிர் நால்வருக்கும் திருமணம் ஆயிற்று. கடைசி மகளின் திருமணம் 1981 மே மாதத்தில் நடைபெற்றது பையன் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிருர். மூத்த மகளின் கணவர், திரு. முத்து அவர்கள் இவர்கட்குத் தலைமகன் போன்று உதவுகின்ருர்கள். ஐயா அவர்கள் மலேயா போகும் போதும் திரும்பும் போதும் திரு.முத்து அவர்களே வழியனுப்புவதும் வரவேற்பதுவுமான பணியைச் செய்துகொண்டிருக்கிருர்கள்.

1973இல் ஐயா அவர்கள் புதுக்கோட்டையில் சொந்த வீடு வாங்கித் தமது குடும்பத்தைக் குடியேற்றினுர்கள்.

1968இல் பத்துப்பகாட்டில் (மலேசியா) சொந்தக் கடை வைத்தார்கள். அது இன்றும் புதுமைப் பொலிவோடு நடைபெற்று வருகிறது.

திரைகடலோடி இவர்கள் தேடித் தரும் வருவாயைச் சிக்கனமான முறையில் குடும்பச் செலவு செய்தது போக மீதியைச் சேமித்து

வைக்கும் திறனைப் பெற்றவர்கள், ஐயா அவர்களின் துணைவியார், திருவாட்டி மீனாட்சி ஆச்சி அவர்கள் ஆவர். இருவருக்கும் இடையே சில சமயங்களில் சௌந்தரியப் பிணக்கு ஏற்படும். அதில் ஊடலும் உவகையும் கலந்து காணப்படும். ஐயா அவர்கள் ஆச்சி அவர்களை அளவுக்குச் சற்றுக் கூடுதலாகவே நேசிக்கிறார்கள்; ஆச்சி அவர்கள் ஐயா அவர்களைப்பற்றிக் கூறும்போது, ''சூதுவாது அறியாத கைக் குழந்தை'' என்கிறார்கள்.

தொழில் வாழ்க்கையும் சமய வாழ்க்கையும்

1950 ஆம் ஆண்டு ஒரு எஸ்டேட் கடைக்கு ஏஜண்டாக மலேசியா சென்று 1953 வரை இருந்தார்கள். அப்போது தான் வருமானவரி அதிகாரி திரு. சரவணமுத்து அவர்கள் அறிமுகம் ஏற்பட்டது; புதுப்பட்டி திரு. முத்தையா செட்டியார் அவர்கள் தொடர்பும் ஏற்பட்டது. இவ்விரு பெருமக்களின் ஆதரவின் பேரில், மலாக்கா என்னும் ஊரில் முதன் முதலில் 1951-ல் நமது மணிவிழாச் செல்வர் அவர்கள், ''அப்பர் அடிகள்'' பற்றிப் பேசினார்கள். அந்தக் கன்னிப்பேச்சு மலேயா முழுதும் பரவியது; பல இடங்களில் பேசுமாறு அழைத்தார்கள்; இவ்வாறு இவர்களது சமயத் தொண்டு தொடங்கியது. தமது முப்பது வயதிலிருந்து இன்று வரை சமயத் தொண்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் செயலாளராக இருந்த திரு. கா. இராமனாதன் செட்டியார் அவர்கள் மலேயா சென்று ஆடிட்டர் தொழில் படித்து வந்தார்கள். அப்போது அவர்கள் தலைமையில மலேசியாவில் அருள் நெறித்திருக்கூட்டம் நிறுவப்பட்டது. இன்னும் அந்த நிறுவனம் செம்மையாக நடைபெற்று வருகிறது. அருள் நெறித் திருக்கூட்டத்தின் சார்பில் மலேசியா முழுதும் சென்று, மணி விழாச் செல்வர் அவர்கள் சமயப் பிரசாரம் செய்து வந்தார்கள்; சிவஞான போத வகுப்பு, திருவருட்பயன் வகுப்பு, பெரியபுராணவகுப்பு, திருக்குறள் வகுப்பு முதலியவற்றை நடத்தி வந்தார்கள்.

1954ஆம் ஆண்டு, மலேயா அருள்நெறித் திருக்கூட்டத்தினர் தமிழ்நாடு வந்தனர். அப்போது அவர்களுடன் திரு. கா. இராமனாதன் செட்டியார் அவர்களும் நமது மணிவிழாச் செல்வர் அவர்களும் கலந்துகொண்டு தல யாத்திரை செய்தனர். சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜச் சார்பில் திரு. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் தல யாத்திரைக்குத் தலைமை ஏற்று அழைத்துச் சென்றார்கள். திரு. நாயுடு அவர்கள் அறிமுகம் அப்போதுதான் நமது மணிவிழாச் செல்வர் அவர்களுக்கு ஏற்பட்டது; அவர்கள் மூலமாகவே சமாஜத் தொடர்பும் ஏற்பட்டது. சமாஜ உறுப்பினர் ஆனார்கள்; 'சித்தாந்தம்' இதழுக்குக் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்கள். அவர்கள் எழுதும் கட்டுரைகள் அனைத்தும் தர்க்க ரீதியில் அமைந்திருக்கும் என்பது சித்தாந்த உலகிற்குச் சொல்லத் தேவையில்லை. ''வீடு பேற்றில் மலம் உண்டா?'' என்ற சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைதான் முதன் முதலில் ''சித்தாந்தம்'' இதழில் வெளிவந்தது. இக் கட்டுரை இங்குள்ள சித்தாந்திகளிடையே சிந்தனையைக் கிளப்பியது. இவர்கள் கருத்தை மறுத்து இன்று வரை, இக்கட்டுரைக்கு மறுப்பு எழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1955இல் மீண்டும்மலேசியா சென்று,மூன்று ஆண்டுகள் தொழிலையும் கவனித்துக்கொண்டு சமயத்தொண்டும் புரிந்துவந்தார்கள். 1959இல் இந்தியா திரும்பினார்கள். புதுச்சேரியில் நடந்த சைவ சித்தாந்த மாநாட்டில், ''பதி இலக்கணம்'' பற்றிப் பேசினார்கள். அப்போதுதான், சித்தாந்தப் பேராசிரியர், திரு. வச்சிரவேலு முதலியார் அவர்கள் பழக்கம் ஏற்பட்டது.

புன்செய்ப் புளியம்பட்டி, மறைமலையடிகள் மன்றத் தலைவர் திரு. ஆறுமுகம் அவர்கள் தொடர்பும் இந்தச் சமயத்தில்தான் ஏற்பட்டது. திரு. ஆறுமுகம் அவர்கள் இப்போது இறையடி சேர்ந்துவிட்டார்; அவருடைய மறைவைக் குறித்து அவர்கள் எழுதிய கடிதத்தில் கண்ணீர்த் துளிகளைக் கண்டேன். இன்று

சித்தாந்த சைவ உலகம், நமது மணிவிழாச் செல்வர் அவர்களைப் பாராட்டுகிறது என்றால், அதில் பெரும்பங்கு திரு. ஆறுமுகம் அவர்களுக்கே உரியது. ஐயா அவர்கள் எழுதிய சித்தாந்தக் கட்டுரைகளைத் தொகுத்து, ''கடவுளால் முடியாத செயல்கள்'' என்ற நூலை மறைமலையடிகள் மன்றத்தின் வாயிலாக வெளியிடுவதற்காக திரு. ஆறுமுகம் அவர்கள் எடுத்த முயற்சி எழுத்தில் அடங்காது. ஐயா அவர்கள் சொற்களில் சொல்வதானால், ''என்னை வெளிக் கொணர்ந்தவரே, திரு. ஆறுமுகனார் தாம்'' என்பதே. அதன் தொடர்பாக, ''தடைகளும் விடைகளும்'' என்று இரண்டு பாகங்களை இம்மன்றத்தினரே வெளியிட்டனர். தடைகளும் விடைகளும் என்ற நூலில் ஐயா அவர்கள், பகுத்தறிவுக் கொள்கையினர் எழுப்பும் பல தடைகளுக்கு மறுக்க முடியாத விடைகளைத் தந்துள்ளார்கள்.

1961இல் மீண்டும் மலேயா சென்றார்கள். மலேயாவில் கிராமங் கிராமமாக, எஸ்டேட்களுக்கெல்லாம் சென்று, மூன்று ஆண்டுகள் தொடர்ந்து சமயப் பிரசாரம் செய்தார்கள். மலேசியாவிலிருந்து வெளியாகும் ''தமிழ் நேசன்'' என்னும் பத்திரிக்கையில் ''சைவ விளக்கம்'' என்னும் பகுதியில் எழுப்பப்படும் தடைகட்குத் தக்க விடைகளைக் கடந்த இருபது ஆண்டுகளாக எழுதி வருகிறார்கள். மலேசியாவில் அருள்நெறித் திருக்கூட்டம் நடத்தும் பல நிகழ்ச்சிகளிலும், கோலாலம்பூர், மகாமாரியம்மன் கோவில் திருமுறை மாநாடுகளிலும் கலந்துகொண்டு பேசியிருக்கிறார்கள்.

1964இல் இந்தியா திரும்பினார்கள். புன் செய்ப்புளியம்பட்டி சென்று பேசினார்கள்.

1973இல் புதுக்கோட்டையில்கம்பனைப்பற்றிப் பல பேச்சுக்கள் பேசினார்கள். புதுக்கோட்டை இலக்கிய வட்டத்தின் தொடர்பு கிடைத்தது. இன்றும் இவ்விலக்கிய வட்டத்தினர், ஐயா அவர்களை வட்டமிட்டவாறே உள்ளனர். திருச்சி, மதுரை, திருவையாறு, சேலம், நாகர் கோவில், சென்னை முதலிய ஊர்களில் இலக்கியம், சமயம் பற்றி அவர்கள் பல சொற்பொழிவுகள் செய்துள்ளார்கள். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாயும் அமைந்துள்ள அவர்கள் சொற்றிறனை எளியேன் என்னென்று சொல்வேன்! சொற்களை அவர்கள் கையாளும் முறை தனித்தன்மை உடையது. கருத்துக்களை அவர்கள் எடுத்து இயம்பும் இனிமை எவர்க்கும் இல்லாத ஒன்று.

சமயத்தொண்டு என்பது பேச்சில் மட்டும் அடங்கி விடுவதன்று. செயலிலும் அது இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள், எங்கள் ஐயா அவர்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தில், சைவ சித்தாந்த சிறப்புப் பேராசிரியராக இருக்கும் திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்களுக்கு, 1978இல் ஐயா அவர்கள் ரூபாய் பத்தாயிரம் திரட்டிப் பண முடிப்பாக வழங்கினார்கள். அவ் வகையில் அவர்கள் மேற்கொண்ட முயற்சி மெய்சிலிர்க்க வைக்கக் கூடியது.

(1980இல் சைவசித்தாந்த மகா சமாஜம் நடத்திய சிவஞான பாடிய வகுப்பில் அவர்கள் பேசிய பேச்சு இதுவரை சைவ உலகம் கேட்டிராத ஒன்று என்றால் அது மிகையாகாது.

1981 மே மாதம் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 75-ஆவது ஆண்டு மாநாடு, இலங்கையில் நடைபெற்றது. அம்மாநாட்டில், மூன்று நாட்களும் தலைமை யேற்று.மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். ஐயா அவர்களின் தலைமைப் பேருரை, இந்த ஆண்டு ஆவணித்திங்கள், ''சித்தாந்தம்'' இதழில் வெளியாகி உள்ளது. ஈழ நாடே வியக்கும் வண்ணம் இவர்கள் ஆற்றிய தலைமையுரை அமைந்துள்ளது.

கடவுளால் முடியாத செயல்கள், தடைகளும் விடைகளும் I&II பகுதிகள், வாலிவதம் சரியா? புலால் தின்பது தீவினையா?—ஆகிய நூல்கள் அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. இன்னும் வரவேண்டிய நூல்கள் பல இருக்கின்றன.

5.11.76இல் அவர்களைக் கண்டு அவர்கள் பேச்சைக் கேட்ட பிறகு எனக்கு ஏற்பட்ட பல ஐயப்பாடுகளை எழுத்து மூலம் எழுதிப் பதில்கள் பெற்று வந்தேன். இந்தியாவிற்கு அவர்கள் வரும்போதெல்லாம் புதுக்கோட்டைக்குச் சென்று, நேரம் கிடைக்கும் போது சைவசித்தாந்தப் பாடம் கேட்பேன். எத்தனை கேள்விகள் கேட்டாலும் சளைக்காமல் எளிய முறையில் விளக்கி உதவினார்கள். சென்னையில் பலமுறை அவர்களைக் கண்டு கேட்கும் பல ஐயப்பாடுகளைத் தெளிவித்து அருளினார்கள்.

1977, ஏப்ரல் மாதம் நாகர்கோவிலுக்கு வந்து மூன்று நாட்கள் சொற்பொழிவு நிகழ்த்திய சொல்லொணுக் காட்சியை இன்றும் குமரி மாவட்ட மக்கள் நினைவிற் கொண்டுள்ளனர். மூன்று நாட்களிலும் கீழ்க்காணும் பொருள்களில் பேசினார்கள்;— முதல் நாள்! துன்பங்கள் நம்மை ஏன் தொடர்கின்றன?

இரண்டாம் நாள் : நம்மைப்பற்றி நாம் அறிய வேண்டாவா?

மூன்றும் நாள்: நிலையான இன்பத்திற்கு வழி என்ன? பாச இயல்பு, பசுஇயல்பு, பதி இயல்பு ஆகிய மூன்று பொருள்களைத்தான் முறையே நடைமுறைக்கேற்ற தலைப்பாக்கிப் பேசினார்கள். ஏறத்தாழ எண்ணூறு பேர் ஒவ்வொரு நாளும் வந்து இப்பேச்சுக்களைக் கேட்டனர்.

மதுரைக்கு வந்திருந்த போது ''மூலகன்மம் என்பது யாது?'' என்று ஒரு வினாவை எளிதாகக் கேட்டு விட்டேன்; அதற்கு இரண்டரை ஆண்டுகள் 'சித்தாந்தம்' இதழில் கட்டுரைகள் எழுதினார்கள். அக்கட்டுரைகளின் இடையே எழுந்த மறுப்புக் கட்டுரைகளுக்கு ஐயா அவர்கள் எழுதிய விளக்கக் கட்டுரைகள் பாடியகாரரின் பிரதிநிதி இவர்களே என்பதை எடுத்துரைத்தன. இப்பெருந்தகையின் அருட்பார்வை இவ்வடிமையின்பால் விழுவதற்கு எளியேன் முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயன் என்றே கருதுகிறேன். ஐயா அவர்களை ஆசிரியராகப் பெற்றதைப் பெரும் பேறாகவே கொள்கிறேன். ''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே'' என்று இறுமாப்பும் இடையிடையே ஏற்படுவது உண்டு.

பட்டங்களும் பாராட்டுகளும்.

இத்துணைப் பெருஞ்சிறப்புக்கள் நிறைந்த பெருந்தகை அவர்களுக்கு, 1959ஆம் ஆண்டு திருப் பெருந்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் மலேசியா சென்றிருந்த போது, ''**அருள்நெறிச் செல்வர்**'' என்னும் பட்டத்தை வழங்கினார்கள்.

1960ஆம் ஆண்டு மலேசியா தமிழ்ச் சங்கங்கள் அனைத்தும் இணைந்து, தமிழுக்கு இவர்கள் ஆற்றிய தொண்டைப் பாராட்டி, மலாக்கா என்னும் இடத்தில் வைத்து, ''**புலவர் மணி**'' என்ற பட்டத்தை வழங்கினர். இதனை அன்று மலேசியா சுகாதார அமைச்சராக இருந்த, மாண்புமிகு திரு. V. T. சம்பந்தம் அவர்கள் வழங்கினார்கள்.

1962இல் சைவசித்தாந்தத்துக்கு இவர்கள் ஆற்றிய தொண்டைப் பாராட்டி, திரு. கா. இராமனாதன் செட்டியார், B.A.B.L., அவர்கள் தலைமையில், ''**சித்தாந்த வித்தகர்**'' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

1970ல், இவர்கள் எழுதிய ''கடவுளால் முடியாத செயல்கள்'' என்னும் நூலைப் பாராட்டிச் சென்னை, ஹிந்து பரிஷத்சபை, ''**வித்யா ரத்னு**'' என்னும் பட்டத்தை வழங்கியது.

1978இல் இவர்களது கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவைப் பாராட்டி, புதுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தார், ''**செந்தமிழ்ச் செம்மல்**'' என்னும் பட்டத்தை வழங்கினர்.

பழக்க வழக்கங்கள்

இத்துணைச் சிறப்பு நலன்கள் நிறைந்த ஐயா அவர்கள் மிக மிக எளிமையாகப் பழகும்

இயல்பினர். உறவினர்களிடம் பழகுவது போலவே நண்பர்களிடமும் அளவளாவுவார்கள். தம் மனத்தில் பட்டதைக் கள்ளமின்றிக் கூறிவிடுவார்கள். எவ்வளவு பெரியவர்கள் என்று மதிக்கப்பெற்றவர்களாக இருந்தாலும், அவர்கள் கருத்து நேர்மையற்றதாக இருந்தால் அது தவறு என்று கூறிவிடுவார்கள். அதே சமயத்தில், தமது கருத்தைத் தக்க காரணங் காட்டி மறுத்தால் உடனே ஒப்புக்கொள்ளவும் தயங்க மாட்டார்கள்.

ஒழுக்கக் குறைவு உடையவர்கள், சமயப் பிரசாரம்செய்யத் தகுதியற்றவர்கள் என்பது அவர்கள் கருத்து. மனிதாபிமானத்தோடு எந்தச் சிக்கலையும் அணுக வேண்டும் என்பார்கள். ஏழை எளியவர்களுக்குச் சிறுசிறு உதவிகள் எப்போதும் செய்துகொண்டிருக்கிறார்கள்; தமது பொருளாதாரத்திற்கு ஏற்ற தருமங்களும் செய்து வருகிறார்கள்.

உலகின் நிலையாமையைக் குறித்துப் பெரிதும் வருந்துவார்கள். புன்செய்ப் புளியம்பட்டி அன்பர் திரு ஆறுமுகம் அவர்கள் மறைந்த செய்தியும் தமது தங்கையின் கணவர் மறைந்த நிகழ்ச்சியும் இவர்களுக்குப் பெரும் மன அலைவை ஏற்படுத்தின.

தினமும் திருமுறைப் படனம் செய்கிறார்கள். தமது வழிபடு தெய்வமாகத் தில்லை அம்பலவாணரைக் கொண்டுள்ளார்கள். தினமும் காலையில் சிவஞானசித்தியார் 301-இல் கூறப்பட்டுள்ள அகவழிபாட்டைச் செய்து முடித்த பின்பே உணவு உட்கொள்கிறார்கள். இவ்வழிபாட்டை 30 மணித்துளிகளுக்குக் குறையாமல் செய்கிறார்கள். வழிபாட்டில் முனைந்து நின்றால், ஊழ்வலியிலிருந்து விடுபடுவது உறுதி என்ற கொள்கையில் உறைப்பு உடையவர்களாக வாழ்கிறார்கள்.

மணிவிழா மலர்

சித்தாந்த சைவத்தின் வளர்ச்சிக்காகத் தம் வாழ்வின் பெரும் பகுதியையும் தம் உழைப்பையும் அர்ப்பணித்து வரும், மணிவிழாச்செல்வரைச் சிறப்பிப்பதற்காகச்சென்னை, சைவசித்தாந்த மகா சமாசம் இம்மலரை வெளியிட உவகை கொண்டது பாராட்டப்படுதற்குரியது. சமாஜச் செயலாளர் திரு அம்பை சங்கரன் அவர்கள் இம்மலர்த் தொகுப்பை மிகுந்த ஆர்வத்துடன் செய்து முடித்தார்கள். அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் நன்றி செலுத்த எளியேன் கடமைப் பட்டுள்ளேன்.

வாழ்த்துரை

பல்லாற்றானும்பாராட்டப்படுதற்குரிய இவ்வருள்நெறிச்செல்வர்—புலவர் மணி—சித்தாந்த வித்தகர்—வித்யாரத்ன—செந்தமிழ்ச் செம்மல், தமது அறுபதாண்டு நிறைவு விழாவைப் போல், தமது எண்பதாண்டு நிறைவு விழாவையும் கொண்டாடுதற்கு, எளியேன் தன் வழிபடு தெய்வமாகிய குழித்துறை மகாதேவரை வழுத்தி வணங்கிப் பல்லாண்டு—பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகம் எல்லாம்''

வேதாகமப் பிரமாணம்

'முப்மொழிக் கொண்டல்'
பெ. திருஞான சம்பந்தன்

'வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்' (.397) என்றார் திருமூலர். பின்னர் வந்த நம் சந்தானசாரியரான அருள்நந்தி தேவரும், 'அருமறையாகமம் முதனூல்' (266) என்றார். 'வேதாந்தத் தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்' என்றும் பிறிதோரிடத்தில் அவரே கூறுகிறார். 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்க லுற்றாம்' என்று அவருக்குப் பின் வந்த சந்தானசாரியாரான உமாபதி சிவமும் அதே கருத்தைத் தெளிவுபடுத்துகின்றார். ஆகவே சைவசித்தாந்தத்திற்குப் பிரமாண நூல்களாக நாம் கொள்ள வேண்டியவை நால் வேதமும், இருபத்தெட்டு சிவாகமங்களும், பதினன்கு தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்களுமாம் என்று பெறப்பட்டது.

வேதங்களும் சிவாகமங்களும் இறைவனுகிய நம் சிவ பெருமானுல் அருளப்பட்ட காரணத்தினுலே அவை பிரமாண நூல்களாக ஆகின்றன. இவ்விரண்டையும் ஒரு சேர வைத்தெண்ணுகின்ற நம் சமயாசாரியர்கள் திருவாக்கும் இதற்கு அரண் செய்வதாய் அமைந்துள்ளன. திருஞானசம்பந்த மூர்த்திகள், 'தொகுத்தான் அருமறை அங்கம், ஆகமம் வகுத்தவன்' (3. 23.6) என்றும், 'ஆறு சமயங்களும் விரும்பி அடிபேணி அரன் ஆகமம் மிகக் கூறும்' (3.79.6) என்றும் கூறியுள்ளார். அப்பர் பெருமான், 'நாலு வேதம் சரித்தது நன்னெறி நாலு... (5. 89. 4) என்ற இடத்தில் நான்கு வேதங்களையும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு நெறிகளை விரித்துக் கூறும் ஆகமங்களையும் அருளியவன் எம்பெருமான் என்று அறிவித்துள்ளார். சுந்தரரும், திருநொடித்தான் மலையில் வீற்றிருக்கும் பெருமானைத் துதிக்கின்றபோது (7-ஆம் திருமறை பக். 257) 'அரவொலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள் விரவிய வேத ஒலி' என்று வேதாகமங்களைக் குறிப்பிடுகிறார். மாணிக்கவாசகரும், 'மகேந்திரமதனிற் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளிய பெருமானை', 'மூவா நான்மறை முதல்வா' என்றும் போற்றுவதைப் பார்க்கிறோம். காரைக்காலம்மையாரும் 'வேதப் பொருளானை வேதத்துக் காதியனை என்று திருவிரட்டை மணிமாலையில் துதிக்கின்றார். சேக்கிழார் பெருமானும் திருக்குறிப்புத் தொண்ட நாயனர் புராணத்தில், 'எண்ணில் ஆகமம் இயம்பிய' இறைவனைக் குறிப்பிடுகின்றார் (51). இக்கூற்றுகளிலிருந்து சமயாசாரியர்களும் சந்தானசாரியர்களும் எப்படி வேதாகமங்களைப் பொன்னேபோல் போற்றி வந்தனர் என்பது புலனுகும்.

திருமூலரின் கருத்தை யொட்டி, பிரம்ம சூத்திரத்திற்கு உரைவகுத்த சிவாத்வைத வாதியான ஸ்ரீகண்டரும், 'சிவ பெருமானிடமிருந்து வந்தது (ஆகமம்) என்பதால் வேதத்தையே 'ஆகமம்' என்று கூறுவாரும் உண்டு. ஆயினும் வேதம் மூவருணத்தாருக்கும் மட்டும் உரியது, சிவாகமமோ எல்லா வருணத்தாருக்கும் உரியது. இவ்விரண்டையும் அருளியவன் சிவனுதலால் இவ்விரண்டிற்குமிடையே வேறுபாட்டை யாம் காணவில்லை' என்கிறார்.

திருவதிகை மனவாசகங் கடந்தார், 'வண்மை தரும் ஆகமநூல் வைத்தபொருள் வழுவா உண்மை விளக்கம் உரை செய்யப்' புகுவதாக நூலின் காப்புச் செய்யுளில் கூறுவதைக் கொண்டு, சிவாகமங்களுக்கும் சித்தாந்த சாத்திரங்களுக்கும் உள்ள தொடர்பைக் காணலாம். சிவஞான சித்தியாருக்கு உரை வகுத்த சிவாக்கிரயோகிகளும் 'சிவாகமப் பொருள்களை யெல்லாம் திருமுனிவர் சிவஞான சித்தியென்றே செப்பினர்' என்று கூறியிருப்பதையும் நோக்குக.

வேதங்களும் சிவாகமங்களும் சைவசித் தாந்திகளுக்குப் பிரமாண நூல்கள் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் எந்த அளவிற்கு இவை மெய்கண்ட சந்தானத்தில் தோற்றுவிக்கப்பட்ட நூல் களுக்கு அரண் செய்கின்றனவோ அந்த அளவிற்கே அவை கொள்ளத் தக்கன என்பதையும் நாம் நினைவில் இருத்திக் கொள்ளத் தகும். வேதப் பகுதிகளில் ஒரு சிலவே சமயாசாரியர்களும் சந்தானாசாரியர்களும் வகுத்துத் தந்துள்ள சைவ சித்தாந்தத்திற்குத் துணை யாவன. அவற்றைக் காட்டிலும் மிகுதியான அளவில் சிவாகமங்கள் சித்தாந்தத்திற்குத் துணை செய்வனவாக நாம் காணலாம். சிவாகமங்களுக்குள்ளும் சித்தாந்தக் கொள்கைக்கு முற்றிலும் ஒவ்வாத பகுதிகள் இருக்கின்றன. இந்த நிலையில் வேதங்களும் ஆகமங்களும் சிவன் அருளியவை என்றால் அதை எப்படி ஏற்றுக் கொள்வது என்ற ஐயம் எழலாம். இதற்கு விடை 'வேதாந்தத் தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்' (சித்தியார்—சுப 267) என்ற சொற்றொடரில் அமைந்துள்ளதை ஞானப்பிரகாசர் கூறுவது போல, 'சித்தாந்தத்திற்கு விரோதியாகாத வேதாந்தப் பொருள் குறிகக்கும் பகுதிகள்' என்ற வகையில் நாம் காணலாம். இக்கருத்து காமிகாகமத் திலேயே வலியுறுத்தப்படுகிறது—'வைதிகம் சர்வ சங்கிராஹ்யம் சைவ வாக்யாவிரோதியத்'. இதன் பொருள், சைவ சாத்திரங்களுக்கு முரணாகாத எந்த வேத வாக்கியம் உளதோ அது கொள்ளத் தக்கது' என்பதாகும். 'வேதாந்தத் **தெளிவாம்** சைவ சித்தாந்தத் திறன்' என்ற உமாபதி சிவத்தின் வாக்கும் இங்கே நினைவு கூரத் தக்கது. வேதாந்தத்தில் மயக்கந் தருகின்ற தெளிவற்ற பகுதிகள் இருக்கின்றன. அவரவர் தத்தம் கொள்கைக்கேற்ப வலிந்து பொருள் கொண்டு மக்களை மயங்கச் செய்கின்றனர். உபநிடதங்களின் தெளிந்த பொருளை' சுருதி, யுக்தி, அநுபவம் என்பன வற்றின் துணைகொண்டு தெளிவு படுத்துவது சைவ சித்தாந்தத்தின் திறன்' என்று அவர் கூறுகிறார். அப்படியானால் முரண்பட்ட கருத்துக்களை அத்வைதிகள், விசிஷ்டாத் வைதிகள் போன்றோர் போற்றும் வகையில் அமைத்து அவ்வேதப்பகுதிகளை சிவபெருமான் அருளியிருப்பது எங்ஙனம் என்ற வினா எழுகிறது.

சைவசித்தாந்த பரிபாஷையின் ஆசிரியரான சூரிய சிவாசாரியார் கருத்து இவ்வினாவிற்கு விடை காண முற்படுகிறது. 'வேதத்தில் கூறப்படும் காமிய கருமாக்களையும், பஞ்சாக்கிர மந்திரத்திற்கு மாறுபட்ட முறையில் வேதத்தில் விதிக்கப்பட்ட உபாசனாமுறைகளும், சித்தாந்தத்திற்கு ஒவ்வாத சீவாத்மா பரமாத்மா ஐக்கியத்தைக் கூறும் பகுதிகளும் பிரமாணமாகா, அவையெல்லாம் அபக்குவான்மாக்களின் தரத்திற்கேற்ப ஆக்கப்பட்டவை. அவர்கள் ஆன்மீகத்துறையில் அடைந்துள்ளபடி நிலைகளுக்கேற்ப அவ்வப்பகுதிகள் அவர்களுக்குப் பிரமாணமாகும். சோபான முறையில் அப்படி நிலைகளைக் கடந்து அவர்கள் வேதாந்தமென்ற கிளையின் உச்சியில் பழுத்த சைவசித்தாந்தம் என்னும் நறுங்கனியைச் சுவைக்கும் பக்குவத்தை அடைவதற்காக நம் பெருமானால் அருள்கூர்ந்து அருளப்பெற்றவை அவ்வேத வேதாந்தப் பகுதிகள் என்று கொண்டால், வேதாகமங்கள் அனைத்தும் அவரவர்களுக்குப் பிரமாணமாம் என்பதை அறியலாம். பாசஞானம் மிகுதியும் கொண்டது வேதமும், அபரஞானம் மிகுதியும் கொண்டது ஆகமமுமாகும். எனினும் இவ்விரண்டின் இயல்பையும் இன்றியமையாத் தன்மையையும் உணர்ந்த அருள் நந்தி சிவாசாரியார் 'வேதாகமங்களின் குறியிறந்து விளங்கும் சிவனடியைப் போற்றியுள்ளதைப் பார்க்கிறோம்.

அக்கினி, சூரியன், வருணன் முதலான தேவர்களை ஆராதிப்பதையே வேதம் முக்கியமாகக் கொள்வதால் அதைப்பொதுநூல் என்றும், சிவனையே முழு முதற்பொருளாகக் கொள்ளும் சிவாகமம் சிறப்புநூல் என்றும் சித்தியார் கூறியுள்ளதை இங்கே நாம் நினைவு கூர்தல் தகும். பொதுவான கூற்றுக்கும் சிறப்பான கூற்றுக்கும் முரண் ஏற்படும் போது சிறப்பான கூற்றையே மேற் கொள்ள வேண்டும் என்பது சாத்திரங்களில் கடைப்பிடிக்கப்படும்

தியாயம். இதை நாம் இங்கே பின்பற்ற வேண்டும். மேலும் உலகத்தவர்க்கு ஏற்பட்ட பொதுநூல் வேதம், சத்தி நிபாதர்க்கு ஏற்பட்ட சிறப்புநூல் சைவம். (சித்தியார், 8-267)

ருக்வேதத்தில் உருத்திர தேவதையை நோக்கி, 'உமது பாணங்கள் எங்கள் எதிரிகளின் மீது செல்லட்டும். நல்ல வீரர்களை எங்களுக்குப் புத்திரர்களாக அளியுங்கள்' என்று கூறும் மந்திரம் பாசஞானத்தின் பாற்பட்டது. 'அஹம் பிரம்மாஸ்மி' என்று 'நானே பிரமம்' என்று தருக்கிக் கூறும் கூற்று பசுஞானத்தின் பாற்பட்டது. இவை சைவ சித்தாந்திகளுக்குப் பிரமாணமாகா. மூன்று வேதங்களின் நடுவில் அமைந்த யஜுர்வேதத்தில்நடுவில் காணப்படும் ஸ்ரீருத்ரம் சைவர்களுக்கு உரித்தான பகுதி. அதிலும் நடுவில் அமைந்துள்ளது பஞ்சாக்கர மந்திரம். இவ்வேதப்பகுதி கொள்ளத்தக்கது. அதே போல் சுவேதாசுவதாஉபநிடதத்தில் 'தம் ஈச்வராணும் பரமம் மஹேச்வரம், தம் தேவதா நாம் பரமம் ச தைவதம், பதிம் பதீநாம் பரமம் பரஸ்தாத், விதாம தேவம் புவனேசம் ஈட்யம்' (ஈட்யம்-போற்றத்தக்கவர்) என்ற மந்திரம்(6-7) தேவர் கோனுகிற மகேசுவரன் பிரபஞ்சத்தைக் கடந்தும் அதனை ஆண்டும் வருகின்ற நிலையைக் கூறும் பகுதி. இது நாம் கூறும் பதியிலக்கணத்திற்கு ஒத்த முறையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

ஆகமங்களை எடுத்துக் கொண்டாலும் காச்மீர சைவம் அறுபதுக்கும் மேற்பட்ட ஆகமங்களை ஏற்றுக் கொள்கின்றது. திருமூலர் இருபத்தெட்டு ஆகமங்களைக் (57) குறிப்பிட்ட போதும், நந்தி பெற்ற நல்லாகமங்கள் பத்தைப் பெயரிட்டுக்குறிப்பிடுகின்றார். அவை காரணம் காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம் சுப்பிரம் (சுப்பிரபேதம்), மகுடம் என்பன வாகும்(63). காச்மீரத்தில் பயின்று வரப்பட்ட ஆகமங்களுள் மாலினீவிஜயம், ஸ்வச்சந்தம், விஞ்ஞானபைரவம், உச்சஷ்மபைரவம். ஆனந்த பைரவம், மிருகேந்திரம், மதங்கம், நேத்ரம், நைசுவாசம், சுவாயம்புவம், ருத்ரயாமளம்ஆகியவை சில. இவை காச்மீர சைவம் தோன்றிய 9-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே இருந்தவை. 'இறையும் உயிரும் இயல்பால் வேறுபட்ட இரு நித்தியப் பொருள்கள்' என்ற கருத்தைப் பண்டைக்காலம் முதல் தென்னாட்டுச் சைவம் போலவே காச்மீரத்தில் வாழ்ந்த சைவர்களும் கருதிவந்தனர். ஆனால் அத்வைதச் சார்பு பெற்ற சைவம் காச்மீரத்தில் தோன்றிய பின்னர் வந்த க்ஷேமராஜர்தாம் எழுதிய சுவச்சந்தாகம உரையில், ''சுவச்சந்த தந்திரத்திற்கு (ஆகமத்திற்கு) வழிவழியாக பேத வியாக்கியானம் தரப்பட்டு வந்துள்ளது. அதனால் விளைந்த அறியாமையைப் போக்க எழுந்தது, அத்துவைதாமிருதத்தைப் பெருக்கும் எனது 'உத்யோதம்' என்ற உரை' என்று ஒளிவு மறைவில்லாமல் கூறுவதிலிருந்து, தென்னாட்டில் வழங்கி வந்தது போன்ற சைவம் காச்மீரத்திலும் தொன்று தொட்டு நிலவி வந்தது என்றும், சங்கரர் 8-ஆம் நூற்றாண்டில் காச்மீரத்தில் அத்வைத மடம் ஏற்படுத்திய பின்னர் அந்த வாடை பட்டு காச்மீரத்தில் சைவம் அத்துவைத நெறியால் ஓரளவு தாக்குற்று மாறுபாடடைந்திருக்கக் கூடும் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. இன்றும் மும்மலத்தையும் பஞ்ச கிருத்தியத்தையும் உடன்பட்டுப்பேசும். காச்மீர சைவம், சிவபெருமானே தன் சங்கற்பத்தால் அவ்வப்போது பிரபஞ்சமாகத் தோன்றுகிறான், அவனே இப்பிரபஞ்சம் இப்பிரபஞ்சமே அவன் என்ற வகையில் இரண்டுமே இயல்பில் ஒரு பொருளே என்ற அத்வைதக்கொள்கையை வலியுறுத்தி வருகின்றது. ஆயினும் அத்வைதத்தைப் போலன்றி, இப்பிரபஞ்சம் மித்தையல்ல உண்மைப் பொருளே என்றும் பேசுகிறது.

இதுகாறும் கூறியவாற்றால் வேதங்களும் ஆகமங்களும் இறைவன் நூல் என்ற காரணத்தால் முதனூல்களே ஆயினும், அவனருளுபதேசத்தால் நந்திமரபில் வந்த சிவாகமங்களும், அச்சந்தான பரம்பரையில் வந்த சந்தானசாரியர் நூல்களும், சிவனருள் பெற்ற சமயாசாரியார்களின் தோத்திரங்களும் சித்தாந்திகளுக்குரிய பிரமாண நூல்களாம் என்றும், சித்தாந்திகளுக் கொவ்வாத வேதாகமப் பகுதி

கள் அந்தந்தப்படி நிலைகளில் உள்ளோர் உய்ய பெருமானால் அருளப்பட்டன என்றும், இச் சித்தாந்த நெறி பண்டைக் காலத்திலேயே காச்மீரம் முதல் குமரி வரை பரவி யிருந்தது என்றும் கண்டோம்.

பார்வையிடப்பட்ட நூற்பட்டியல்—

சிவஞானசித்தியார், சுபக்கம், மு. திரு விளங்கம் புத்துரை, யாழ்ப்பாணம் திருமுறைகள், திருப்பனந்தாள் மடத்தார் பதிப்பு, காமீகாகமம், அர்ச்சகர் சங்கப் பதிப்பு, ஞானாவரணமும் மாபாடியமும், வெள்ளியம்பலவாணத் தம்பிரான். சுவேதாசுவர உபநிடதம், இராமகிருஷ்ணமடப் பதிப்பு, தருமையாதீனப் பதிப்பு சைவசித்தாந்த பரிபாஷை, சூரியசிவாசாரியார், தேவகோட்டை பதிப்பு, காச்மீரசைவம் பெ. திருஞானசம்பந்தன், சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறை வெளியீடு,

★

ஈகையும் வினைநீக்கமும்

பொருளை மட்டும் கொண்டு வினையை நீக்கலாம் எனக் கருதுதல் பிழையாகும். வினையைப் போக்கிக் கொள்ளத் தாம் அரிதில் தேடிய பொருளை வழங்குதலும் துணை செய்யும் என்றே இதனைக் கொள்ள வேண்டும். வினையைப் போக்கிக் கொள்ள மனத்தூய்மையே முதலில் வேண்டப்படும். பொருள் ஓரளவு துணை செய்யும். அதுவும் வறியவர்க்கு வழங்கினாலேயே பயன் பெறும்,

★

முயற்சியும் ஊழ்வினையும்

ஊழ்தான் முயற்சியைச் செய்யும்படித் தூண்டுகிறது எனச் சிலர் தவறாகக் கருதுகின்றனர். நமது விருப்பமே முயற்சியை செய்யும்படித் தூண்டுகிறது. இறைவன், நம் முயற்சியை அறிந்து அதற்குத் தக்கவாறு ஊழை நுழைத்து விடுகிறான். இதனால் ஊழுக்கும் முயற்சிக்கும் வேறுபாடு அறிய முடியாமல் போகிறது. ஆனால் உண்மையில் முயற்சி வேறு; ஊழ்வேறு.

—மணிவிழாச் செல்வர்

ஓம்
திருச்சிற்றம்பலம்

மறைமலையடிகள் மன்றத்திற்கும் சிவத்திரு முரு.பழ. இரத்தினஞ்செட்டியார் அவர்களுக்கும் உள்ள தொடர்பு

அறுபதாண்டுகள் நிறைவுற்று மணிவிழாக் காணும் ஐயா அவர்கட்கும், மறைமலையடிகள் மன்றத்திற்கும் உள்ள தொடர்பு பழைமையானது; ஆழமானது; நிலையானது. ஐயா அவர்களை மன்றத்துடன் தொடர்பு கொள்ளச் செய்து இன்றைய நிலைக்கு ஆக்குவித்த மறைந்த மன்றத் தலைவர் சிவத்திரு ஆறுமுகனாரை நினைந்து இக்கட்டுரையை எழுதியுள்ளேன்.

ஏறக்குறைய இருபதாண்டுகட்கு முன்னர் மன்ற உறுப்பினர்களில் பலர் கல்லூரிகளிலும் பிற பயிற்சி நிறுவனங்களிலும் பயின்று கொண்டிருந்தனர். மறைந்த மன்றத் தலைவர் தமிழ்க் கடல் மறைமலையடிகளார்வரலாற்றைப் படித்த போது சைவ சித்தாந்த மகா சமாசம் பற்றி அறிந்து அதன் செயலாளரோடு தொடர்பு கொண்டார். பின்னர் அதில் உறுப்பினராகச் சேர்ந்ததுடன் பழைய இதழ்களையும் விரும்பி வரவழைத்துப் படித்தார். அப்போது நம் ஐயா அவர்களின் கடவுளால் முடியாத செயல்கள், மரம் முத்தியா? வித்து முந்தியா? முதலான கட்டுரைகளைப் படித்து அவைகளில், தோய்ந்தார்; மூழ்கினார். மன்ற உறுப்பினர்களிடம் கொடுத்துப் படிக்கச் செய்தார். சைவ சித்தாந்தம் குறித்துச் சிறிதளவே தெரிந்திருந்த எங்கட்குக் கட்டுரைகள் மிகத்தெளிவை உண்டாக்கின. ''சாத்திர நூல்களை முறையாகப் பாடம் கேட்க வேண்டும்'' என்னும் வேட்கையை உண்டாக்கின. மன்ற அன்பர்கள், இறையடி யெய்திய காஞ்சி ஞானப் பிரகாச அடிகளாரிடம் காஞ்சிபுரத்திற்கும், பேரூருக்கும் சென்று சிந்தாந்தம் பாடம் கேட்டதற்கும், சிவ தீக்கை பெற்று வழிபாடாற்றி வருதற்கும் ஐயா அவர்களின் கட்டுரைகளே அடிப்படைக் காரணியமெனில் மிகையாகாது. ஐயா அவர்களைக் காணும் வாய்ப்பை எதிர்நோக்கியிருந்தோம்.

பாண்டிச்சேரியில் சமாச மாநாடு நடைபெற்ற போது திரு. ஆறுமுகனார் மன்ற உறுப்பினர்களான திரு. ஆடலரசன், திரு. பொன். கணேசன் ஆகியோருடன் அம்மாநாட்டில் கலந்து கொண்டார். நம் ஐயா அவர்களை மாநாட்டில் சந்தித்து அளவளாவி மகிழ்ந்த ஆறுமுகனார், மன்ற அன்பர்கள் கேட்கும் ஐய வினாக்களுக்கு அஞ்சல் வழி விடையளிக்க வேண்டுமென்று ஐயா அவர்களிடம் வேண்டிக் கொண்டார். அதன் பின்னர் நாங்கள் எங்களுக்கு ஏற்பட்ட ஐயங்களையெல்லாம் தெளிவான வினாக்களாக எழுதி அனுப்பினோம். அவைகட்கு ஐயா அவர்கள், உளங் கொள்ளத் தக்க முறையில் சலிப்பில்லாமல்பொருத்தமான விடைகளை எழுதி அனுப்பினார். பின்னர் பயன்படுமென்று தோன்றினமையால் அவைகளை எளியேன் படியெடுத்து வைத்தேன். சிலதிங்களிலேயே நூலாக வெளியிட முடிவு செய்தோம். அதுவரை ஐயா அவர்கள் விடையளித்த 70 வினா விடைகளை ஒரு பகுதியாக 1966 ஆம் ஆண்டில் ''தடைகளும் விடைகளும்'' என்ற பெயரில் அடக்க விலைப் பதிப்பாக வெளியிட்டோம். இந்நூல் பல அறிஞர்களாலும் பல இதழ்களாலும் பாராட்டப் பெற்றது. தமிழுக்குப் புதிய நூலாக இருந்தமையால் அவை முழுதும் சில மாதங்களிலேயே விற்றுத் தீர்ந்தன.

எங்களைச் சிவநெறிப் பணிகளில் மிக்க ஆர்வத்தோடு ஈடுபடப் பெரிதும் உதவிய ஐயா அவர்களின் 'கடவுளால் முடியாத செயல்கள்'

'மரம் முந்தியா? வித்து முந்தியா?' முதலான கட்டுரைகளை நூலாக அச்சிட விரும்பினோம். ஐயா அவர்கள் இசைவு தந்ததுடன் அவர்களே புதுக்கோட்டை அச்சகத்தில் செவ்வனே அச்சிட்டுக் கொடுத்தார். சிவநெறி உண்மைகளை நுட்பமாகவும் எளிமையாகவும் கூறும் ''கடவுளால் முடியாத செயல்கள்'' எனும் பெயரிய இந்நூல் 13-10-68இல் திருச்சியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணைவேந்தர் திரு. தி. மு. நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி.எல்., அவர்களால் வெளியிடப் பெற்றது. இவ்வெளியீட்டு விழா நிகழ்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றவர்வடலூர் தெய்வ நிலையங்களின் அறங்காவலர் குழுத் தலைவர் தவத்திரு. ஊரன் அடிகள் ஆவார். மன்ற வெளியீடான ஐயா அவர்களின் இரு நூல்களும் தமிழ் கூறும் நல்லுலகச் சான்றோரான் மட்டுமின்றித் தமிழகத்திற்கு அப்பாலும் கடல் கடந்த நாடுகளில் உள்ள பெருமக்களாலும் பாராட்டப் பெற்றுப் பலஅறிஞர்களின் ஐயங்களைக் களைந்தன.

ஐயாஅவர்களை எம்நகருக்கு வரவழைத்துச் சிறப்பிக்க விழைந்தோம். மலேயாவினின்றும் தமிழகம் போந்த அவர்கள் எங்கள் அழைப்பை ஏற்றுப் புளியம்பட்டிக்கு வருகை புரிந்தார். எங்கள் 'வெறி' தீருமளவுப் பேசி—அளவளாவி மகிழ்ந்தோம்' ''மறுபிறவி உண்டா?'' என்ற தலைப்பில் 4-4-75 ஆம் நாள் ஓர் அரிய சொற்பொழிவாற்றினார். ''உயிர்கள் உண்டா? இறப்புக்குப் பின் வாழ்க்கை உண்டா? நல்வினைகளும் தீவினைகளும், துறக்க-நிரய உலகங்களும் உண்டா? உயிர்களுக்கு முற்பிறவியும் மறுபிறவியும் உண்டா? ஊழ்வினை இருப்பது உண்மையா?'' போன்ற பகுத்தறிவு வினாக்களுக்கு அறிவுக்குப் பொருந்துமாறு தம் சொற்பொழிவில் விடைகள் கூறி மக்களைச் சிந்திக்க வைத்தார்.

ஐயா அவர்களின் நூல்களைக் கற்ற பெருமக்கள் அளித்த ஊக்கத்தின் பயனாக, அவர்கள் எங்கள் ஐயங்களுக்கு அளித்த விடைகளைத் தொகுத்துத் ''தடைகளும் விடைகளும்'' (இரண்டாம் பகுதி) என்னும் பெயரில் நூலாக அச்சிட்டோம். அந்நூலின் வெளியீட்டுவிழா 1-9-75 ஆம் பக்கல் எம் ஊரிலேயே நிகழ்ந்தது. பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமட முதல்வர் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தலைமையில், அப்போது சட்ட மேலவை உறுப்பினராக இருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூலை வெளியிட்டு ஆய்வுரை நிகழ்த்தினார். நூலில் தனக்குள்ள சில கருத்து வேறுபாடுகளையும் குறிப்பிட்டார். அவைகளை எழுதியனுப்புமாறு மடல்வழியும் நேரிலும் வேண்டிக் கொண்டும் ஏனோ அடிகளார் எழுதி அனுப்பவில்லை!

ஐயா அவர்களின் சொற்பெருக்கின் சுவை கண்ட நாங்கள் மேலும் அவரை எம் நகருக்கு அழைக்க விரும்பினோம். அவ்வமயம் பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்கள், அங்கு நடத்திய வேள்வியில் நம் ஐயா அவர்களை சொற்பொழிவிற்கு அழைத்திருந்தார். உடனே நாங்கள் ஐயாவுடன் தொடர்பு கொண்டு எம்மூரில் இரு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இசைவினைப் பெற்றோம். நானும் மன்ற உறுப்பினர் திரு. இளமுருகு அவர்களும் பொள்ளாச்சி சென்று ஐயா அவர்களின் பேச்சைக் கேட்டுப் பயன் பெற்றோம். அன்று அவருடனேயே தங்கியிருந்து அளவளாவி மகிழ்ந்தோம். அடுத்த நாள் எம் நகருக்கு அழைத்து வந்தோம்.

ஐயா அவர்கள் சமயத் துறையில் மட்டுமின்றி இலக்கியத் துறையிலும் ஆழ்ந்த புலமை படைத்தவர் என்பதை அவர்கள் 4-10-76 ஆம் பக்கல் எம்நகரில் நிகழ்ந்த, ''வாலியை மறைந்திருந்து கொன்றதால் இராமன் குற்றவாளியே'' என்ற வழக்காடு மன்ற நிகழ்ச்சியின் நடுவராக இருந்து நிகழ்த்திய நுணுக்கமான தீர்ப்பினின்றும் நாங்கள் உணர்ந்தோம். புலவர். திரு. துரை சிவானந்தம் அவர்கள் வழக்குத் தொடுக்க, திரு. மா. கணேசன், எம். ஏ.,பி. டி., அவர்கள் அதை மறுத்தார். இடையிடையே ஐயா அவர்கள் கூறிய விளக்கங்கள் மக்களை வியப்பிலாழ்த்தின. இறுதி

யில் அவர் வழங்கிய தீர்ப்புரை இத்துறையிலேயே முழ்கிக்கிடக்கும் அறிஞர்களின் உரையையும் விஞ்சியதெனில் மிகையாகாது.

அடுத்த நாள் 5-10-76இல் ''கடவுள் உண்டா'' என்ற சிக்கலான தலைப்பில் ஓர் ஆய்வுச் சொற்பொழிவினை நிகழ்த்தினர். அப்போது அவர் இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) பற்றி சித்தாந்தக் கொள்கையினை—கருத்தினை—மிக மிக எளிய முறையில் அனைவரும் புரிந்து கொள்ளத்தக்கவாறுவிளக்கினர். இறுதியில் கடவுள் பற்றிய ஐய வினுக்கட்கு (முன் கூட்டியே மக்களால் எழுதிக் கொடுக்கப் பெற்றவை) விடை பகர்ந்தார்.

''மேன்மை கொள் சைவ நீதி'' உலகமெல்லாம் பரப்பும் நோக்கத்தில் நூல்வெளியிட, மன்றத் தலைவராக இருந்த ஆறுமுகனர், புலால் தின்பதால் ஏற்படும் தீமைகள் குறித்துக் கருத்துக்களை பல ஆண்டுகளாகப் படித்துத் தொகுத்துவைத்திருந்தார். பலஐயங்கட்குஐயா அவர்களின்விடைகளையும்பெற்றுக்கொண்டார். சில ஐயங்கட்கு சிவத்திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களிடமும், திரு. குமார. ஞானசம்பந்தம் அவர்களிடமும் விளக்கம் கேட்டு எழுதிப் பெற்றுக் கொண்டார். பின் ''புலால் தின்பது தீவினையா? என்னும் பெயரில் வினு விடை வடிவில் நூலாக அச்சிடப் பெற்றது. நூலாசிரியர் பெயராக நம் ஐயா அவர்களின் பெயரையே அன்பின் காரணமாகப் பயன் படுத்திக் கொண்டோம். நூலின் முன்னுரையில் ஐயா அவர்கள் இவ்வுண்மையினைப் பெருந்தன்மையோடு குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் வெளியீட்டு விழாவை 15-4-78 ஆம் நாள் புளியம்பட்டியிலேயேநடாத்தினோம். சிவநெறிச் செல்வர் சிவத்திரு. ப. சு. மணியம் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். அறிஞர் பெருமக்கள் இருவர் நூலைப் பற்றிய ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

1979 ஆம் ஆண்டு சூன் மாதம் மன்றத் தலைவர் ஆறுமுகனரைப் புற்று நோய் மிகக் கடுமையாகத் தாக்கியிருப்பது கண்டுபிடிக்கப் பெற்றது. அவரைக் காப்பாற்ற நாங்கள் பெரிதும் முயன்றோம். மறைவதற்கு ஒரு திங்களுக்கு முன் ஐயா அவர்களுக்கு விளக்கி மடல் விடுத்தேன். அவர் மிகவும் வருந்தி ஆறுதல் கூறி எனக்கு மடல் விடுத்தார். மறைவுச் செய்தியினை உடனே ஐயாவுக்கு அனுப்பினேன். முடிவினை அவர்கள் எதிர்பார்த்தாலும் ஆறுமுகனரின் மறைவை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மிகவும் வருந்தி மடல் எழுதினர். அதில் ஆறுமுகனரின் குடும்பத்தைக் குறித்து விளக்கம் கேட்டிருந்தார். நான் உடனே எழுதி அனுப்பினேன்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் நானும் மன்ற உறுப்பினர் திரு. கி. தங்கவேலனரும் கலந்து கொண்டோம். பல்கலைக் கழகத்தில் ஐயா அவர்கள் சிறிது நேரம் மட்டுமே தனது ஆய்வுக் கட்டுரையைப் பற்றி விளக்கினர். சிலர் வினவிய வினுக்கட்கு விடை கூறினர். தொடர்ந்து கோவையில் அவரைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்தோம். அப்போதும் அவர், மறைந்த மன்றத் தலைவர் ஆறுமுகனர் வாழ்க்கைவரலாற்றைச் சித்தாந்த இதழில் வெளியிடுவது குறித்தும், அவர் பெயரில் சமாசத்திற்குக் குறிப்பிட்ட தொகை கொடுத்து சித்தாந்தத் தலைப்பில் ஆண்டுக்கொரு சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்வது குறித்தும் பேசினர். நான் வாழ்க்கைக் குறிப்பை எழுதி அனுப்பி விட்டேன். ஐயா அவர்கள் மலேயாவினின்றும் திரும்பிய பின்னரோ முன்னரோ வரலாறு சித்தாந்த இதழில் வெளிவரும்.

ஐயா அவர்களின் நூல்களைப் படித்தவர்கள் பலர் நேரிலும் அஞ்சல் வாயிலாகவும் பாராட்டியுள்ளனர். இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறையில் விரிவுரையாளராகப் (Reader) பணியாற்றி வரும் பர் (Dr) வை. இரத்தினசபாபதி பி. ஒ. எல்., எம்.ஏ. பிஎச்.டி., அவர்கள் ஐயா அவர்கள் பால் அளவிறந்த மதிப்பும் பற்றும் அன்பும் வைத்துள்ளார்கள். தமிழக அரசும் திருமடங்

களும், மக்களும் ஐயா அவர்களைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற கவலை அவருக்கு உள்ளதை எங்களிடம் கூறியுள்ளார். முன்னர் கோவையில் அறநிலையத் துறையில் துணை ஆணையராக இருந்தவரும் பின் திருத்தணிகை கோயிலின் துணை ஆணையாளராக இருந்தவருமான திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், ஐயா அவர்களின் கடவுளால் முடியாத செயல்கள்'' நூலை எழுத்தெண்ணிப் படித்தவர். எந்தப் பக்கத்தில் எந்தக் கருத்து உள்ளது என்பதை கூறுமளவுக்கு பன்முறை அந்நூலைப் பயின்றுள்ளார்.

இத்தகைய பேரறிஞரான ஐயா அவர்களின் மணிவிழா நிகழ்வது குறித்து மகிழ்கிறோம். அவர்கள் எல்லா நலங்களும் பெற்று நீண்ட நாள்கள் வாழ்ந்து தமிழுக்கும் சிவநெறிக்கும் தொண்டாற்ற எல்லாம் வல்ல அருள் தரும் உண்ணுமலை உடனமர் அண்ணுமலை அண்ணலின் திருவடியிணையை வழுத்துகிறேன். ஓம் சிவம்.

★

சித்தாந்த வித்தகர் மணிவிழா வாழ்த்து

நிலைமண்டில ஆசிரியப்பா

ஸ்ரீ சாயிமாதா சிவ. பிருந்தாதேவி

சித்தாந்த வித்தகர் சிறந்த புலமையைச்
சொத்தா கக்கொண் டவர்அவர் அறிவின்
எல்லையைக் கண்டவர், எடுத்து ரைப்பதில்
வல்லவர், நல்லவர், வாழத் தெரிந்தவர்
மணிவிழாக் காணும் மாண்புடைச் செம்மல்
அணிதிகழ் அம்பலக் கூத்தன் அருளால்:
பழ.முரு இரத்தினம் செட்டியார் என்றே
வழங்கிடும் அவர்நா மம்தான்
என்றும் வாழ்க; ஏற்றம் பெற்றே!

திருமந்திரப் புதையல்

வித்துவான் அம்பை சங்கரன்
(செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாசம், சென்னை-4)

பத்தாம் திருமுறையருளிய திருமூலதேவ நாயனுர் தம் திருமந்திரத்தில் சிறந்த கருத்துக்களை எளிமையாய்ப் புலப்படா நிலையில் ஆனுல் கூர்ந்து நோக்கில் தெரிந்து இன்புறும் வண்ணம் அருளிச் செய்திருக்கிறுர். அவற்றை நன்கு ஆழ்ந்து படிக்க வேண்டும். அப் பாக்கள் பாமர மக்களுக்கு மேலெழுந்த வாரியாக ஒரு பொருளைத் தரும். அநுபூதிமான்களுக்குச் சிறந்த பொருளைத் தர வல்லதாயிருக்கும். சைவத் திருமுறைகளுள் மிகப் பழமையானது திருமந்திரம் என்று கூறலாம். தோத்திரமாக அமையுமாயினும் ஒரு சாரார் இதனைச் சிறந்த சாத்திரமென்றும் கூறுவர்.

திருமந்திரம் சைவ சமயிகள் மேற்கொள்ள வேண்டிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகைப் படிகளுள் பெரும்பாலும் யோக நெறியை விளக்கமாய்க் கூறவல்லது என்று பலரும் பகர்வர். இருப்பினும் சிவபெருமானை மையமாய்க் கொண்டே இந்நால் வகைப் படிகளிலும் பயிற்சி பெற வேண்டும் என்பது திருமூலர் உள்ளக்கிடை. அதனைப் பல பாக்களுள் அழுத்தமாக அவர் கூறுகிறுர்.

ஒரு பாட்டில் எடுத்த எடுப்பிலேயே ''சிவபெருமானுடைய ஐந்தெழுத்து மந்திரத்தை மறந்துவிடாதே. எப்பொழுதும் உன் இரத்தத்தோடு அம்மந்திரம் ஊறிக்கலந்திருக்க வேண்டும். அந்நிலையில் பயிற்சியுடைய ஞயிரு'' என்று கூறுகிறுர். அத்தொடர் ''அஞ்சுகல'' என்பது.

உலகம் எச்செயலாற்ற முனைந்தாலும் அதனுல் ஏற்படும் பயன் யாது என்பதனையே எப்பொழுதும் கருத்தில் கொள்ள வல்லது. அதனுல் இறைவனுடைய ஐந்தெழுத்து மந்திரத்தை இடைவிடாது செபித்தால் பயன் யாதோ எனக் கேட்பாருக்குப் பதில் கூறுவது போல் அதற்கப்பால் ''இவ்வாறு ஐந்தெழுத்து மந்திரத்தை விடாது செபித்தால் உன்னை அறியாமலே உனக்கு அமிர்து ஊறும் நிலை ஏற்படும். அந்நிலையைத் துய்த்து இன்புறலாம்'' என்கிறுர். இக்கருத்தை வலியுறுத்தவே திருமூலர் ''அப்பு அறி'' என்ற தொடரை எடுத்தாளுகிறுர்.

இறைவனை நினைப்பது அவ்வளவு எளிதன்று. மெய், வாய், கண், மூக்கு, செவி முதலியன தனித்தனியாக ஒவ்வொரு பக்கம் இழுத்துச் சிந்தையைச் சிவபெருமான் பால் செலுத்த ஒட்டாது தடுக்கும். அதனுற்றுன் யோகம் பயில்வோர் தம் சிந்தையைப் பல்லாற்றுனும் செல்ல விடாமல் அடக்குவதற்கு மனத்தை மூலாதாரத்திலே செலுத்துவர். அங்கு செலுத்த முனைந்தால் அப்பயிற்சி முறின் சிறிது சிறிதாக மன அலைச்சல் குறைந்து விடும். இப்பேருண்மையைக் குறிப்பிடவே ''சிந்தையைச் சிவன் பாலே செலுத்துதற்குரிய வழி கடைசியிலுள்ளதாய அறையாகும்''என்று குறிப்பது போன்றே ''ஆறு கடையறை'' எனக் குறிப்பிடுகிறுன்.

நம் உடம்பில் ஆறு முக்கியமான இடங்கள் உள்ளன. அவற்றை ''ஷடாதாரம்'' என்பர். அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம் விசுத்தி, ஆக்ஞை என்பனவாம். மூலாதாரம் என்பது குதத்திற்குப் பக்கத்திலுள்ளது. சுவாதிட்டானம் என்பது குதத்துக்கு மேலும் நாபிக்குக் கீழும் உள்ளது மணிபூரகம் என்பது நாபித்தானமாகும். அநாகதம் என்பது நெஞ்சுத்தானத்தைக் குறிக்கும். விசுத்தி என்பது கழுத்தைக் குறிக்கும். ஆக்ஞை என்பது புருவங்களுக்கு நடுவிடத்தைக் குறிக்கும். இதற்கும் மேல்தான் பிரமரந்திரம் உள்ளது என்று யோகநூல் வல்லார் கூறுவர். இவ்வாறு ஆறு ஆதாரங்களையும் இணைப்பது சுழுமுனை நாடியாகும். இந்நாடியின் அடிப்பாகம் அக்கினி மண்டலம் என்றும் நடுப்பாகம் சூரிய மண்டலம் என்றும் புருவ நடுவுக்கு மேல் சந்திர மண்டலம் என்றும் அறிஞர் கூறுவர்.

இவ்வாறு ஆறு ஆதாரங்களிலும் சிந்தையைச் செலுத்தி, செபித்து அவ்வெண்ணத்தை மேலே கொண்டுவரின் அப்போது தான் புருவ மத்தியில் ஒரு ஜோதி தோன்றுவதாகக் கூறுவர். அவ்வாறு ஜோதி தோன்றக் காரணமாயிருக்கும் சக்தி குண்டலினி சக்தி ஆகும். இது மூலாதாரத்திலிருந்தே மேல் நோக்கி எழும். ஆறு தங்கலிடங்களிலும் சிறிது சிறிதாய் ஆற்றல் பெருகி நன்னிலையுற்று ஜோதிக் காட்சியைப் பெற வாய்ப்பினை ஏற்படுத்தும். இவ்வண்ணம் ஆறு ஆதாரங்களின் நடுவே இக்குண்டலினி சக்தி தோன்றி வளர்ந்து வருவதையே ''சந்தினிற் பூப்பவர்'' என அருமையாக ஆசிரியர் கூறுகிறார்.

இவ்வாறு ஆருதாரங்கள் வழியாக மேலே வரும் போது 18 உறுப்புகளும் அடங்கியமைய வேண்டும். அப்பதினெண் உறுப்புகளாவன:— சிரநடு, நெற்றி. புருவத்திடை, கண், நாசிமூலம் நாசிநுனி, பேசும் நாஅடி, கழுத்து, இருதயம், நாபிக்கமலம், இலிங்கம், ஆதாரம், தொடை நடு, முழந்தாள், கீழ் முழந்தாள், கணைக்கால், நடுப்பாகம், குற்பம் (பறடு) என்பனவாம். இதனையே ''சார்பு பதினெட்டு'' என்று ஆசிரியர் கூறுகிறார்.

இப்படி முயன்று யோக நிலையைப் பயின்று ஏற்படும் பயன் யாதோ வென்னில் நவாதாரங்களைக் குறிக் கொண்டு அவற்றில் இன்பமாய் அமைந்திருத்தலேயாகும். அதனையே ஆசிரியர் ''பந்தரும் ஒன்பது'' எனக் குறிப்பிடுகிறார். நவாதாரங்களாவன:- மேற்கூறிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் (நாபி)அநாகதம் (நெஞ்சு) விசுத்தி (கழுத்து) ஆக்ஞை (புருவநடு) நெற்றி, தலை, தலையின் பின்புறம் என்பனவாம்.

இவ்வாறு சிறந்த குறிக்கோளுடன் இறைவனை நினைக்கும் போது மனத்தை அடக்கும் நிலையைப் பற்றிக் கூறும் ஆசிரியர் மூன்றே முக்கால் நாழிகை வரை(அதாவது ஒன்றரைமணி நேரம் வரை) ஒரு குறிப்பிட்ட இடத்தில் மனம் அமைந்து கிடக்குமாளுல் நிட்டை கைகூடிற்று என்பதை விளக்குகிறார். அக்குறிப்பிட்ட இடத்திற்கு யோகப்பயிற்சி ஆசிரியர்கள் சுழுமுனை நாடியையே குறிப்பிடுவர். அந்நாடியினிடத்து $3\frac{3}{4}$ நாழிகை இறைவனை நினைத்து மனத்தைக் கட்டுப்படுத்து'' என்பதைக் குறிப்பிடவே ''பத்தி பதினேஞ்சில்'' என்று கூறுகிறார். ($15 \times \frac{1}{4} = 3\frac{3}{4}$) இவ்வாறு பத்தி செய்தால் இடாபிங்கலை வழியாகச் செல்லும் மூச்சுக் காற்றைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் மிக்க—வராகலாம்.ஆதலின் ''நம்கட்டுக்குட்பட்டதாக அக்காற்று அமையும். அதனாலேயே இடகலை பிங்கலை செயலற்று நசித்து விடும்'' என்பதைச் சுட்டவே ஆசிரியர் ''வெந்து கிடந்தது'' எனக் குறிப்பிடுகிறார். அதனால் முயன்று சிறந்த பரம்பொருளாய பிரணவப்பொருளை—சிவத்தை அறிவாயாக.'' என்பதையே ''மேலறிவோமே'' என்று விளக்குகிறார்.

இவ்வளவு செறிவு நிறைந்த திருப்பாடலைக் கீழே காண்போமாக

> அஞ்சு கலப்பறி ஆறு கடையறை
> சந்தினிற் பூப்பவர் சார்பு பதினெட்டுப்
> பந்தரும் ஒன்பது பத்தி பதினஞ்சு
> வெந்து கிடந்தது மேலறி வோமே.

(என்பது பரமகுருவானவன் சீஷனை நோக்கி இபாதோபதேசம் பண்ணினபடி என்றவாறு)

இதனைக் கீழ்க்காணுமாறு ஒன்பது வகையாகப் பிரிந்துப் பொருள் கண்டோம்.

அம்முறை வருமாறு:—

1 அஞ்சுகல 2 அப்புஅறி 3 ஆறுகடைஅறை
4 சந்தினிற் பூப்பவர் 5 சார்புபதினெட்டு
6 பந்தரும் ஒன்பது 7 பத்தி பதினஞ்சு
8 வெந்துகிடந்தது 9 மேலறிவோமே

என்பதாம்.

இச்சிறு செய்யுளில் ஒன்பது செயல் முறைகளை எடுத்துக்கூறி யோக நிலையிலிருந்தாலும் இறுதியில் அடையக்கூடிய பொருள் சிவபரம்

பொருளின் அருளாகத்தானிருக்க வேண்டும் என முடித்துக்காட்டி அதற்கு முதல்படி ஐந் தெழுந்து மந்திரத்தை விடாது செபிப்பது என் பதை முதன்மையாய் நாட்டி பின்னர் செபிக் கும் முறை, பலன் முதலியவைகளை எல்லாம் இடையே ஏழுவகைகளில் விளக்கிச் செல்லுந் திறம் மிகவும் வியந்து போற்றற்குரியது.

இத்திருமந்திரப்பாடல் ஒரு ஏட்டுச் சுவடி யில் இருந்து எடுத்து எழுதப்பெற்றது. தற் போது வெளி வந்திருக்கும் நூல்களில் ஒன்றிலும் இது காணப் பெறவில்லை. அனுபூதிமானொருவர் தொகுத்துள்ள ஒரு திரட்டு திருமந்திரப்பாக்கள் அடங்கியதாக உள்ளது. டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்தில் அச்சுவடி உள்ளது. அதைப் பார்த்த போது இப்பாவும் கிடைத்தது. இதற்கு அந்தப் பெரியாரே குறிப் பும் எழுதியுள்ளார். அது மிகவும் சிறந்ததாக இருத்தலால் இங்கு வெளியிட நேர்ந்தது. இதனைப் போன்று சிறந்த கருத்துக் கருவூலங்கள் திருமந்திரத்தில் நிறைய விருக்கின்றன. ஆர்வ முள்ளோர் அப்புதை பொருள்களை அகழ்ந் தெடுத்துப் பயன்படுத்தி இன்புறுவார்களாக:

வாழ்க உலகெலாம்

—o—

சித்தாந்த வித்தகர் தனிச்சிறப்புக்கள்

கொ.நீ. சிங்காரவேலு, எம்.ஏ.

மெய்ஞ்ஞானம் என்பது எல்லாருக்கும் எளிதில் கைவரும் கலை அன்று. வெளிப் பொருள்களை ஆய்வது விஞ்ஞானம், மனத்தை ஆய்வது மனோதத்துவம்; அதுவும் விஞ்ஞானத் தின் பாற்படும். இவற்றிற்கெல்லாம் அடிப் படையை ஆய்வது மெய்ஞ்ஞானம். அது விஞ்ஞானங்களின் விஞ்ஞானம் என்று ஒரு மேல் நாட்டு ஆசிரியர் கூறியுள்ளார் ''நான் யார், என் உள்ளம் யார், ஞானங்கள் யார், என்னை யார் அறிவார்'' என்ற திருவாசகவரி தத்துவத்தின் நோக்கம் யாதுஎன்பதை ஓரளவு காட்டுகிறது.

சைவசித்தாந்தத்தைப் புரிந்துகொள்வதில் ஒரு சங்கடம், நமது மூல நூல்களெல்லாம் செய்யுள் வடிவில் அமைந்திருப்பது. வசன நடையில் சித்தாந்தத்தை விளக்கும் பழமை யான நூல் சிவஞான மாபாடியம் ஒன்றே— அதுவும்மிக உயர்ந்த நடையில் அமைந்துள்ளது. ஆகையால் சைவசித்தாந்தத்தைக் கசடறக் கற்றவர் மிகச் சிலரே. அவர்களில் மிகச் சிறந்த வர்களில் நமது செட்டியாரும் ஒருவர்.

திரு. செட்டியார் அவர்களுக்குப் பல தனிச் சிறப்புக்கள் உள. அவர் தாமே கற்று, சிந்தித்து தெளிவு பெற்றுள்ளார். சித்தாந் தத்தைத் தெளிவாக அறிந்து கொள்வதற்குக் கேட்டலைக் காட்டிலும்சிந்தித்தல் மிக அவசியம். முயற்சி திருவினை ஆக்கும் என்பதற்கேற்ப அவர் தாமே முயன்று கற்று யாரையும் குருவாக வரிக்கா விடினும் பலரிடம் சித்தாந்தக் கருத்துக்களை அளவளாவி சிந்தித்துத் தெளி வடைந்தவர்.

கிரேக்க நாட்டில் சோக்ரதரின் சீடர் பிளேடோ. அவரின் சீடர் அரிஸ்டோடில், ஆனால் அவர்கள் ஒருவர் கருத்துக்களையே மற்றவர்கள் பின்பற்றவில்லை. கருத்துக்களில் மாறுபாடும் முரண்பாடும் வளர்ச்சியும் பார்க் கலாம், இந்த நிலை நம் நாட்டிலும் ஓரளவு உண்டு. அத்வைத வேதாந்த ஆசாரியர்கள் வேதாந்தத்தைப்பல்வேறுவகையில் திருத்தியும் மாற்றியும் அமைத்துள்ளார்கள். சித்தாந்த சந்தான குரவர்கள் நால்வர். அவர்களில் மறைஞான சம்பந்தர் நூல் இயற்றவில்லை. மற்றைய மூவராகிய மெய்கண்டார், அருள் நந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவம் ஆகியோர் நூல்கள் இயற்றியுள்ளனர். ஒருவர் சொன்ன கருத்தையே மற்றவர் சொல்லவில்லை. ஒருவரை ஒருவர் விளக்கியும், விரித்தும், தொகுத்தும், சிற்சில இடங்களில் ஒருவர் சொல்லவிட்டதை மற்றவர் சொல்லியும் இவ்வாறு சிந்தாந்தத்தை வளர்த்தனர். இப் பதினன்கு சாத்திரங்களையும் சேர்த்துப் படித் தால் தான் சித்தாந்தத்தின் முழுமை புலப் படும். சிற்சில இடங்களில் முரண்பாடுகள் இருப்பது போல் தோன்றும். சிவஞானமுனிவர் இவற்றையெல்லாம் உட்கொண்டு தம் பாடி யத்தில் சைவசித்தாந்தத்தைத் தன்நிறைவு உடையதாகவும், முரணுதல் இல்லாததாகவும், சித்தாந்தக் கொள்கைகள் இவை தாம், இவையல்ல என்று வரையறுத்தும் முடிவு செய்துள்ளார். சிற்சில இடங்களில் அவர் மூல நூல்களுக்கு ஓரளவு வலிந்தும் நலிந்தும் பொருள் கொண்டிருக்கலாம். காரணம், சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கு முரணுதலாகத் தோன்றும் பாடங்களை ஒழுங்குபடுத்துவது அவர் நோக்கம்.

நமது இரத்தினம் செட்டியார் சிவஞான பாடியத்தை எழுத்தெண்ணிப் படித்துள்ளார். சைவசித்தாந்தக் கொள்கைகளில் உண்டாகும் சிக்கல்களைத் தீர்ப்பது தான் அவர் தொழில். அவர் அப்படித் தீர்ப்பதற்குத் துணை புரியும் நூல் சிவஞான மாபாடியம். நல்வினை தீவினை யின் பயன்களாகிய இன்ப, துன்ப, மயக்கம், மூலமலம், முத்தியில் ஆணவம், சீவன் முக்தர் களும்பிராரப்தகன்மமும்இவைபோன்றசித்தாந் தச்சிக்கல்களுக்கு, காரண காரியக்கட்டுக் கோப்

புடன் கட்டுரைகள் எழுதி முடிவு கண்டுள்ளார். இவை சித்தாந்த உலகில் ஒரு சலசலப்பை உண்டாக்கி சித்தாந்த வல்லுனர்களைச் சிந்திக்க வைத்தன.

இவற்றில் ஒன்றை மட்டும் விளக்க விரும்புகிறேன்.

உண்மை விளக்கத்தில் பின்வரும் செய்யுள் சித்தாந்திகளுக்கு மயக்கம் தரும் செய்யுள்:—

முத்திதனில் மூன்று
　　முதலும் மொழியக் கேள்
சுத்தஅனு போகத்தைத்
　　துய்த்தல்அணு - மெத்தவே
இன்பம் கொடுத்தல்இறை
　　இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள்அப் பா.

ஆணவம் நித்தியப் பொருள் என்கிறுயே. முத்தியில் ஆணவத்தைக் காட்டு என்பது கேள்வி. முத்தியில் ஆணவம் அழிந்து விடும் என்றுல் நித்தியம் என்ற நியதி கெட்டுவிடும். முத்தியில் ஆணவம் முத்தான்மாக்களை விட்டாலும் பெத்தான்மாக்களிடம் இருக்கத் தானே செய்கிறது, ஆகையால் அது நித்தியம் என்றுல், அது வியாபகப் பொருள் என்ற நியதிக்கு முரணுகின்றது. முத்தியில் ஆணவம் இருந்தாலும் அது தன் அறியாமையைச் செய்யும் குணத்தை இழக்கிறது என்பர் சிலர். அப்படியானுல் குணம் அழிந்தால் குணியும் அழியும். இரண்டும் பிரிக்க முடியாதவை என்ற நியதிக்கு அது முரண்படுகிறது. நமது செட்டியார் சொல்வதாவது:— முத்தியில் ஆணவம் தன் முழு வலியோடும் தான் இருக்கின்றது; ஆனுல் திருவருளின் சக்தியில் அது அடங்கிவிடுகிறது; ஆகையால் ஆணவம் உயிரைப் பாதிக்க முடிவதில்லை, சூரிய வெளியில் விளக்கின் ஒளி அடங்கி விடுவது போல என்கிருர். இதுதான் பொருத்தமான விளக்கம். இதுவன்று முக்கியம்.

இப்பாடலில் ''இத்தைவிளைவித்தல் மலம்'' என்கிருரே அது தான் புதிராக உள்ளது. உயிர் சிவானுபவத்தில் திளைப்பதற்கு ஆணவ மலம் எப்படித் துணைபுரிகிறது என்பது கேள்வி. இதற்கு நமது செட்டியார் வியப்பைத் தரும் வகையில் விளக்கம் தருகிருர். அது பின்வரு மாறு:— சைவசித்தாந்தத்தின்படி உயிர் முத்திக்காலத்தில் சிவானந்தத்தைத் துய்த் தலுக்கு மட்டும் தான் உரியது. சிவனைப் போல பஞ்சக் கிருத்தியங்களும் செய்தலுக்கு உரியது இல்லை. ஏன்? பஞ்சக் கிருத்தியங்களை முத்தான்மா செய்யப் புகுந்தால் அது உலகமுகப்பட்டு உயிரிலக்கணத்தின் படி ஆணவமலத்திஞல் பாதிக்கப்படும். ஆகையால் ஒரு வகையில் ஆணவமலம் காரணமாகவே உயிர் முத்தி நிலையில் சிவானந்தத்தை இடைவிடாது துய்த்துக் கொண்டிருக்கிறது என்று சொல்ல லாம். எனவே 'இத்தை விளைவித்தல் மலம்' என்பதற்கு மேற்கூறிய ஒன்றே பொருத்தமான விளக்கமாகத் தோன்றுகிறது. (இதன் விரிவை திரு. செட்டியார் அவர்கள் நூல்களில் காணவும்) இது போன்ற விளக்கங்கள் மணி விழாக் காணும் செட்டியார் சைவசித்தாந்தத் திற்குச் செய்த தனித் தொண்டு என்று கூறலாம்.

திரு. செட்டியார் அவர்கள் சொற்பொழிவு களில் சில தனிச் சிறப்புக்கள் உள. அவர் சொற்பொழிவுகள் தர்க்க முறையில் காரண காரியத் தொடர்போடு அறிவுக்குப் பொருத்த மாக இருக்கும். நமக்குத் தோன்றும் ஐயப் பாடுகளை அவரே சொல்லி அவற்றிற்குச் சமாதானம் கூறுவார். சாத்திரம் மக்களின் அறிவைத் தூண்டித் தெளியவைப்பதே ஒழிய உணர்ச்சியைத் தூண்டுவதன்று. ஆகையால் திரு. செட்டியார் பேச்சு அறிவுக்கு விருந்தாக இருக்குமே ஒழிய உணர்ச்சியைத் தூண்டுவதாக இருக்காது. அவர் பேச்சில் சாத்திரப் பாடல் களோ, திருமுறைப் பாடல்களோ அதிகம் இடம்பெரு. அவற்றின் கருத்துக்களை அவர் வசன நடையில் எடுத்துரைப்பார். ஆகையால் அவர் பேச்சு எளிதில் புரியக் கூடியதாக அமைந்துள்ளது.

மேலும் அவர் மரபு வழியில் பன்முறை கேட்டு அலுத்துப் போன உதாரணங்களையே கூறமாட்டார். பெரும்பாலும் உண்மை நிகழ்ச்சுகளையும் தாமே கண்டதும் கேட்டதும் ஆகிய வற்றையேஎடுத்துக் காட்டுகளாகச் சொல்வார். இதனுல்அவர் பேச்சு உயிர்த்துடிப்புள்ளதாகவும் கவர்ச்சியாகவும் இருக்கிறது.மேலும் ஆங்காங்கு நகைச்சுவை தாமே அமையும்.

மேலும் பேசுவோருக்கும் கேட்போருக்கும் உற்றஇடைவெளியைப்பெரிதுபடுத்திக்கொள்ள மாட்டார். பெரிதுபடுத்திக் கொண்டால் தொடர்பு அற்றுவிடும், கேட்போர்களில் ஒருவராகவே பேச்சாளர் தம்மை ஒற்றுமைப் படுத்திக் கொள்வதுதான் கேட்போரின் அன்பைப் பெறுவதற்கு வழி.

தனிப்பட்ட முறையில் இவருடன் பழகுவதில் ஒரு தனி இன்பம் உண்டு. இவர் எளிமையாக ஒளிவு மறைவு இன்றி, உள்ளங்கலந்து பேசுவார். ''செம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.'' அடிப்படைக் காரணம் ஒத்த அன்பு. சிலர் மேடையில் தான் சித்தாந்தம் பேசுவர். தனிப்பட்ட முறையில் அதைப் பற்றிப் பேசத் தயங்குவர். சித்தாந்தம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்' என்பது அவர்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் உள்ள எண்ணம் போலும். ஆனுல் நமது செட்டியார் இராப்பகல் என்று பாராமல் சலிப்புத் தட்டாமல் சிந்தாந்தம் பற்றியே பேசுவார். சில நாட்களில் இரவு 12 அல்லது 1 மணிவரையில் பேசிக் கேட்பதில் நான் தோற்றுப்போய் பேச்சை முடித்துக் கொள்வோம்.

தனிப்பட்ட முறையில் இவரிடம் நாம் சித்தாந்தப் போர் தொடுக்கலாம். அதனுல் நம் அறியாமையையும் வெளிப்படுத்திக் கொள்ளலாம். அதனுல் அவர் நம்மைக் குறைவாக மதிக்க மாட்டார். அவர் கருத்தை நான் வாங்கிப் புது வடிவம் கொடுத்து மெருகேற்றி 'இது தானே உங்கள் கருத்து' என்பேன். அவர் மகிழ்ச்சி பொங்க உரத்த குரலில் குழந்தை போல் சிரித்து என் தொடையில் ஒரு அடி கொடுப்பார். அது அவர் எனக்குக் கொடுக்கும் நற்சான்றிதழ் என்று நினைப்பதுண்டு.

இவர் பல்லாண்டு பல்லாண்டு எல்லா நலங்களையும் பெற்று நல்ல வண்ணம் வாழ்க என்று கூத்தப்பிரான் பொற்கழல்களை வாழ்த்தி வணங்குகிறேன்.

★

வழிபடு வடிவம்

இறைவன் வடிவங்களுள் நமக்கு விருப்பமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதனையே வழிபடுவடிவமாகக் கொள்ள வேண்டும். வழிபடு வடிவமல்லாமல், எல்லா வடிவங்களையும் வணங்கிக் கொண்டு வருவது முருகிய அன்பை விளைவிக்காது. மற்ற வடிவங்களை வணங்கும்போது நம் வழிபடு கடவுளே அவ்வடிவமும் கொண்டிருக்கிருர் என நினைந்து வணங்க வேண்டும். சமய வாழ்வில் முன்னேறுவதற்கு இம்முறை இன்றியமையாதது.

—மணிவிழாச் செல்வர்

இசை பிடிமானம்

டாக்டர் சுப. திண்ணப்பன்
இந்தியப் பகுதி, மலாயாப் பல்கலைக்கழகம்.
கோலாலம்பூர்

நாட்டுக்கோட்டைச் செட்டியார் என்று அழைக்கப்பெறும் நகரத்தார்களின் திருமண வீடுகளில் எழுதப் பெறும் திருமண ஒப்பந்தத்திற்கு இசை பிடிமானம் என்பது பெயர். மணப்பெண்ணின் கழுத்தில் மாப்பிள்ளை தாலி பூட்டிய பின்னர், உடனே மணமகளை உள் வீட்டுக்குள் கூட்டிச் சென்று முன்னிறுத்தி இந்த ஒப்பந்த வாசகம் படிக்கப் பெற்று, கையெழுத்து இடப்பெறும். இந்த ஒப்பந்தம் பொதுவாகப் பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதப் பெறுவது வழக்கம். ஏட்டில் எழுதுவோர் அருகிவிட்ட காரணத்தால் அண்மையில் வெள்ளைத்தாளில் எழுதத் தொடங்கியுள்ளனர். அச்சிட்டும் விற்கின்றனர். இவ்வொப்பந்தம் மணமகனின் தந்தை மணமகளின் தந்தை ஆகிய இருவருக்குமிடையே அமைவதால் இருவரும் கையெழுத்திடுகின்றனர். திருமணத்திற்கு முதல்நாள் மணமகளின் பங்காளி ஒருவரால் இந்த ஒப்பந்தத்தின் ஒரு பிரதியும், மணமகனின் பங்காளி ஒருவரால் மற்றொரு பிரதியுமாக இரண்டு பிரதிகள் எழுதப்பெற்றுத் திருமண நாளன்று மேற்சொல்லப்பட்டவாறு படிக்கப் பெற்றுக் கையெழுத்து இடப்பெறும். மணமக்களின் தந்தையர் கையொப்பம் இடுமுன் இப்பிரதிகளை எழுதியவர்களும் தத்தம் கோயிற் பிரிவுடன் கையொப்பமிடுவர். இந்த இரண்டு பிரதிகளும் மணமகன் வீட்டிலேயே எப்போதும் வைக்கப்பட்டிருக்கும்.

பெயர்

இந்த ஒப்பந்தத்திற்குப் பெயர் இசை பிடிமானம் என்பதாகும். இது திருமணத்திற்கு மணமக்களின் தந்தையர் இசைந்து உடன்பட்டதற்கு ஆதாரமாக—பிடிமானமாக அமைவதால் இசை பிடிமானம் எனப்பட்டது. இசைவுக்குரிய பிடிமானம் ஆதலின் இசைவுப் பிடிமானம் என்பர். ஆனால் இந்த ஒப்பந்தத்தின் இறுதியில்இந்த ஒப்பந்தத்தை எழுதியவர் யார் என்பதைக் குறிக்க வரும் வாக்கியத்தில் ''இந்த இசை குடிமானம் எழுதினேன்...'' என்று வருகிறது. இங்கு இசை குடிமானம் என்ற பெயர் அமைவதைப் பார்க்கிறோம். இங்கு மானம் என்பதை 'பிரமாணம்' என்பதன் திரிபாகக் கருதி இசைந்த குடிக்குரிய பிரமாணம் என்று கருதுவாரும் உளர்.

அமைப்பு முறை

முதலில் திருமணநாள் தமிழ் ஆண்டு முறைப்படி ஆண்டு மாதம், தேதி குறிக்கப் பெற்றிருக்கிறது. பிறகு ஒப்பந்தம் எழுதிக் கொள்ளும் மணமக்களின் தந்தையர் பெயர் கோயிற் பிரிவுடன் எழுதப்பெறும். பிறகு மணமகன் பெயர், மணமகள் பெயர் குறிக்கப் பெற்று இவர்களிருவரும் திருமணம் செய்து கொண்டதற்காக இருவரின் தந்தையரும் கொடுக்கும் நன்கொடைப் பொருட்கள் விவரம் தரப் பெற்றிருக்கும். இறுதியில் இசை பிடிமானம் எழுதியவரின் கோயிற் பிரிவுடன் பெயர் கொடுக்கப் பெறும். பிறகு கையெழுத்து இடப்பெறும். இசைபிடிமான வாசக அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (செட்டிநாடும் தமிழும் பக்கம் 223)

ஸ்ரீ...மீ...உகல்வாச நாட்டில் இளையாற்றக் குடியான குலசேகர புரத்தில் ஒக்கூருடையான் அருணசலஞ் செட்டி ராமநாதரோ, கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் அரும்பாக் கூருடையான் கண்ணப்பசெட்டி நாராயணரோ இவர் மகன் சுப்பிரமணியனுக்கு இவர் மகள் வள்ளியம்மையை பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டமைக்கு இவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது ஆறுகல்லெடை; பொன் பதிமுக்கழஞ்சு

இவர் சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு, இவ்வெடை பொன் ஆறுகழஞ்சு, வெள்ளி ஆறு கழஞ்சு, வெண்கலந்தராப்பலம் ஆறுபத் தொன்று, வெள்ளாட்டிக்கிப் பணம் முப்பது, சீராட்டுச் சக்கரம் ஆறுபத்தொன்று இவ்வகைப் படி செய்வோம். இவர் நன்கொடை கொடுக் கும் பொன் ஐம்பது, மோதிரம் விராகனெடை மூன்று, இவர் உகந்துடைமையாய்க் கொடுக் கும் பொன் வளையி ஏழு கழஞ்சு, இவ்வகைப் படி செய்வோம். இந்த நாள் இவரிடும் பொன் இவர் சொற்படி தெரிசனை பதிமுக் கழஞ்சு இவ் வகைப்படி செய்வோம். இந்த இசைபிடி மானம் எழுதினேன் கல்வாசனுட்டில் இளை யாற்றக் குடியான

குலசேகர புரத்தில் ஒக்கூருடையான்...

கையெழுத்து......

மாப்பிள்ளை வீட்டுக்காரர் கையெழுத்து...

பெண் வீட்டுக்காரர் கையெழுத்து

கோயிற் பிரிவு

நகரத்தார்களை ஏனைய செட்டியார்களில் இருந்து இனம் பிரித்துக் காட்டுவது அவர்கள் சார்ந்துள்ள கோயிற் பிரிவுகளேயாகும். (பின் இணைப்புக் காண்க). இளையாற்றக்குடி, மாற்றூர், ஏழகப் பெருந்திரு என்ற வயிரவன் கோயில், இரணியூர், பிள்ளையார்பட்டி, நேமம், இலுப்பக்குடி, சூரைக்குடி, வேலங்குடி என்ற ஒன்பது கோயில் பிரிவுகள் உண்டு. இளையாற்றக் குடிக்கோயிலில் ஏழு உட்பிரிவுகளும் மாற் றூர்க் கோயிலில் ஏழு உட்பிரிவுகளும், வயிரவன் கோயிலில் மூன்று உட்பிரிவுகளும் உள்ளன. இவையனைத்தும் ஏனைய இனத்தி னரின் கோத்திரங்களைப் போன்றவையாகும். ஒரு பிரிவைச் சார்ந்தவரிடையே திருமணம் நடைபெறுவதில்லை. நகரத்தார்களின் சாதி முறை நியாயப்படி இரணியூர்க் கோயிலாரும், பிள்ளையார்பட்டிக் கோவிலாரும் சகோதர வமிசத்தாராதலால் தம்முள் கலியாணஞ் செய்து கொள்ளக் கூடாது. மற்றைக் கோவில் களில் செய்து கொள்ளலாம். இளையாற்றக் குடிக் கோயில் உட்பிரிவுகட்கிடையேயும் மாற் றூர்க் கோயில் உட்பிரிவுகட்கிடையேயும் திருமணம் செய்து கொள்கின்ற வழக்கம், புள்ளிகள் பெருகிவிட்ட பிற்காலத்தில் தொடங்கியதாகக் கருதலாம். எப்பொழுது தொடங்கியது என்பதை அறுதியிட்டுச்சொல்ல இயலவில்லை. வயிரவன் கோவில் உட்பிரிவு கட்கிடையே திருமணம் செய்து கொள்கின்ற வழக்கம் கிடையாது. இத்துடன் இரணிக் கோயில், பிள்ளையார்பட்டி கோயிலார் சேர்ந்து இருவருக்குமிடையே விலக்கப்பட்ட திருமணத் தொடர்பையும் நீக்கினுல் 249 இணைகள் தான் வரமுடியும்.

கோயிற் பிரிவுகளைக் குறிப்பிடும் போது வளநாடு, நாடு ஊர், புரம், உடையார் என்ற பகுப்பு முறை வரிசையைக் காண்கிறோம்.

வளநாடு

வளநாடு என்னும் பிரிவில் கேரள சிங்க வளநாடு என்ற ஒன்றை மட்டுமே காண்கிறோம். இளையாற்றக்குடி, இரணியூர், பிள்ளையார் பட்டி என்ற மூன்று கோயிற்கும் வளநாடு குறிக்கப் பெறவில்லை. கேரள சிங்கன் என்ற பெயர் முதலாம் இராசராசனுடைய விருதுப் பெயர்களுள் ஒன்ருக அமைந்துள்ளது. மேலும் வளநாடு, நாடு, ஊர் என்ற பாகுபாடும் முதலாம் இராசராசன் காலத்திலேயே தோன் றியதாகவும் வரலாற்று அறிஞர்கள் கூறுவர். வளநாடு, நாடு என்ற இப்பெயர்கள் செட்டி நாடு சுங்கமில்லாச் சோழநாட்டின் ஒரு பகுதி யாக இருந்தபோது சோழ அரசர்களால் வழங் கப் பெற்றவை. சோழ மன்னர்கள் ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடுகளாகப் பிரித் திருந்ததாகவும் ஒவ்வொரு வளநாடும் இரண் டிரண்டு பேராறுகளுக்கு இடையில் அமைந் திருந்த நிலப்பரப்பாகும் என்றும் டி.வி. சதா சிவப் பண்டாரத்தார் 'முதற்குலோத்துங்கன்' என்னும் நூலில் கூறுவர். இதை நோக்க சிங்கவளநாடு என்பது வெள்ளாற்றுக்கும் வைகையாற்றுக்கும் இடையில் உள்ள நிலப் பரப்பைக்குறித்திருக்கக்கூடும்என்பதுசோம.லெ கருத்து (செட்டிநாடும் தமிழும் ப. 57)

நாடு

நாடு என்ற பாகுபாட்டில் கல்வாசனுடு, பிரம்பூர்நாடு, பாலையூர்நாடு என்ற பெயர்களைக் காண்கிறோம். வயிரவன் கோயில், நேமம், சூரைக்குடி என்ற மூன்று கோயில்கட்கும் நாடு என்ற பாகுபாடு குறிக்கப் பெறவில்லை. கல்வாசனுடு என்ற பிரிவின் கீழ் இளையாற்றக் குடி, இரணிக்கோயில், பிள்ளையார்பட்டி என்ற மூன்றும் வருகின்றன. இப்போதுள்ள பிள்ளையார்பட்டியும், இரணிக்கோயிலும் கல் வாசனுட்டில் கீழ் வாரா என்பது சா. கணேசன் கருத்து. (பிள்ளையார் பட்டித்தல வரலாறு) இசை பிடிமானத் தொடரில் இவ்விரண்டு கோயில்களையும் குறிக்க முறையே வருந் தொடர்களான, ''கல்வாசனுட்டில் இளையாற் றக் குடியான இரணியூர் மருதங் குடியான நாராயணபுரத்தில் இரணியூர்த் திருவேட் பூருடையார்,' ''கல்வாசனுட்டில் இளையாற்றக் குடியான இரணியூர் மருதங்குடியான நாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திரு வேட்பூருடையார்'' என்பதில் வரும் கல் வாசனுடு என்பதை இளையாற்றக்குடிக்கு அடைமொழியாகக் கொண்டு, ஏனைய இரண்டு கோயில்களும் இளையாற்றக்குடியிலிருந்து பிரிந் தவை என்பதைக் குலசேகரபுரத்தில் என்ற சொல்வரையும் அமையும் பொதுத் தொட ராலும், இக்கோயில் பிரிவினர் இருவரும் உடன் பிறப்பினர் என்பதைத் திருவேட்பூ ருடையார் என்ற பொதுத் தொடராலும் அறியலாம்.

பிரம்பூர் என்ற நாட்டின் கீழ் மாற்றூர், இலுப்பைக்குடி என்ற இரண்டு கோயில்களும் வருகின்றன. இங்கு பிரம்பூர் என்பது வள்ளல் பாரியின் பறம்பு என்பதன் திரிபு என்று சிலர் கருதுகின்றுர்கள். (செட்டி நாடும் தமிழும். ப.23.) இப்போதுள்ள பிரான்மலைப் பகுதியைப் பறம்பு மலைப் பகுதியாகக் கொண்டால் அதற்கு அண்மையில் இருக்கும் இளையாற்றக்குடியும் பிரம்பூர் நாட்டின் கீழ்தான் வரவேண்டும். அதை விடுத்து மாற்றூர், இலுப்பைக்குடி மட்டும் பிரம்பூர் நாட்டின் கீழ் வருவானேன்? பாலையூர் நாட்டின் கீழ் வேலங்குடி என்ற பகுதி வருகிறது. பாலையூர் என்பது கண்ட னூரை யொட்டியிருந்ததாகப் பழைய ஊழியன் 'குமரன்' வாயிலாகஅறிய முடிகிறது. நாட்டுப் பகுதியையடுத்து, 9 கோயிற் பிரிவு களின் பெயர்கள் வந்து ஆன என்ற சொல் வருகிறது. இந்த ஒன்பது கோயிற் பிரிவுகளில் வயிரவன் கோயிற் பெயரில் மட்டும் வயிரவன் கோயில் என்ற பெயர் குறிக்கப்படாமல் ஏழகப் பெருந்திரு என்ற பெயரே இசைபிடிமானத்தில் குறிக்கப்படுகிறது. ஏழகப் பெருந்திரு என்பது வயிரவன் பட்டியின் பழைய பெயராக இருந் திருக்க வேண்டும். இத்தொடர் ஒருபடையைக் குறிக்கும். இது கல்வெட்டுக்களில் குறிக்கப் படுகிறது. (முதலாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி 'மட்டியூரிலிருந்து வந்த ஏழகப் படையைத் தோற்கடித்து...)

புரம்

அடுத்து புரத்தில் என்ற பெயர் குறிக்கப் படுகிறது. குலசேகரபுரம், வீரபாண்டியபுரம், தேசிக நாராயணபுரம், ராஜநாராயணபுரம் என்ற நான்கு புரங்கள் வருகின்றன. இலுப் பைக்குடிக்கு மட்டும் புகழிடங் கொடுத்த பட்டணம் என்ற தொடர் வருகிறது. புகழுக்கு இடங்கொடுத்த பட்டணம் என்பது இதன் பொருளாகும். சிலர் புகலிடம் கொடுத்த பட்டணம் என்ற சொற்றொடர்தான் புகழிடங் கொடுத்த பட்டணம் என்று தவருக எழுதப் பட்டதாகக் கருதுகிறுர்கள். இலுப்பைக்குடி யில் அரசர் இருவர்க்கு அடைக்கலம் கொடுத்த கதையும், அவன் அக்கோயிலுக்குக் கொடுத்த மானியமும் இதற்குச் சான்ருகும். குலசேகர புரம் என்பது இளையாற்றக் குடிக்கும் நேமத் திற்கும் வருகின்றது. வீரபாண்டியபுரம் என்பது மாற்றூர்க்கும் ஏழகப் பெருந்திருவான வயிரவன் கோயிலுக்கும் வருகின்றது. தேசிக நாராயணபுரம் என்பது சூரைக்குடி, வேலங் குடி ஆகிய இரண்டிற்கும் வருகின்றது. ராஜ நாராயணபுரம் என்பது இரணியூர், பிள்ளையார் பட்டி ஆகியவற்றைக் குறிக்கும் மருதங்குடி யைக் குறிப்பிட வருகிறது. இவற்றுள் குல

சேகரன், வீரபாண்டியன் என்பன பிற்காலப் பாண்டியர்களின் பெயர்களாக இருக்கின்றன.

உடையார்

அடுத்து உடையார் என்ற சொல்லுடன் பல ஊர்ப்பெயர்கள் சேர்ந்து வருகின்றன. ஒக்கூர், பெருமருதூர், கிங்கிணிக்கூர், பேர செந்தூர், சிறுசேத்தூர், உறையூர், அரும் பாக்கூர், மணலூர், மண்ணூர், கண்ணூர், கருப்பூர், குளத்தூர், சிறுகுளத்தூர், இரணியூர், திருவேட்பூர், கழனி நல்லூர் என்பன ஊர் என்ற சொல்லில் முடிகின்றன. இரணியூர், பிள்ளையார்பட்டி இரண்டிற்கும் பொதுவாகத் திருவேட்பூர் என்று வருகின்றது. கழனிவாசல், மருதேந்திரபுரம், இளநலம், சூடாமணிபுரம், புகழ்வேண்டிய பாக்கம், கழனி வாசக்குடி என்பன ஏனையபெயர்கள். இளையாற்றக் குடியில் அரும்பாற் கிளையாரான பட்டணசாமி பிரிவுக்கு மட்டும் உடையார் என்று சேர்க்கப்படவில்லை. மேலும் இந்த ஒரு தொடரைத் தவிர ஏனைய தொடர்களனைத்தும் ஊர்ப்பெயர்களாக வந்துள்ளன. எனவே அரும்பாற் கிளையாரான பட்டணசாமி என்ற பிரிவிற்கும் ஊர்ப்பெயர் தான் இருந்திருக்க வேண்டும் பட்டணசாமிக் கும், பட்டினத்தார்க்கும் தொடர்பு காட்டி, பட்டினத்தார் பெயருக்கு ஏற்பப் பின்னளில் வந்ததாகவும் இருக்கலாம். இப்பொழுது இந்த ஊர்கள் எப்பகுதியில் உள்ளன என்பது ஆய்விற் குரிய ஒன்றாகும் ஒன்பது நகரக் கோயில்களைச் சுற்றி இந்த ஊர் இருப்பதாகத் தெரியவில்லை. உடையார் என்பது ஜமீந்தார் என்பது போல அந்த ஊரை உடைமையாகப் பெற்றவர்கள் என்பதைக் குறிக்கும். இவ்வூர்கள் பூம்புகார் நகரத்தையொட்டி நகரத்தார்கள் உடைமை யாகப்பெற்றுக் குடியிருந்த ஊர்களாகும். ஓர் ஊரினர் வேற்றூரில் உள்ளவர்களைத் திருமணம் செய்து கொள்வதென்ற நிலையில் அப்போது இருந்திருக்கலாம்.

ஒப்பந்தத்திற்கு உரியோர்

மணமகன், மணமகள் தந்தையர் பெயர்கள் வருகின்றன. அருணசலஞ் செட்டி ராமநாதர் என்பது, அருணசலம் செட்டியார் மகன் ராமநாதன் என்பதைக் குறிக்கும். இது தற் காலத்தில் 'Expanded Initial' உடன் பெயர் எழுதுவது போன்றதாகும்.

பாணிக்கிரகணம்

இவர் மகன் சுப்பிரமணியனுக்கு, இவர் மகள் வள்ளியம்மையைப் பாணிக் கிரகணம் பண்ணிக் கொண்டமைக்கு'' என்று வருகிறது. இங்கு பாணிக்கிரகணம் என்பது கைதொட்டுக் கொடுக்கும் திருமணத்தைக் குறிக்கும். நகரத் தார் திருமணங்களில் மணவறைமுடிவில் மண மக்களின் உள்ளங்கைகளை ஒன்றுகச் சேர்த்து மங்கலப் பொருட்களை வைத்துப் பட்டுத்துணி யால் கட்டித் தீவலம் வரச் செய்வதைப் பார்க் கிறோம். கோவலன் கண்ணகி திருமணத்திலும் இவ்வாறு 'தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை? (சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடல் வரி 53) என்று குறிப்பிடப் படுகின்றது. நகரத்தார் திருமணச் சடங்குகளில் கைபிடி சோறு என்பதும் ஒன்று.

மணமக்கட்கு நன்கொடை

அடுத்து இத்திருமணத்திற்கு மணமக்களின் தந்தையர் கொடுக்கும் பட்டியல் வருகின்றது. இவர் என்ற சொல் இந்த ஒப்பந்தம் முழுவதும் கையாளப் பெறுவதால் மணமகனின் தந்தை யார்? மணமகளின் தந்தை யார்? என்று அறிவது சிரமமாயிருக்கும். இருந்தாலும் ஓரளவு இக்கால வழக்குகளின் அடிப்படையில் ஊகிக்க வழியுண்டு. இவ்வகைப்படி செய்வோம் என்ற தொடர் மூன்று முறை வருகிறது. முதலிரண்டு முறைகளிலும் இரு வீட்டாரும் கொடுக்கும் முறைகள் வருகின்றன.

மாப்பிள்ளையின் தகப்பனர் கொடுப்பவை

1. பூவுணம் பூட்டும் பொன் ஒன்பது மாற்றுக் கல்லெடை பொன் 13 கழஞ்சு
2. நன்கொடை (கொடுக்கும்) பொன் 50
3. மோதிரம் விராகன் எடை 3

பெண்ணின் தகப்பனர் கொடுப்பவை

1. (அ) சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு இவ்வெடை பொன் 6 கழஞ்சு.
   (ஆ) வெள்ளி 6 கழஞ்சு
   (இ) வெண்கலம் தராப்பலம் 61
   (2) வெள்ளாட்டிக்குப் பணம் 30
   (3) சீராட்டுச் சக்கரம் 61
   (4) உகந்துடைமை பொன் வளையி கழஞ்சு7 தெரிசனை பொனகழஞ்சு 13

பூவுணம்:

மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்குப் பூவுண (நகை)த்துக்காகவும் நன்கொடையாக வும் மோதிரத்துக்காகவும் பொன் கொடுத் துள்ளார்கள். பூவுணம் என்பது இங்கு நகரத் தாரிடையே இன்றும் விளங்கும் திருமாங்கல்ய மாகிய கழுத்தூரு என்ற மங்கல அணி கலனையே குறிக்கும். இன்றும் திருமணத்திற்கு முன் மாப்பிள்ளை வீட்டார் கழுத்தூருக்கும் பொன் கொடுக்கும் சிறப்புச் சடங்கு நிகழ்ச்சி நகரத்தாரிடையேநடைபெறுவதைக்காணலாம்.

நன்கொடை:

நன்கொடை கொடுக்கும் பொன் என்பது மாப்பிள்ளை வீட்டார் மணமக்களுக்குக் கொடுக் கும் பொன்னுகும். இது இன்றும் 'ஈடுபொன்' என்று வழங்கப்படுகிறது. இன்று திருமண நிகழ்ச்சி முடிவில் மணமகன், மணமகள் வீட்டார் இருவரும் கணக்குப் பார்த்துக் கொள்ளும் போது மாப்பிள்ளை வீட்டார் எவ் வளவு ஈடு பொன்னுக்குத் தருகிறுர்கள் என்று கேட்டு மணமக்கள் பணத்தில் சேர்ப்பது வழக்க மாக உள்ளது.

மோதிரம:

மோதிரம்: மாப்பிள்ளை வீட்டார் பெண் ணுக்குக் கொடுத்ததாக இசைபிடிமானம் கூறு கிறது. ஆனல் இன்று பெண் வீட்டார்தான் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மோதிரம் போடுகின்றனர். பழங்காலத்தில் பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் மோதிரம் போடும் பழக்கம் இருந்திருக்கலாம். அல்லது பெண்ணுக் குக் கொடுக்கும் வெள்ளிக்கால் மோதிரத்தை இது குறிக்க இடமுண்டு. வெள்ளி விராகன் எடையில் நிறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

சீதனம்:

ஸ்ரீதனம் என்பது சீதனமாகிறது. பெண் ணுக்குரிய தனமாகும். பெண்ணின் தகப்பனர் பெண்ணுக்குச் சீதனமாகப் பொன்னும் வெள்ளியும் வெண்கலம் தராவும் கொடுத் துள்ளனர். பொன், வெள்ளி, வெண்கலம், தரா என்ற நான்கும் உலோகப் பொருள்களாகும். வெண்கலம், தரா என்ற இரண்டும் கலப்பு உலோகங்களாகும். வெண்கலம் என்பது செம்பும் வெள்ளீயமும் கலந்து உருக்கி உண் டாக்கப்படும் கலப்பு உலோகம். தரா என்பது எட்டுப் பாகம் செம்பும் ஐந்து பாகம் காரீயமும் கலந்த ஒரு கலப்பு உலோகம். இவற்றுல் செய்யப்பட்ட பொருள்களைப் பெண்ணுக்குப் பெண் வீட்டார் வழங்கியுள்ளனர்.

வெள்ளாட்டி:

வெள்ளாட்டிக்குப் பணம் முப்பது பெண் வீட்டார் கொடுத்துள்ளதாகக் குறிப்புள்ளது. இங்கு வெள்ளாட்டி என்ற சொல் பணிப் பெண்ணைக் குறிக்கும். வைணவ உரை நூலாகிய ஈடு என்னும் நூலிலும் இப்பொருளில் வருவ தாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. பேச்சு வழக்கில் வெள்ளாட்டி என்பது வைப்பாட்டியைக் குறிக்கும் என்றும் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகின்றது. டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர் கள் வெள்ளாட்டி என்பது நகரத்தார்கள் மணந்துகொண்ட வேளாளர் மரபுப் பெண்டிரை உணர்த்தும் ஒரு சொல்லாக (வெள்ளாளன்- வெள்ளாட்டி) ஆச்சி என்பதற்கு ஈடாக வெள்ளாட்டி என்று வழங்கியதாகக் கருதுகிறுர் கள். நகரத்தார் அறப்பட்டயங்கள் என்று அவர்கள் பதிப்பித்த நூலில் உள்ள பட்டயம் ஒன்றில் இவ்வழக்கு வருகின்றது. அக்காலத்தில் ஆச்சி என்ற சொல் வழக்கிலில்லை. எனவே

வெள்ளாட்டி என்பது இங்கு மணமகனின் தாயாரை உணர்த்தும் ஒரு சொல்லாக அவர்கள் கருதுகிருர்கள்.

சீராட்டு:

சீராட்டு என்பது செல்லம் பாராட்டு கையைக் குறிக்கும். இன்றும் சீர் வைத்தல் ஒரு சடங்காக இருக்கின்றது. சீராட்டுக் கொண்டு போதல் என்ற சடங்கும் உண்டு.

உகந்துடைமை:

உகந்துடைமையாய் விரும்பிக் கொடுக்கும் பொருளாகப் பொன் வளையல் குறிக்கப் பெறு கின்றது.

தெரிசனை:

'இந்த நாள் இவரிடும் பொன் இவர் சொற் படி தெரிசனை பதிமுக்கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம் என்று வருகிறது. தெரிசனை இடும்-தெரிசனை என்பது புனிதமான காட்சியைக் குறிக்கும். முன் சொன்ன அனைத்தும் பொருள் களாக—சாமான்களாக அமைய மணமகள் வீட்டார் மணமகன் வீட்டார் சொற்படி தங்க மாகவே நேரில் கொணர்ந்து கொடுத்ததாகத் தெரிசனை அமைந்திருக்கலாம்.

அளவுகள்

இசை பிடிமானத்தில் பொன், வெள்ளி இரண்டும் கழஞ்சு என்ற அளவாலும் வெண் கலம், தராஎன்ற இரண்டும் பலம் என்ற அள வாலும் குறிக்கப் பெறுகின்றன. பணம், சக்கரம், வராகன் எடை என்ற அளவுகளும் குறிக்கப் பெறுகின்றன. பொன் நகையைப் பற்றி வருமிடத்தில் மாற்று கல்லெடையுடன் குறிக்கப் பெறுகின்றது. ஆனுல் மோதிரம், விராகன் எடை என்ற அளவுடன் வருகின்றது

கழஞ்சு

இக்காலத்தில் $\frac{1}{6}$ அவுன்ஸ் ட்ராய் மதிப் புள்ள ஒரு எடுத்தல் அளவை என்று தமிழ்ப் பேரகராதி குறிக்கிறது. 'ஒன்றே கால் வீசம் வராகன் எடை' இந்த எடையுள்ள பொற்காசு பல்லவர் காலத்தில் செலாவணியாக இருந்தது என்றும் இராஜ ராஜ சோழன் காலத்தில் வழங்கிய 68 தானியமணி (Grains) மதிப்புள்ள எடை ஒன்றும் எடுத்தலளவையால் மதிப்புப் பெறும், ஒரு வகை நாணயம் என்றும் செட்டி நாடும் தமிழும் (பக் 304) என்ற நூல் வாயி லாக அறிகிறோம்.

மாறுகல்லெடை

ஒன்பது மாற்றுள்ள ஆறு கல்லெடை கொண்ட பொன் நாணயம் என்பது பழக் கத்தில் உள்ள ஒரு ஸ்டாண்டர்டு எடையாக இருக்கலாம். மாற்று - மாறு பொன் வெள் யின் தரத்தை உரைத்துப் பார்த்துணர்வ தாகும். இப்போது ஆசாரிகள் மச்சம் என்று சொல்கிருர்கள்.

பலம்

பலம் என்பதும் ஒரு நிறுத்தலளவை வெண்கலம், தரா என்ற உலோகங்களை நிறுக்க உதவுவது, 8 பலம் ஒரு சேர் என்று நிறுத்த லளவை வாய்பாடு. இதன் இன்றைய சரியான மதிப்பு இன்று தெரியவில்லை.

பணம்

இது ஒரு வகை நாணய அளவு. எட்டுப் பணம் கொண்டது ஒரு ரூபாய் ஆகும். $\frac{1}{8}$ ரூபாய் ஒரு பணம். இவ்வாறு செட்டிநாட்டுப் பேச்சில் வழங்கக் கேட்டிருக்கிறேன். இன்றும் மொய்ப் பணம் எழுதும் போது பணம் எவ்வளவு எழுதுவது என்று கேட்கிருர்கள். ஆயான் வீட்டார், (மாமா) மாமப்பணம் $\frac{1}{8}$ முறையில் கணக்கிடுவதை இன்றும் காணலாம்.

பொன்

பொன் என்பது நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது என்று வருகிறது. பொன் என்பது 10 பணம் என்று செட்டி நாடும் தமிழும் குறிக்கிறது. (பக் 304)

சக்கரம்

சீராட்டு சக்கரம் என்ற அளவால் குறிக்கப் பெறுகிறது. சக்கரம் என்பது தென்னிந்

யாவில் பழங்காலத்தில் வழங்கிய பழைய வெள்ளி நாணயம் என்றும் ⅙ தங்கப் பகோடா மதிப்புடையது என்றும் அரையணு மதிப்புள்ளதாக (3 நயாபைசா) மலையாளத்தில் திருவாங்கூரில் வழங்கிய நாணயம் என்றும் பேரகராதி வாயிலாக அறிகிறோம்.

வராகன் எடை

மோதிரம் வராகன் எடை என்று அளவால் குறிக்கப் பெறுகின்றது. 5/16 ரூபாய் 54 மணி மதிப்புள்ளதென்று நிறுக்கும் நிறை வகை. செட்டி நாட்டு ஆசாரிகள் தங்கத்தை வராகன் எடையில் நிறுத்துச் சொல்வதை இன்றும் காணலாம். 2-3/16 வராகன் எடை என்பது இன்று 8 கிராம் கொண்ட ஒரு பவுன் தங்கம் ஆகும். 3 3-16 வராகன் எடை என்பது 11 கிராம் கொண்ட வெள்ளி வெள்ளியாகும். சோழர் காலத்தில் செட்டியார்கள் சளுக்கிய ஆட்சிக்குட்பட்ட நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்ததன் பயனுக வராகன் என்னும் நாணயம் தமிழ் நாட்டுக்கு வந்தது என்றும் அதன் மதிப்பு ஒரு வராகன் ரூ. 3-50 என்றும் சோமலெ கூறுவர். (செட்டிநாடும் தமிழும் பக் 58.)

கையொப்பம்:

இசைபிடிமானம் எழுதினவர் கோயிற் பிரிவு எழுதிக் கையொப்பமிடவேண்டும். பிறகு மணமகனின் தந்தையாரும் மணமகளின் தந்தையாரும் கையொப்பமிட வேண்டும். தந்தையார் இல்லாவிடில் அடுத்த தந்தை வழி (நெருங்கிய உரிமையாளர்) உறவினர் கையொப்பமிடலாம். கையொப்பமிடுபவர் யாராவினும் மேற்கண்ட இசைபிடிமான வாசகம் மாற்றப் பெறுது. மணமகள் வீட்டில்தான் இரண்டு பிரதிகளும் வைக்கப்பெறும். மறுமணம் செய்து கொள்ளும் உரிமை ஆணுக்குண்டு. பெண்ணுக்கு இல்லை. திருமணத்தை உறுதி செய்யும் பிடிமானம் பெண்ணுக்குத்தான் இன்றியமையாத தேவை எனக் கருதிப் பெண் வீட்டாரிடம் வைத்தனர் போலும். இசைபிடிமானம் எழுதியவர்க்கு மணமக்கள் வீட்டார் பழம், பெட்டி, சட்டி, பாக்கு அன்பளிப்பாக வழங்குவர்.

பின் இணைப்பு

எண்	வளநாடு	நாடு	ஊர்	புரம்	உடையார்
1.		கல்வாசல்	இளையாற்றக்குடி	குலசேகரபுரம்	ஒக்கூர்
2.		,,	,,	,,	அரும்பாற்கிளையாரான
		,,	,,	,,	பட்டணசாமி
3.		,,	,,	,,	பெருமருதூர்
4.		,,	,,	,,	கழனிவாசக்குடி
5.		,,	,,	,,	கிங்கிணிக்கூர்
6.		,,	,,	,,	பேரசெந்தூர்
7.		,,	,,	,,	சிறுசேத்தூர்
8.	கேரளசிங்க	பிரம்பூர்	மாற்றூர்	வீரபாண்டிய	உறையூர்
9.	,,	,,	,,	,,	அரும்பாக்கூர்
10.	,,	,,	,,	,,	மணலூர்
11.	,,	,,	,,	,,	மண்ணூர்
12.	,,	,,	,,	,,	கண்ணூர்
13.	,,	,,	,,	,,	கருப்பூர்
14.	,,	,,	,,	,,	குளத்தூர்

எண்	வளநாடு	நாடு	ஊர்	புரம்	உடையார்
15.	கேரளசிங்க	—	ஏழசப்பெருந்திரு	வீரபாண்டிய	சிறுகுளத்தூர்
16.	,,		,,	,,	கழனிவாசல்
17.	,,		,,	,,	மருதேந்திரபுரம்
18.	—	கல்வாசல்	இளையாற்றக்குடி இரணியூர்மருதங்குடி	குலசேகர ராஜநாராயண	திருவேட்பூர்
19.		கல்வாச	இளையாற்றக்குடி இரணியூர்மருதங்குடி (பிள்ளையார் பட்டி)	குலசேகர ராஜநாராயண	திருவேட்பூர்
20.	கேரளசிங்க		நேமம்	குலசேகரபுரம்	இளநலம்
21.	கேரளசிங்க	பிரம்பூர்	இலுப்பைக்குடி	புகழிடங்கொடுத்த பட்டணம்	சூடாமணிபுரம்
22.	கேரளசிங்க		சூரைக்குடி	தேசிகநாராயண	புகழ் வேண்டிய பாக்கம்
23.	கேரளசிங்க	பாலையூர்	வேலங்குடி	தேசிகநாராயண	கழனிநல்லூர்

★

சமய ஒழுக்கம்

இந்தியா சமயத்துறையில் உயர்ந்திருப்பதாகக் கூறமுடியாது. சமயம் பற்றி நிறையப் பேசுவதால் இந்நாட்டில் சமய மேம்பாடு காணப்படுகிறது எனச்சிலர் கருதக்கூடும். சமயஒழுக்கம் இல்லாத வெறும் ''வாய்ப்பேச்சு'' மேம்பாட்டிற்கு அடையாளமாகாது.

கருத்தடை தவறு இல்லை

உயிர்களைப் பிறவிக்குக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு இறைவனைச் சார்ந்தது. நம் ஆற்றலுக்கு உட்படாத ஒன்றை நம் தலையில் ஏற்றிக்கொண்டு ஆராயப்புகுவது தவறாகும். நல்ல நோக்குடன் கருத்தடை முறைகளைக் கையாள்வது தீவினையாகாது.

—மணிவிழாச் செல்வர்

சமாசத்தில்
முரு. பழ. இரத்தினம் செட்டியார் தொடர்பு

(தி. கி. நாராயணசாமி)

1959 சூலையில் (சித்தாந்தம் மலர் 32 இதழ் 7ல்) 'வீடு பேற்றில் மலம் உண்டா' என்ற திரு. முரு.பழ. இரத்தினம்செட்டியார் அவர்கள் எழுதிய கட்டுரை வெளி வந்தது. சாத்திரத் துறைவல்ல பலரை அக் கட்டுரை கலக்கியது. இக் கட்டுரையை வெளியிடவே ''சித்தாந்தம்', ஆசிரியர் தயங்கினுர். காரணம் அன்று அதில் கண்ட விளக்கம் வழி வழியாக வந்த விளக்கத்திற்கு மாறுபட்டது என்பது ஆசிரியர் கருத்து. அக் கட்டுரை வந்து நீண்ட காலமாக அச்சுக்கு வராமல் தடைபட்டு நின்றிருந்தது. அடியேன் வற்புறுத்திப் போடச் செய்தேன். அந்நாளில் திரு. செட்டியார் அவர்களை சாத்திரத்தை மரபாகப் படித்தவர்கள் ஏற்கத் தயங்கினுர்கள். அவர்கள் கருத்து வெளி வந்தால் கருத்துப் போராட்டம் நிகழும் என்று எண்ணிஞர்கள். அக்காலம் நாட்டில் சாத்திரம் பழைய உரைகளுடன் சிந்தனையின்றித் தெளிவு படாமல் வழங்கி வந்த காலம் ஆகும். அடுத்து மூன்று ஆண்டுகள் கழித்து (1962 சூலையில்) சித்தாந்தத்தில் ''இத்தை விளைவித்தல் மலம்'' என்ற கட்டுரை சித்தாந்த ஆசிரியரால் எழுதப் பட்டது. இதனை மறுத்து திரு. செட்டியார் அவர்கள் ''முத்திநிலையும் இத்தை விளைவித்தலும்'' என்ற கட்டுரையை 1963 மார்ச்சில் (மலர் .6 இதழ் 3) திறம்பட எழுதினுர்கள். அதன் பின் அவர்கள் பல்வேறுபட்ட வழிகளில் பயின்ற கருத்துக்களை ஒத்திட்டு நுணுகிக் காட்டிய சாத்திரப் பேச்சுகள் பழமையை ஆழ்ந்து சிந்திக்கச் செய்தன. மேலும் குழப்பம் இன்றித் தெளிவாக உணரக் கண் திறந்து வைத்தன. அப்பெருமை திரு. செட்டியார் அவர்களையே சாரும்.

அவர்கள் யாரும் அணுக முடியாத பொருள்களை யெல்லாம் அணுகித் தீர்வு கண்டுள்ளார்கள். அவர்கள் கட்டுரையோ பேச்சோ எல்லாம் அவ்வத்தலைப்பைப் பார்த்தாலே உடனே படிக்கவோ, கேட்கவோ ஆர்வத்தை உண்டு பண்ணுவன வாயிருக்கும், ''மரம் முந்தியா வித்து முந்தியா'' என்ற கட்டுரை சித்தாந்தம் மலர் 32 இதழ் 12இல் வெளி வந்தது, கடவுளால் முடியாத காரியங்கள், என்று ஒரு கட்டுரை எழுதினுர். தலைப்பைப் பார்த்தாலே உலோகாயதர் கட்டுரை போன்றிருக்கும். பின்னர் அதனைச் செப்பனிட்டு நூல் வடிவாகவும் வெளி வரச் செய்ய புள்சைப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தினர் முனைந்தனர். பதியியல்பு, பசு இயல்பு, பாச இயல்பு என்ற உண்மைகளை 'கடவுள்' உண்டா?, 'உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாவா?,' 'உனக்கும் கடவுளுக்கும் என்ன தொடர்பு' முதலிய தலைப்புகளில் கேட்டார்ப் பிணிக்கும் தன்மையவாய்ப் பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் எடுத்துரைக்கும் திறம் செட்டியாரவர்களுக்கு இறைவனுல் அருளப்பட்ட ஒரு தனி ஆற்றல் என்றுதான் கூறவேண்டும்.

இக்காலத்து, சைவ சிததாந்தக் கருத்துக்களை மேற் போக்காக ஒட்டிப் பேசிச் செல்வோர்தான் அதிகம் பேர் உள்ளனர். சித்தாந்த நுட்பங்களில் உள்ள விடயங்களை விளக்கும் ஆற்றல் உள்ளவர் மிகச் சிலரே ஆவர். அந்நிலையில் 'வீடு பேற்றில் மலம் உண்டா?' என்ற தலைப்பில் திருவாளர் செட்டியார அவர்களும் திரு. இராம. சங்குப்பாண்டியன் அவர்களும் தத்தம் தகுதிக் கேற்றவாறு மறுப்புக் கட்டுரைகள் எழுதி வருவது சித்தாந்தம் மூலம் பலருக்கும் தெரிந்திருக்கும். இதனைப் பற்றி இரு வேறுபட்ட கருத்துக்கள் அறிஞரிடை நிலவுகின்றன. ஒருசாரார், ''இதுபோன்ற மண்டையை உடைக்கும் கட்டுரைகளை வெளியிட்டால் பலர் இதனை (சித்தாந்தத்தை) விரும்பிப் படிக்க மாட்டார்கள். ஆணவத்தை நீக்க முனைய வேண்டும் என்று கூறிக்கொண்டே

இன்னும் ஆணவ ஆராய்ச்சியில் ஆணவம் படித்து முனைகின்றீர்களே'' என்று கூறுகின்றனர்.

மற்றொருசாரார் ''இது போன்ற சித்தாந்த நுட்பக் கட்டுரைகளைச் சித்தாந்தத்தில் வெளியிடாமல் வேறு எதில் வெளியிட முடியும்,? சில பக்கங்களாவது ஒதுக்கி இத்தகைய கட்டுரைகளை அவசியம் வெளியிட வேண்டும்'' என்கின்றனர். இது ஒன்றும் புதிய செயலன்று. நம்முன்னோர் இதனைப் போன்று பல மறுப்புக் கட்டுரைகள் எழுதினர். நூல் வடிவில் கூட பல வந்துள்ளன. ஆதலின் இம் மறுப்புக் கட்டுரைகள் வரவேற்கத் தக்கனவே என்பது என் கருத்து. சிறிதாவது இடம் ஒதுக்கி வெளியிட வேண்டும். பின் ஒரு காலத்து இக் கட்டுரைகளைப் படிக்க நேர்ந்தவர்கள் அவசியம் இதனைப் போன்ற கட்டுரைகளைப் பார்த்துத் தான் நம்மைப் போற்றுவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை ''ஐயமேற்பட்டால் தான் தெளிவுக்கு இடமுண்டு'' என்பது அறிஞர் ஒப்ப முடிந்த கொள்கை,

மேலும் அண்மையில் இலங்கை தெல்லிப் பழையில் நிகழ்ந்த சமாசப் பவழ விழாவில் பேச்சுக்கென்று அழைத்த அறிஞர்கள் சிலர் கடவுச் சீட்டு காலத்தில் கிடைக்காமையாலும் மற்றும் உடல் நலக் குறைவு முதலிய காரணங்களாலும் வர இயலவில்லை. அவர்கள் பேச வேண்டிய இடங்களில் வேறு தக்க அறிஞர்களுக்குப் பேச வாய்ப்பு கொடுக்கப் பட்டது. இருப்பினும் திரு. செட்டியார் அவர்கள் அவற்றிற்கு முடிவுரை கூறுமுகத்தான் இலங்கை வாழ் மக்கள் இன்புறும் வகையில் பேசிய ஆற்றல் கூற இயலாதது. பவழவிழாச் சிறப்பாக நிகழ்ந்தது என்றால் அதற்கு திரு செட்டியார் அவர்கள் தலைமை உரையும் மற்றைய அவர் பேச்சுகளுமே தலை சிறந்த காரணம் என்று கூறலாம். எல்லோரும் ஒரு சேரச் செட்டியாரைப் புகழ்ந்ததை நான் காது குளிரக் கேட்டு இலங்கையில் இன்புற்றேன்.

இவ்வாறு திரு செட்டியார் அவர்கள் பெருமை பற்றிக் கூறிக் கொண்டே செல்லலாம். காலமும் இடமும் வாய்ப்பளிக்கவில்லை. ஆதலின் மணிவிழாத் தம்பதிகளை வாழ்த்தி இக் கட்டுரையை முடித்துக் கொள்கின்றேன்.

●

கடவுள் நிலை

கடவுள் எல்லாமாக நிற்க முடியும். ஆனால் எல்லாம் கடவுளாக நிற்க முடியாது. (God is all but all are not God) வீடுபேற்று நிலையிலும் உயிர், சிவமாக நிற்கவில்லை; உயிரைச் சிவமாக்கி இறைவன் நிற்கிறான்.

நல்வினையும் தீவினையும்

சாத்துவிக குண எழுச்சியோடு எந்த வினையைச் செய்தாலும் அது நல்வினையே யாகும். இராசத குணத்தாலோ, தமோ குணத்தாலோ தூண்டப் பெற்றுச் செய்யும் வினைகள் தீவினைகளாகும்.

—மணிவிழாச் செல்வர்

கோதை தமிழ்

—டாக்டர் இரா. தண்டாயுதம், மலாயாப் பல்கலைக் கழகம்—

வைணவத்தின் வளர்ப்புத்தாய் என்றும், 'இராமாயணம் என்னும் பக்திவெள்ளம் குடிகொண்ட கோயில்' என்றும், 'பெரும்புதூர் வள்ளல்' என்றும் வைணவ குலத்தினரால் கொண்டாடப்படுபவர் இராமானுஜர். தம்மளவில் அவர் ஒரு மடாதிபதியாக இருந்தாலும், தாம் மேற்கொண்ட துறவு நெறிக்கு ஏற்பப் பிட்சை எடுத்தேஅவர் உண்ணுவார். அவ்வாறு பிட்சைக்குப் போகும்போது திருப்பாவைப் பாசுரங்களை மனங்கனிந்து பாடிப் போவது வழக்கம்.

ஒருநாள்.

அன்றும் வழக்கம்போல் திருப்பாவைப் பாசுரங்களைப் பாடிக்கொண்டே வீடு வீடாகச் சென்று கொண்டிருந்தார் இராமானுஜர்.

''உந்துமத களிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே, நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்;
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்: மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்''

என்று தமக்குப் பிடித்த பாசுரத்தைப் பாடிக் கொண்டே பெரிய நம்பியின் வீட்டை நெருங்கினார். தொடர்ந்து,

''பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளை யொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோர் எம்பாவாய்''

என்று அவர் பாடி முடிக்கவும் கதவு திறக்கவும் சரியாக இருந்தது. அதுவரை இடைகழியில் பந்து விளையாடிக் கொண்டிருந்த பெரிய நம்பியின் திருமகள் அத்துழாய் வாசலில் நின்றாள். தம்மை மறந்திருந்த இராமானுஜம் என்னும் பக்திப் பெருவெள்ளம் பாசுரத்தில் கண்ட நப்பின்னைப் பிராட்டியையே அங்குக் கண்டது. மெய்சிலிர்த்து அவள் அடிகளில் விழுந்தது. அத்துழாயோ அதிர்ந்து கலங்கிப் போனாள். உடனே உள்ளே ஓடிச்சென்று தந்தையாரிடம் நடந்ததைச் சொன்னாள். கையில் பந்துடன் மகள் கூறியதைக் கேட்ட அளவிலே, நடந்தது என்ன என்பதையும், வந்திருப்பவர் யார் என்பதையும் புரிந்துகொண்ட பெரியநம்பி அமைதியாகச் சிரித்தபடி வெளியே வந்தார். ''திருப்பாவை ஜீயரே! நப்பின்னையைத் துயிலெழுப்ப வந்தீரோ?' என்று கேட்டார். இராமானுஜரும் தம் நிலைக்கு மீண்டார்.

வைணவ சித்தாந்தத்தை உலகறியவைத்த இராமானுஜரின் உள்ளத்தை இந்த அளவிற்கு ஈர்த்து, அவருக்குத் திருப்பாவை ஜீயர் என்ற சிறப்புத் திருப்பெயரையும் பெற்றுத் தந்த திருப்பாவை எனும் பக்திப் பேராற்றைத் தமிழ் நிலத்தில் பாய வைத்தவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய ஆண்டாள்.

'பல்லாண்டு பாடிய பட்டர்பிரான்' என்று வைணவ உலகம் ஏற்றிப் போற்றும் பெரியாழ்வாரின் திருமகளே ஆண்டாள் ஆவார். வடபெருங்கோயிலுடையானுக்குப் பூத்தொண்டு புரிவதற்காக ஆழ்வார் ஒரு பெரிய நந்தவனம் அமைத்திருந்தார். அந்நந்தவனத்தில் நெருங்கி வளர்ந்திருந்த துளசிச் செடிகளுக்கிடையே ஒரு நாள் ஆழ்வார் ஒரு குழந்தையைக் கண்டெடுத்தார். திருமால் திருவருளால் கிடைத்த அந்தக் குழந்தைக்குக் கோதை என்று பெயரிட்டார். அந்தக் கோதையே பின்னர் வைணவ உலகம் கொண்டாடும் ஆண்டாள் ஆனார்.

ஆண்டாளைப் பூமிதேவியின் அம்சம் என்று வைணவர்கள் கருதுகிறார்கள். இதனை விளக்கும் ஒரு கதையும் அவர்களிடையே வழங்கி வருகிறது.

ஒரு சமயம் பூமிதேவி திருமாலை நோக்கி ஒரு கேள்வி கேட்டார். ''நாதா, எப்படிப் பட்டவர்களிடம் தாங்கள் சிறப்பான அன்பு கொள்வீர்கள்?'' என்பதே அக்கேள்வி. ''நம்

மிடம் உண்மையான அன்புகொண்டு பணி செய்யும் அடியார்கள் எல்லாம் நமது அன்பிற்கு உரியவர்களே! எனினும் அன்புப் பெருக்கினுல் பூமாலைகளோடு பாமாலைகளும் சூட்டி மகிழும் அன்பர்களிடம் நமக்குத் தனிப்பட்ட அன்பு உண்டு'' என்று திருமால் அதற்குப் பதில் கூறினுர். பூமிதேவி யோசித்தார். தாமும் ஒரு மானிடப் பெண்ணுகப் பிறந்து பூமாலைகளும் பாமாலைகளும் சூட்டித் திருமால் பணிசெய்ய முடிவு செய்தார். யாருக்கு, எங்கே புதல்வி யாகப் பிறப்பது என ஒரு கணம் சிந்தித்தார் திருமாலின் பெயர் கேட்ட அளவிலே தம்மை யும் உலகையும் சூழலையும் மறந்து, அன்பின் வடிவமாகவே உருகி நிற்கின்ற பெரியாழ் வாரின் மகளாகப் பிறப்பதைவிட வேறு சிறப்பு என்ன இருக்க முடியும்? பெரியாழ் வாரின் திருமகளாகவே அவதாரம் செய்தார். கோதை என்ற பெயர் பெற்று, தாம் எண்ணிய படியே பணிசெய்து , திருமாலுடன் கலந்தார் என்று இக்கதை கூறுகிறது.

இக்கதையை விளக்கப்படுத்தும் முறையிலே தான் கோதையின் வாழ்வும் அமைந்துள்ளது.

கோதை இளமையிலிருந்தே தம் தந்தை யாரைப் பார்த்துத் திருமாலிடம் மாருத அன்பு கொண்டார். விடியற் காலையிலே தந்தையாருடன் நந்தவனம் சென்று பூப்பறிப் பதிலிருந்து எல்லாத் திருத்தொண்டுகளிலும் அவர் முழு மனத்துடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வீடுபாடு நாளடைவில் காதலாகவே கனிந்து விட்டது. இப்பக்திப் பெருங்காதலின் தாபத்திலே வடபெருங் கோயிலுடையானுக்குத் தந்தையார் தொடுத் திருந்த மாலைகளை எல்லாம் தாம் சூடிக் கொண்டு, 'கண்ணனுக்குத் தான் ஏற்றவள் தானே?' என்று உருகிக் கொண்டிருந்தார் கோதை. ஒரு நாள் பட்டர்பிரான் இக்காட்சி யைக் கண்டார். உள்ளம் நடுங்கியது. என்ன செய்வது என அறியாமல் திகைத்தார். கோதை தம் திருமேனியில் சூடி அழகு பார்த்த அம்மாலைகளை இறைவனுக்குச் சூட்ட அவர் மனம் இடம் தரவில்லை. மறுபடியும் நந்தவனம் சென்று, பூக்கொய்து, மாலை தொடுத்து இறைவனுக்குச் சாத்தினுர். எனினும் முன் பிருந்த தெய்வீக அழகு அம்மாலைகளுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

அன்றிரவு இறைவனே அவருடைய கனவில் 'கோதை சூடிக் கொடுத்த மாலைகளே தாம் உகக்கும் மாலைகள்' என்று அருளவும் ஆழ்வார் உண்மை யுணர்ந்தார். ,எம்பெரு மானுக்குச் சூடிக் கொடுத்து, என்னை இவள் ஆண்டாள்' என்று கோதையைப் புகழ்ந்தார் அதுமுதல் ஆண்டாள் என்பதே கோதையின் திருப்பெயராயிற்று. 'சூடிக்கொடுத்த சுடர்க் கொடி' என்பதும் அவரைக் குறிக்கும் திருப் பெயராகவே மாறியது.

இந்நிகழ்ச்சிக்குப் பின் ஆண்டாள் தம்மைக் கண்ணனின் காதலியாகவே கொண்டு அந்த ஒப்பற்ற அன்பு உலகிலேயே வாழ்ந்து வந்தார். உரிய பருவம் எய்தித் திருமணப் பேச்சு வந்த போதும் மானிடர்க்கு வாழ்க்கைப்பட அவர் ஒப்பவில்லை. 'தேவர்களுக்கு மறையவர் வேள்வி யில் கொடுத்த அவியை, ஒரு காட்டு நரி கடந்தும் மோந்தும் பார்த்தும் கெடுப்பது போல'த்தான் மானிடர்க்கு வாழ்க்கைப்படு வதும்' என்று அவர் கருதினுர். அப்படி ஒரு நிலை ஏற்படுமாயின் உயிர்வாழ்வதில்லை என்றும் முடிவு செய்து கொண்டார். இம்முடிவினை மன்மதனை நோக்கிப் பாடும் ஒரு பாடலில் ஆண்டாள் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக் கின்ருர்:

''வானிடை வாழும்அவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தஅவி,
கானிடைத் திரிவதோ நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப,
ஊனிடை ஆழிசங்கு உத்தமற்கென்று
உன்னித் தெழுந்தஎன் தடமுலைகள்
மானிடர்க் கென்று பேச்சுப் படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே!''

இவ்வுறுதிப் பாட்டோடு வாழ்ந்து, சூடிக் கொடுத்து, பாமாலைகள் சூட்டி மகிழ்ந்து கண்ணனோடு கலந்தார் ஆண்டாள். திரு

பாவை, நாச்சியார் திருமொழி ஆகியஇரண்டும் ஆண்டாள் கண்ணனுக்குச் சூட்டிய பாமாலை கள். இவை திவ்யப் பிரபந்தத்தில் இன்றும் மணம் வீசிக்கொண்டுள்ளன.

ஆண்டாள் தம்முடைய பாசுரங்களில் தம்மைக் கோபிகையருள் ஒருவராகப் பாவித்தே பாடியுள்ளார். இப்பாவனையே ஆண்டாள் பாசுரங்களுக்குத் தெய்வ மணத் தைச் சேர்க்கிறது. பல வகைப்பட்ட இறை பக்தியுள் நாயக—நாயகி பாவம் என்பதும் ஒன்று. இறைவனை நாயகனுக்கித் தம்மை நாயகியாக்கி அந்நிலையில் அவனை அனுப விப்பதை இப்பாவனையின் உயிர்நிலை என லாம். ஞானநிலையில் முதிர்ந்த ஆழ்வார் களும் நாயன்மார்களும் இப்பாவனையில் ஈடு பட்டு அனுபவித்துச் சிறந்தவர்களே! சென்ற நூற்றுண்டின் ஞான விளக்காகத் தோன்றிய இராமகிருஷ்ண பரமஹம்சரும் மதுரபாவனை யாகிய இப்பாவனையில் வழிபடுவதற்காகத் தம்மை ஒரு பெண்ணுகவே பாவித்துக் கொண் டார். பாவித்துக் கொண்டதோடு நில்லாது, பெண்மையின் இயல்புகளை யெல்லாம் பெறு வதற்காகச் சேலை தரித்துக்கொண்டு பெண்க ளின் கூட்டத்திலேயே பழகியும் வந்தார். இவ் வியல்புகள்கைவந்த பிறகு தம்மை ராதையா கவே பாவித்துக் கண்ணனை வழிபட்டு அனுப வித்தார். அவ்வாறு அனுபவித்தபோது, ராதை யினிடம் காணப்பட்ட பிரேம பக்தியின் பத் தொன்பது இலட்சணங்களும் இவரிடமும் காணப்பட்டதாகக் கூறுவர். இவர்களெல்லாம் ஆண்களாக இருந்து கொண்டு பாவனையில் பெண்களாகி நாயக—நாயகி பாவத்தில் வழி பட்டவர்கள். ஆனுல் ஆண்டாளோ இயல்பிலே பெண்ணுக இருந்ததால் இப்பாவனை எளிதில் கைவந்தது. பள்ளத்தை நோக்கி நீர் பாய்வது போல, ஆண்டாளின் பக்திப் பெருங்காதல் இதனுல்தான் இயல்பாக இப்பாவனையில் பாய்கி றது. ''புருஷன் புருஷனைக் கண்டு ஸ்நேகிப்பதி லுங்காட்டில் ஸ்த்ரீ புருஷனைக் கண்டு ஸ்நே கிக்கை பள்ளமடையாகையாலே, ஆழ்வார் களிற் காட்டில் எம்பெருமான் பக்கல் பரமபக்தி யுடையளான ஆண்டாள்'' என்று பெரிய வாச்சான் பிள்ளை இதனைச் சிறப்பாகக் குறிப் பிடுவார்.

தம்மைக் கண்ணனின் காதலியாகப் பாவித்துக் கொள்வதில் மட்டுமல்லாமல், தம்மைக் கோபியருள் ஒருவராகப் பாவித்துப் பாடியதிலும் ஆண்டாள் தலைசிறந்து நிற்கிருர். இளமையிலிருந்து பார்க்கின்ற எல்லாவற்றிலும் கண்ணனையே பார்த்து, கேட்கின்ற எல்லா வற்றிலும் அவன் குழல் ஒலியே கேட்டு, நுகர் கின்ற எல்லாவற்றிலும் அவன் தெய்வ மணத்தையே நுகர்ந்து அனுபவித்த ஆண் டாளின் உள்ளும் புறமும் கண்ணனே நிறைந் திருந்தான் இந்த நிறைவு முதிர முதிரக் கண்ணனின் அவதார காலத்தில் தான் பிறக்க வில்லையே என்ற ஏக்கம் அதிகமாயிற்று. ஆய்ப் பாடியில் அவன் வளர்ந்த சூழலும், மாடு மேய்த்த காட்சியும், கல் மழைக்கு எடுத்த குன்றும், விளையாடித் திளைத்த யமுனை ஆற்றங் கரையும் அவள் கண்களிலேயே நின்றன. இவ்வுணர்வு மிகமிக ஆண்டாள் தம்மை மறந்தார்; தம்முடைய நாமம் மறந்தார். தாமே ஆய்ப்பாடிப் பெண்களுள் ஒருவராக மாறிவிட்டார். அவ்வளவில் அவர் வாழ்ந்த ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஆயர்பாடியாகி விட்டது. அங்குள்ள பெண்களெல்லாம் ஆயர்களின் பெண்களாகி விட்டனர். வடபெருங்கோயில் நந்தகோபரின் திருமனை ஆகிவிட்டது. அத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாள் கண்ணனுகி விட்டான். இப்பாவனை முதிர்ச்சியிலேயே திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும்மலர்ந்தன. பாவனை முதிர்ச்சியின் இலக்கணமாகத் திகழும் இப்பக்திப் பின்னணி யின் நுட்பங்களை நன்கு உணர்ந்து தெளியும் போதே, இவ்விரு பக்திப்பனுவல்களையும் நன்கு அனுபவிக்க முடியும்.

திருப்பாவை

முற்காலத்தில் கன்னிப்பெண்கள் நாடு செழித்து வளம் பெறவும், தாங்கள் நல்ல கணவரை அடையவும் மார்கழி மாதம் நடத்திய நோன்பிற்குப் பாவைநோன்பு என்று பெயர். மார்கழி மாதத்தில் இந்நோன்பு

நோற்கப்பட்டதால் மார்கழி நோன்பு என்றும் இந்நோன்பு குறிக்கப்படும். இப்பாவை நோன்பை அடிப்படையாகக் கொண்டு ஆண்டாள் பாடிய பாசுரங்களே திருப்பாவை எனப் பெயர் பெற்றுள்ளன. கண்ணபெருமானிடம் கொண்ட அளவற்ற ஈடுபாட்டினால், ஆண்டாள் கோகுலத்திற்கே குடிபெயர்ந்து, பாவை நோன்பு நோற்ற ஆயர் பெண்களுடன் தாமும் ஓர் ஆயர்மகளாகக் கலந்து இந்நோன்பை அவர் நோற்கிறார். யமுனையில் நீராடுவதற்காகக் கிழக்கு வெளுக்கு முன்பே எழுந்திருந்து, தங்கள் தோழிகளையும் எழுப்பிக் கன்னிப் பெண்கள் நீராடி நோன்பு நோற்கும் காட்சிகள் ஆண்டாளின் பாவனா முதிர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாய் விளங்குகின்றன. இந்நோன்பு நோற்பது குறித்த சில முக்கியமான செய்திகளும், நோன்பு நோற்பவர் நிகழ்த்த வேண்டிய கிரியைகளும், நோன்பினால் நாட்டுக்கு விளையும் பயன்களும், நோன்பு முடிந்தபின் பெண்கள் பெறும் பரிசுகளும் இப்பாவைப் பாடல்களில் விளக்கமாகக் குறிக்கப்படுகின்றன.

திருப்பாவையின் முதற்பாடலே பாவை நோன்பு நோற்கும் மாதம், நாள் இவற்றைக் குறித்துத் தொடங்குகிறது. கன்னிப் பெண்கள் வீடுவீடாகச் சென்று உறங்கிக் கொண்டிருக்கும் தம் தோழியரை எல்லாம் எழுப்புகிறார்கள். அவ்வாறு எழுப்புவதில்தான் எல்வளவு கேலி, அன்பு, உரிமை!'' ''ஆயர்பாடிச் செல்வச் சிறுமிகளே! இம்மார்கழித் திங்களின் மதி நிறைந்த நன்னாள் கண்ணபெருமானின் அருள் பெறுவதற்குத் தகுந்த காலமாக அமைந்துள்ளது. அவனைப் பணிந்து வேண்டினால் நம்முடைய நோன்பிற்கு வேண்டிய அனைத்தையும் அவன் தருவான். நீராட விருப்பமுடையவர்கள் எல்லாம் வாருங்கள்'' என்று பரிவோடு எல்லோரையும் அவர்கள் அழைக்கிறார்கள்.

''மார்கழித் திங்கள்
மதிநிறைந்த நன்னாளால்;
நீராடப் போதுவீர்!
போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச்
செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன்
நந்தகோ பன்குமரன்,
ஏரார்ந்த கண்ணி
யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண்
கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே
நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப்
படிந்தேலோர் எம்பாவாய்''

என்பது அவ்வழகிய பாடல்.

ஒவ்வொருவீடாகச் சென்றுகண்ணனுடைய இணையற்ற வீர விளையாட்டுக்களைக் கூறி அவர்கள் எழுப்பும் அழகே அழகு! ஒரு வீட்டிலே சென்று, சுற்றிலும் அகில் மணம் கமழ, மென்மையான, படுக்கையிலே துயில் கொண்டிருக்கும் ஒருத்தியை 'மாமன் மகளே!' என்று முறை கொண்டாடி எழுப்புகின்றார்கள். அவ்வாறு எழுப்பியும் அப்பெண் எழாததால் அவர்கள் கோபம் கொள்கிறார்கள். அவளுடைய தாயைப் பார்த்து ''உம்முடைய மகள் ஊமையா? செவிடா! அல்லது மந்திரத்தினால் கட்டுப்பட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறாளா? இறைவனுடைய திருநாமங்களை நாங்கள் பலவாறு சொல்லிக் கொண்டிருக்கிறோம். இனியாவது அப்பெண்ணை எழுப்ப மாட்டீரா?'' என்று கேட்கிறார்கள். இக்காட்சியை,

''தூமணி மாடத்துச்
சுற்றும் விளக்கெரிய,
தூபம் கமழத்
துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே!
மணிக்கதவம் தாள்திறவாய்!
மாமீர்! அவளை
எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச்
செவிடோ? அனந்தலோ?
ஏமப்பெருந்துயில்
மந்திரப் பட்டாளோ?

'மாமாயன், மாதவன்,
    வைகுந்தன்' என்றென்று
நாமம் பலவும்
    நவின்றேலோர் எம்பாவாய்''

என்ற பாடல் அப்படியே கண்முன் நிறுத்தி விடுகிறது.

நோன்பு நோற்கின்ற பெண்கள் மேற் கொள்ள வேண்டிய நியமங்கள் சில உண்டு. நோன்பு நாட்களிலே சிலவற்றைச் செய்ய வேண்டும், சிலவற்றை விலக்க வேண்டும். பரமன் அடி பாடி, காலை நீராடி, தானத்தை யும் பிச்சையையும் இயன்ற வரை செய்தல் இக்காலங்களில் பின்பற்ற வேண்டியவை. நெய் பால் ஆகியவை உண்ணுமல், மையாலும் மலராலும் அலங்கரித்துக் கொள்ளாமல், பெரியோர் விலக்கியவற்றைச் செய்யாமல், கோள் சொல்லாமல் இந்நோன்புக் காலங்களில், இருப்பதும் இன்றியமையாதது. திருப்பாவைப் பாடல் ஒன்று இந்நியமங்களை முறையாக எடுத்தோதுகின்றது-

''வையத்து வாழ்வீர்காள்!
    நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள்
    கேளீரோ? பாற்கடலுள்
பையத் துயின்ற
    பரமன் அடி பாடி,
நெய்யுண்ணேம்; பாலுண்ணேம்;
    நாட்காலே நீராடி,
மையிட்டு எழுதோம்;
    மலரிட்டு நாம்முடியோம்;
செய்யாதன செய்யோம்;
    தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும்
    ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி
    உகந்தேலோர் எம்பாவாய்''

என்பது அப்பாடல்-

ஆய்ப்பெண்கள் இவ்வாறு பாடிக் கொண்டே நந்தகோபர் திருமாளிகையின் முன் வந்து விடுகின்றனர். இன்னும் கதவுகள் திறக்கப்படவில்லை. ''நந்தகோபரின் அரண்மனை காப்பவனே! மணிக்கதவின் தாளைத் திறப்பா யாக! ஆயர் சிறுமியராகிய எங்களுக்குப் பறை தருவதாக நேற்றே கண்ணன் வாக்களித்திருக் கின்றுன். அவன் துயில் எழப் பள்ளியெழுச்சி பாடுவதற்காக வந்திருக்கின்றோம். முதன் முதலில் நீ அதை மறுத்து விடாதே! கதவைத் திறப்பாயாக!'' என்று முதலில் வாயில்காப் போனிடம் முறையிடுகின்றனர்.

''நாயகனுய் நின்ற
    நந்தகோ பனுடைய
கோயில்காப் போனே!
    கொடிதோன்றும் தோரண
வாயில்காப் போனே!
    மணிக்கதவம் தாள்திறவாய்;
ஆயர் சிறுமிய
    ரோமுக்கு அறைபறை
மாயன்மணி வண்ணன்
    நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம்,
    துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம்
    மாற்ருதே அம்மாநீ
நேய நிலைக்கதவம்
    நீக்கேலோர் எம்பாவாய்!''

என்ற முறையீட்டைக் கேட்டு வாயிற்காப் போன் கதவைத் திறக்கிருன். உள்ளே நுழைந்த ஆய்ச்சிறுமியர் நந்தகோபன், யசோதை கண்ணன், பலராமன் ஆகியவர்களைத் துயில் எழுப்புகின்றனர்.

''அம்பரமே, தண்ணீரே,
    சோறே, அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ
    பாலா! எழுந்திராய்!
கொம்பனுர்க் கெல்லாம்
    கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி!
    யசோதாய்! அறிவுறுய்!
அம்பரம் ஊடறுத்து
    ஓங்கி உலகளந்த
உம்பர் கோமானே!
    உறங்காது எழுந்திராய்!

செம்பொற் கழலடிச்
செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும்
உறங்கேலோர் எம்பாவாய்!

என்று பலபடியாக அவர்களைப் போற்றி ஆய்ச் சிறுமிகள் துயில் எழுப்புகின்றனர். இல்லறத்திலே ஆழ்ந்திருந்த மற்றை ஆழ்வார்களைக் கண்ணன் தானெழுப்பித் தன்னை அவர்களுக்குக் காட்ட, இங்கோ ஆண்டாள் கண்ணனை எழுப்பித் தன் குறையை அறிவிக்கிருள். இந்த நுட்பத்தை, ''ஸம்ஸாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள்; இவள் தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். ஆகையாலே அவர்களிலும் இவள் விலக்ஷணை'' என்று பெரியவாச்சான் பிள்ளை விளக்குகிருர். துயிலெழுந்த கண்ணனிடம் தங்கள் விருப்பத்தை எல்லாம் ஆய்ப்பெண்கள் முறையிடுகின்றனர். ஏழேழ் பிறவியிலும் அவனேடு உறவு கொள்ளவும், அவனுக்கு மட்டுமே பணிபுரியவும் வரம் கேட்கின்றனர். இதுவே அவனைப் பலவாறு போற்றிப் பாடுவதன் பயன் என்றும் அவ்வாய்ச்சியர் தெளிவுபடுத்துகின்றனர்.

''சிற்றஞ் சிறுகாலே
வந்துன்னைச் சேவித்துஉன்
பொற்ருமரை யடியே
போற்றும் பொருள்கேளாய்!
பெற்றம் மேய்த்துண்ணும்
குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக்
கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான்;
அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ்
பிறவிக்கும் உன்தன்னேடு
உற்ருேரே ஆவோம்;
உனக்கேநாம் ஆட்செய்வோம்:
மற்றைநம் காமங்கள்
மாற்றேலோர் எம்பாவாய்''

என்ற இப்பாசுரம் திருப்பாவையின் உயர் நிலையையே சுட்டிக்காட்டி விடுகிறது. கண்ணன் பிறந்து வளர்ந்த கோகுலத்திற்கே சென்று பாவை நோன்பு நோற்கும் ஆண்டாள், இப் பாசுரங்களைப் பக்தியோடு ஓதுபவர்களையும் தம் முடன் அவ்வவதார காலத்திற்குக் கூட்டிச் சென்று விடுகிருர். இன்னும் எவ்வளவு கால மானுல்தான் என்ன? திருப்பாவை என்ற புணை இருக்கும் வரை காலவெள்ளத்தை நீந்திக் கோகுலத்தில் பாவை நோன்பு நோற்றுக் கொண்டே இருக்கலாம்.

நாச்சியார் திருமொழி

ஆய்ப்பாடிச் சிறுமியருள் ஒருவராகக் கோகுலத்தில் பாவை நோன்பு நோற்ற திருப் பாவைச் செல்வி, கண்ணனின் காதலியாகிக் கனிந்து நிற்பதை நாச்சியார் திருமொழிப் பாசுரங்கள் காட்டுகின்றன. கணந்தோறும் கண்ணனிடம் கொண்ட பக்தி காதல் பெருகப் பெருகப் பிரிவாற்ருமையால் ஆண்டாள் துடிக் கிருர். அப்பக்திக் துடிப்புக்களையெல்லாம் நாச்சியார் திருமொழிப் பாசுரங்கள் எழிலார்ந்த பக்திவோவியங்களாக்கிக் காட்டுகின்றன.

கண்ணனைப் பிரிந்ததனுல் வருந்தும் ஆண்டாள், பிரிந்தாரைச் சேர்த்து வைப்பவன் காமன் என்பதனுல், அவன் காலிலாவது விழுந்து தம்மைத் திருவேங்கடவனிடம் சேர்ப் பிக்கும்படி வேண்டுகிருர். ''காமதேவனே தைமாதம் முழுவதும் நீ எழுந்தருள வேண்டிய இடத்தை மண்டலபூசைக்காகச் சோதித்து குளிர்ந்த மண்டலாகாரத்தை இட்டு, மாசி முன் நாள் அழகிய சிறிய மணல்களினுல் நீ எழுந்தருளும் தெருக்களை அலங்கரித்து உன்னையும் உன் தம்பியான சாமனையும் வணங்கி நின் றேன். என்னைத் திருவேங்கடமுடையானிடம் நீ சேர்ப்பிக்க வேண்டும்'' என்று ஆண்டாள் காமனிடம் வேண்டுகிருர்.

''தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண்டல மிட்டு மாசிமுன்னுள்
ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து
அழகினுக்கு அலங்கரித்து அனங்கதேவா

உய்யவும் ஆம்கொலோ என்று சொல்லி
உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக்கை
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே''

என்று ஆண்டாளின் வேண்டுதலைக் காட்டும் இப்பாசுரம் ஒரு காதலியின் உள்ளத்துணர்வு களைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது,

பெரியாழ்வாரின் திருப்புதல்வியாகப் பிறந்த ஆண்டாள் இவ்வாறு காமன் காலிலே விழலாமா? கலங்கலாமா?' என்ற ஐயம் எழுவது இயற்கையே! இதற்கு, ''ஸாத்விகர் தலைவரான பெரியாழ்வாருடைய திருமகளாய்ப் பிறந்த இவள் மறந்தும் புறந்தொழா திருக்கவேண்டி யிருக்க, ஸ்வரூப விருத்தமாக தேவதாந் தரத்தின் காலில் விழுகையென்பது பொருந்து மோ? எனின்; பொருந்தும்; எங்ஙனேயென்னில் ''காமதேவா!...உன்னையு மும்பியையுந் தொழு தேன்'' ''பேசுவதொன்றுண் டிங்கெம்பெரு மான்'' என்று காமன் பக்கலில் தேவதா புத்தி பண்ணி அவனை ஆராதித்தல்-ப்ராப்யவஸ்து வில் ப்ராவண்யாதிசயத்தினால் உண்டாகின்ற தேயன்றி, தேவதாந்தரத்தினிடத்துஸ்வதந்திர மாகப் பரத்வபுத்தி பண்ணுவதனாலன்று;ப்ரேம பரவசர்க்கு இது அவத்யத்தை விளைவிக்கக் கூடியதன்று. ஆனால் இது கலக்கத்தினால் செய்யுஞ் செயலன்றோ? அஜ்ஞாந மூலமாக வருபவையொன்றும் ஆதரிக்கத் தக்கதன்றே யெனில்: ''ஞானங் கனிந்த நலம்'' என்கிற படியே ஞானபரிபாகரூபமான பக்தியின் காரிய மாக ஸம்பவிக்கின்ற ப்ராப்த விவேக சூந்யதை யினால் வரும் ப்ரவ்ருத்தி விசேஷங்களெல்லாம் மிகவும் புகழத் தக்கனவேயாம்; கரும மடியான அஜ்ஞானத்தினால் வருமவையே ஹேயம் என்று கொள்ளக் கடவது'' என்று உரையாசிரியர் காட்டும் நுட்பம் உணர்ந்து அனுபவித்தற் குரியது.

காமனைப் பணிந்து பலனேதும் ஏற்படாமல் போகவே ஆண்டாள் குயிலை வேண்டுகிறார்:

''புன்னையும் குருக்கத்தியும் கோங்கும் சுர புன்னையும் நிறைந்த சோலையிலே வாழும் குயிலே! கண்ணனாகிய எப்பெருமானை விரும்பிய அளவிலே என் கைவளைகள் கழன்றன. இதற்கு நான் என்ன செய்வேன் என்று கேட்கின்றாயா? என் பவளவாயன் என்னை வந்து சேரும்படி இரவும் பகலும் அவன் திருநாமங்களை நீ கூவிக் கொண்டிருக்க வேண்டும்''

''மன்னு பெரும்புகழ் மாதவன்
மாமணிவண்ணன் மணிமுடி மைந்தன்
தன்னை உகந்தது காரணமாக என்
சங்கிழக்கும் வழக்குண்டே
புன்னை குருக்கத்தி நாழல் செருந்திப்
பொதும்பினில் வாழும் குயிலே!
பன்னி எப்போதும் இருந்து விரைந்துஎன்
பவள வாயன் வரக்கூவாய்!

என்பது இவ்வேண்டுகோளை உள்ளடக்கிய பாசுரம். இவ்வாறே சோலையிலுள்ள மலர்களை யெல்லாம் பார்த்துப் பக்தி பெருங்காதலால் ஆண்டாள் உருகிப் பாடும் பாசுரங்கள் நெஞ் சைக் கவரும் சக்தியுடையவை.

ஆண்டாள் இவ்வாறு உள்ளமுருகிக் கண்ணனிடம் வேண்ட, கண்ணனும் பெருங் கருணையோடு அவர் கனவிலே வந்து கைப்பிடிக் கிறான். இத்தெய்வ அனுபவத்தைத் தோழிக்குக் கூறுவதாக அமைந்த பாசுரங்கள் சுவை மிகுந்தவை.

''வாரணம் ஆயிரம் சூழவலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன்
தோழிநான்''

என்று தொடங்கிக் கனவில் கண்ட திருமணக் காட்சிகளையெல்லாம் நனவிலே காண்பது போல ஆண்டாள் சொல்லிப் போகிறார். 'கனவிலே இத்தகைய அரிய காட்சி நல்கிய கண்ணன், நனவிலே வந்து ஏன் மணந்திருக்கக் கூடாது?' என்று கேள்வியை எழுப்பிக் கொண்டு அதற்கு, ''இவளுடைய ஆசையை இன்னும் பெருக்க வேணுமென்று எம்பெருமானுடைய கருத்தாத லால் அதற்காக அவனும் விரைவாக வந்து

முகங்காட்டா தொழிந்தான். இவளுக்கு நாம் அடியோடு முகங்காட்டாவிடில் இவள் தரித்திருக்க மாட்டாளென்று கருதிய கண்ணபிரான் கனவிலேயாவது இவட்கு நாம் காட்சி தந்து ஒருவாறு தரிக்கும்படி செய்தல் நன்று என்று துணிந்து விவாஹோத்ஸவத்தின் ஸந்நாஹஸமயம் முதலாகப் பாணிக்ரஹண பர்யந்தமான வ்ருத்தாந்தங்களைக் கனவிலே அநுபவிப்பிக்க'' வைத்ததாக உரையாசிரியர் காட்டும் நுட்பம் மிகமிகச் சுவையானது.

கனவுலகிலிருந்து நனவுலகிற்கு வந்த ஆண்டாளின் தாபம் மீண்டும் பெருகியது. கனவே ஒரு வகையில் அந்தத் தாபத்தைப் பெருக்கியும் விட்டதெனலாம். அந்தத் தாபப் பெருக்கத்தில், தலைவனுடைய திருக்கையை விட்டு ஒரு கணமும் நீங்கப் பெருத பேற்றையுடைய சங்கினிடமே சிறிது பொருமையுண்டாகிறது. ஏனெனில் சங்கு தானே அவனுடைய அதரச் சுவையை நன்குணர்ந்தது?

''கருப்பூரம் நாறுமோ
கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன்
வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல் ஆழி வெண்சங்கே!''

என்று தொடங்கி ஆண்டாள் பாடும் பாசுரங்கள் ஆணடாளின் பக்தித் தாபத்தை நன்குணர்த்தி, ஆண்டாளின் பாவனுசக்திக்கே ஒரு சிகரமாய் அமைந்து விடுகின்றன. இன்னும், சிற்றில் சிதைக்க வேண்டாம் என்று கண்ணனிடம் வேண்டுவதும், குருந்த மரத்தின் மேல் நிற்கும் கண்ணனிடம் ஆயர் பெண்கள் உடைகளையும் அணிகளையும் திருப்பித் தரும்படி வேண்டுவதும், ஓதுவார்களைக் கோகுலத்திற்கே கொண்டு சென்று விடுகின்றன. 'கண்ணன் அவதார காலத்தில் நாம் பிறக்காவிட்டால் என்ன? ஆண்டாளின் பாசுரங்கள் இருக்கும் வரையில் அக்குறைக்கே இடமில்லை. வேண்டும் போது அப்பாசுரங்களை ஓதிக் கண்ணன் அவதார காலத்திற்கும் இடத்திற்கும் போய் வரலாம்' என்று உணர்ந்து அனுபவிக்கும் வகையில் இப்பாசுரங்கள் அமைந்துள்ளன. தன் அவதார காலத்தில் பிறக்கும் பேறில்லாத மக்கள் கூட்டம் மறுபடியும்அவ்வவதார காலத்தில்வாழ்ந்து அனுபவிக்கத்திருவுள்ளம் கொண்டு கண்ணனே ஆண்டாள் மூலம் இப்பாசுரங்களை அருளினுனே என்றும் எண்ணத் தோன்றுகிறது.

பக்தி கலந்த பாவனுசக்தி ஆண்டாளின் பாசுரங்களிலே இத்தகையதொரு முதிர்ச்சி பெற்றிருப்பதால்தான் வைணவப் பெரியார்கள் அனைவரும் இப்பாசுரங்களைக் கேட்ட அளவில் உருகித் தம்மை மறந்து விடுகின்றனர். கூரேசனின் திருக்குமாரரான பட்டர் வாழ்க்கையில் பல நூற்ருண்டுகளுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சி இதனை மெய்ப்பிக்கின்றது. இவர் ஒரு முறை திருவரங்கனைப் பிரிய நேர்ந்த துன்பத்தால் கலங்கியிருந்தார். இவருடைய உள்ளத்தை எப்படியும் அக்கலக்கத்திலிருந்து மீட்க வேண்டும் என்று கருதிய இவருடைய சீடர் நஞ்சீயர், ஆண்டாளைப் பற்றி ஒரு சுலோகமும், ஆழ்வார்களைப் பற்றி மற்ருெரு சுலோகமும் இயற்றியருளக் கேட்டுக் கொண்டார். அதைக் கேட்ட அளவிலே, 'நீளாதுங்க' என்று தொடங்கும் ஒரு தனியனை அருளிச்செய்து ஆண்டாளைச் சரணடைந்து பட்டர் ஆறுதல் பெற்ருர். வைணவப் பெரியார்கள் வாழ்வில் இத்தகைய நிகழ்ச்சிகள் எத்தனையோ நடந்துள்ளன. அதனுல்தான் பாவைப் பாசுரங்களை அறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு என்று ஒருவர் துணிந்து அருளிச் செய்தார்.

''பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்
—கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு''

★

அறுபதாண்டு கண்ட அறிஞர் எங்கள்
சித்தாந்த வித்தகர் ஐயா இரத்தினம் செட்டியார்
வாழி வாழியே! வையை மணலின் நீடுவாழியே!

★

நியூ பேலஸ் லாட்ஜ்

போர்டிங் & லாட்ஜிங்

புதுக்கோட்டை—622 001.

போன்: 2726

குளிர்சாதன வசதிகொண்ட உணவு அறை
குளியலறை இணைந்த தங்கும் அறைகள்
தெவிட்டாத ஒண்சுவை உணவு வகைகள்
அனைத்திற்கும் மேலாக,

கனிவு இனிமை சேவை

உரிமையாளர்
M. பெருமாள்
போன் : 2859 (இல்லம்)

Saiva Siddhantha-The Philosophy of the golden mean

C.N. Singaravelu M.A.

G. K. Chesterton once said that a cranky man is one who has lost all sense except logic. A perfectly logical proposition may not be a reasonable proposition. A man with robust commensense takes into account all aspects and does not take any extreme position on any Theoretical or logical grounds. The affairs of the world are not strictly consistent or logical and hence the teachings in Kural are full of 'contradictions' due to different situations. It is said that truth lies in the golden mean.

Saiva Siddhantha and Saivism in genral are pragrmatic and practical. They avoid the extremes and take the middle path which as we have already said is the correct and true path. The purpose of this paper is to show how Saivism and Saiva Siddhanta take the path of the golden mean which is the attitude of sweet reasonableness.

Saiva religion avoids the emotional exuberance of some of the Northern Indian Vaishnava cults and also the arid intellectualism of the Vedanta. It is a synthesis of religion and metaphysics. The Saiva religion holds in equal reverence the devotional songs contained in the twelve Thirumurais and the fourteen Saiva Siddhanta Sastras. Thus, the Siddhanti pays equal attention to the feeling as well as the thinking aspect of man. Nor are these two aspects kept in water tight compartments. There is much of philosophy in the Tamil devotional songs and there is an undercurrent of bhakti and devotion in the Siddhanta philosophic thoughts. The traditional way in which the Thevarams and Thiruvacagam are sung with the cymbals gently kissing each other will show how gentle and subtle and at the same time deep and abiding the effects they produce.

Sankara's Advaita Philosophy holds that God alone exists and that all else is mirage or delusion. The materialist holds that matter alone exists. Saiva Siddhantist holds the middle position. He does not dismiss the world around him as mere 'maya' or delusion. Actually he uses the word 'maya' in a different sense. According to him, 'maya' is the substratum of the world around him. It is **that** from which the world has arisen and into which the world will return after dissolution. It is real and eternal and is in the form of energy. The Saiva also posits that the soul exists as a separate entity, which accords with Descarte's '**Cogito ergo sum**,. According to Saiva Siddhanta. Therefore there are three separate entities, namely God, soul and matter.

In this trinity Soul takes the middle position. The nature of the soul according to Saiva Siddhanta is the highlight in this philosophy and it holds the key to soul's salvation. The fundamental quality of the Soul is that it identifies itself with whatever it is attached to or associated with. All suffering is due to the fact that the soul identifies itself with the body and its surroundings. In the state of Mukti the Soul loses itself and identifies itself with God and thereby attains bliss. On account

of this middle position the Soul is called **Satasat** (it) it is both **sat** and **asat**.

This leads to the question how to realize God? St. Meykantar presents the problem in the form of a Conundrum. God is neither knowable nor unknowable. If He is knowable, He becomes like any other object of the senses or of the human understanding and all such objects are perishable, and if He is unknowable, He is as good as non-existent. Meykantar solves the problem by saying that He is unknowable through **Pasa Gnana** and **Pasu Gnana**, but knowable through **Pati Gnana**. Pasa Gnana and Pasu Gnana are the knowledge obtained through the instrumentality of matter and Soul. These availath not to experience God which experience can come only through His grace. His grace is **Pati Gnana**.

Siddhanta strikes the middle cource even in the definition of God. Is God Nirguna, formless and devoid of qualities and attributes or is the Saguna? According to Saiva Siddhanta he is both. He is **Sat-Chit**. **Sat** denotes God as Pure Being in which aspect we can never reach Him. **Chit** denotes **arul** or love in which aspect we can reach Him. **Sat** is the Sun which we can never see but for the light rays or **Chit** which proceed from it.

Saiva Siddhanta makes no distinction between a higher and a lower Brahman or between Brahman and Iswara. God is the Trancendental Absolute and at the same time He is the God of love who is intimately present to man.

The hormonising aspect of Saiva Siddhanta is most apparent in its treatment of Pasa or world or Maya. The world and God do not stand in the relationship of darkness and light. They can be compared only to a small light and the effulgent Sun. God unites Maya with the Soul which was in **Kevala** state in order that the soul might experience the world and evolve itself to a higher stage of development. Thus, Maya is indispensable at one stage of the Soul's pilgrimage to God, though at a higher stage prior to union with God it has to be discarded.

The hormonising attitude of Siddhanta can be seen in the relationship between God and Soul in the born state. He is atonce one with the Soul, separate from the Soul and active with the Soul. The relationship is best explained by the following three analogies:—

i) God is connected with the Soul in the same way as the Soul is connected with the body. This shows the identity of God with the Soul. உடல் உயிர்போல் அபேதம் (ஒன்ருதல்).

ii) Perception by the eye is one and indivisible act. Yet the perception is caused by two agencies, namely, the eye and Sun or light. The eye cannot see without the aid of the light and though both of the light of the eye and the light of Sun combine together and become indistinguishable, Sun and the eye are different, Even so, God and soul are two distinct entities. கண் அருக்கன்போல் பேதம் (வேருதல்).

iii) In the act of perception by the eye, the eye organ alone cannot see the object. It should be quickened by the Soul. The soul not only makes the eye see the object but sees it itself through the eye. Even so,

acts along with the Soul for the benefit of the Soul. கண்ணொளி ஆன்ம போதம்போல் பேதாபேதம் (உடனாதல்).

Even at the stage of the ultimate merging of Soul with God, Saiva Siddhanta takes the position of the Golden mean. In Muki, the Soul enjoys the bliss of God.

In Mukti the soul does not completely merge with God to the extent of losing its identity. If it loses its identity who enjoys whom? Nor does it keep seperate. If it keeps separate, no enjoyment is possible In Mukti the soul loses its anava, and self-knowledge or **tatbodham** without losing its identity. This relationship of neither being one, nor being two is called **Advaita.**

Thus, Saiva Siddhanta avoids all extreme and untenable positions and is a great reconciler of conflicting ideologies.

"Religions and postulates and text books are various, and conflict one with the other. It is asked which is the true religion, which the true postulate, and which the true book. That is the true Religion, Postulate and Book, which not conflicting with this or that, comprises reasonably everything within its own folds. Hence all these are comprised by the Vedas and Saivagamas. And these two latter are imbedded in the sacred Feet of Hara".

Sivagnana Siddhiyar VIII-13

இறைவனின் உதவி

உயிர்களும் உலகும் தன் நிறைவுள் இடம் பெறுவதற் பொருட்டு **ஒன்றாகியும்**, அவற்றை இயக்குவித்தற் பொருட்டு **வேறாகியும்** அவை இயங்குதற்பொருட்டு **உடனாகியும்** இறைவன் நிற்கிறான்.

உயிர் ஆணா பெண்ணா?

உயிரில் ஆண், பெண் வேற்றுமை இல்லை. உடலில் தான் அவ் வேற்றுமை உண்டு, நுண்ணுடலில் கூடப் பால் வேற்றுமை இல்லை; உயிர் தேவ உடம்போடோ பேய் உடம்போடோ, பருஉடம்போடோ சேர்ந்திருக்கும் போதே பால் வேற்றுமை ஏற்படுகிறது.

மணி விழா காணும் மலேசியத் தமிழறிஞர்
திரு. முரு. பழ. ரெத்தினம் செட்டியார் அவர்கள்
மேலும் பல விழாக்காண வாழ்த்துகிறோம்.

★

ELECTRO-PLASTIC COMBINATION

★